www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

லீசிங்
காப்புறுதி வசதிகள்
வாடகை உரித்து
கழிவு பற்றுச் சீட்டு (பில்):
ஃபினான்ஸ் வர்த்தகம்
செயற்பாட்டு வரி
வீடு, சொத்து கடன்

வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்
தலைமை அலுவலகம்
84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000
நகர அலுவலகம்
270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555
காட்சியறை
254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235
கிளை அலுவலகம்
அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை
செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்


10814

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அமுது

# அமுதக் கடலில்...


அமுத வாசல் . . . . . . . . . . . . . . . 2
மொறு மொறு சிப்ஸ் . . . . . . . . . 4
பச்சோந்திகள் . . . . . . . . . . . . . 5
**நெற்றிக்கண்** . . . . . . . . . . . . . . . 6
**வாசலைத் தாண்டிய கடிதங்கள்** . . . 7
**பேட்டிகள்** . . . . . . . . . . . . . . . . . 8
பிணங்களுட் கிடந்து மீண்டேன் . . . . 12
பணி செய்யும் தோழன் . . . . . . . . 18
**கவிதை:**
தொடக்கம், மணமகள் தேவை . . . 20
**சிறுகதை:**
இதுவும் சங்கமம். . . . . . . . . . . . 21
நாயகர் . . . . . . . . . . . . . . . . . . . 22
**கவிதை:**
நீங்கள் தூவிய மலர்கள் . . . . . . . 25
**சிறுகதை:**
இப்படியும் ஒரு.... . . . . . . . . . . . . 26
தமிழ் . . . . . . . . . . . . . . . . . . . . 29
புறாவே புறாவே... . . . . . . . . . . . . 30
திருகுதாளம் . . . . . . . . . . . . . . . 33
புகைப்படக் கண்காட்சி . . . . . . . . . 36
விஷயமுள்ள வட்மோர் . . . . . . . . . 38
**குங்ஃபூ:**
சினிமா குங்ஃபூ . . . . . . . . . . . . . 40
**சினிமா:**
ராமரானாலும் பாபரானாலும் . . . . . . 42
**நோயபற்ற:**
ஆண்மைக் குறைபாடு . . . . . . . . . . 47
நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . . 48


**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.**


**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.**
**தொலைபேசி: 454283, 421181-Ext347**
**ஃபக்ஸ்: 320677**
E-Mail: webmgr@sri.lanka.net





12



தோழன்

18



புகைப்படக் கண்காட்சி

36




38

விஷயமுள்ள வட்மோர்



42

ராமரானாலும் பாபரானாலும்

www.tamilarangam.net






# அமுதென்ற கப்பலில் ஆயிரமாயிரம் வாசகர்களை சுமந்து கொண்டு....

அமுது மார்ச் இதழ் விரிந்தது அமுத ஊற்றாக இனித்தது. நல்லதோர் வீணை செய்தே... நயம்பட உரைத்தது. நெற்றிக் கண் அம்சம் மனதை நெகிழ வைத்தது. நம்பிக்(கை) கொடுக்குமா நோர்வே அல்லது நடுத்தெருவில் விடுமா? 'யுத்தத்தைத் தின்போம்' கவிதை ஆளுமையைத் தூண்டியது. கமலின் ராஜபார்வை முதல் ஹேராம் வரை கனதியான கட்டுரையாக மிளிர்ந்தது. மொத்தத்தில் அமுதுக்கு நிகர் அமுதே என்று சொன்னது.

**நாக. மகேந்திரலிங்கம், யாழ். சங்கானை.**

அமுதென்ற கப்பலில் ஆயிரமாயிரம் வாசகர்களை சுமந்து கொண்டு உலகம் முழுவதும் சுற்றுலா சென்று கண்ணுக்குத் தெரியாத புதுமைகளை கண் முன் காட்டும் அமுதின் மாலுமிகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**தர்மலிங்கம் சந்திரகுமார், கொழும்பு-11.**

நெற்றிக்கண் பகுதியை வாசித்தபோது அதிர்ச்சியாக இருந்தது. நம்பிக்கை கொடுக்குமா நோர்வே? என்ற கட்டுரையில், இன்று நடக்கப் போகும் பேச்சுவார்த்தையின் முக்கியத்தினையும் தட்டிக்கழிக்க முற்படும் பட்சத்தில் நடக்கும் விபரீதத்தினையும் நன்கு உணர்த்தியிருந்தார். அமுது முன்பக்கத்தில் சினிமாவுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நாட்டில் நடக்கும் சம்பவங்களின் புகைப்படங்களைப் பிரசுரித்தால் சிறப்பாக இருக்கும்.

**மகேஸ்வரி ராமதாஸ், வத்தேகம.**

இம்மாத அமுதில் வெளிவந்த 'யுத்தத்தைத் தின்போம்' என்ற சக்கரவர்த்தியின் கவிதை நன்றாக இருந்தது. என்னையும் சற்று ஆழ்சுபலுக்கு இழுத்துச் சென்றது. இது போன்ற நல்ல கவிதைகள் அமுதில் பிரசுரமாவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன். அரசியல் அரங்கம் நன்றாக விரிந்து செல்வதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. இன்னுமொரு விடயம், சிறுவர்களுக்கான பக்கம் காணப்படவில்லை. மருத்துவ விடயங்களும் குறைந்து செல்கின்றன. இவர்களுக்கும் அமுதுவில் சற்று இடம் கொடுக்கவும்.

**திருமதி ரி. சோமா, யாழ்ப்பாணம்.**

அமுதில் ஆபாசப் படங்கள் என்று கூவுகிறவர்கள் ஏனைய இந்திய சஞ்சிகைகளை எப்படி வீட்டில் வைத்துப் படிக்கிறார்கள்? இவர்களின் போலித்தனம் எப்போ மாறும்?

**எம். சுவர்ணராஜன், ஹற்றன்.**

அமுது புதிய பொலிவுடன் புத்தம் புது மலராக வெளிவந்து எம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விட்டது. அடுத் தடுத்த மாதங்களில் குறிப்பிட்ட நாளில் கால தாமதமாகாமல் கிடைக்கச் செய்ய வேண்டும். மேலும் பெரும்பாலான ஊர்களில் அமுது கிடைப்பதில்லை. வரிசையில் கட்டியிருந்த கல்லறைகளும் குவித்து வைக்கப்பட்டிருந்த மண்டையோடுகளும் மனதினை என்னவோ செய்தன. போதைப் பொருள் பழக்கமானது பெரியவர்களை மட்டுமல்ல சிறுவர்களைக் கூட பெரும் தொற்று வியாதியாக பிடித்து ஆட்டும் அபாயத்தை 'ஹெரோய்ன் விபரீதம்' விரிவாக விளக்கியது.

**பாலா சங்குப்பிள்ளை, அட்டன்.**

மார்ச் மாத அமுது சிறப்பான அம்சங்களை அடக்கியவாறு, அழகாய் இருந்தது. ஆசிரியர் கருத்திலிருந்து அம்பையின் கதை வரை ஆழம் இருந்தது.
சக்கரவர்த்தியின் கவிதை, இரு சிறுகதைகள், பேட்டி, கட்டுரைகள், கதை சொல்லும் சிலைகளும், அதன் கீழ் வரும் கவிதைகளும்...
திரு(ந்)த்திய வடிவில் அமுது வரவிருப்பதையிட்டு மேலதிக... சந்தோஷம். வாழ்த்துக்கள். ஒரு ஆக்கபூர்வமாக வாசகர் குழுவை




அமுது வளர்த்தெடுக்க வேண்டும் என்பதே என் அவா.

**அனார், சாய்ந்தமருது.**

தங்கள் சஞ்சிகை பல சிறப்பான அம்சங்களை வெளியிடுகிறது. பாராட்டுக்கள். சில குறைகளையும் சுட்டிக்காட்டலாம் என நினைக்கிறேன். அதாவது ஆலோசனைகளாக. அமுதின் உள்ளடக்கத்தில் தொழில் நுட்பம், பொழுதுபோக்கு, பொருளாதார, வாணிப விடயங்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். சர்வதேச விவகாரங்களும் இணைக்கப்பட வேண்டும்.

**இ. குமரன், யாழ்ப்பாணம்.**

சென்ற இதழ்களில் விடுதலைப் புலிகளினால் பல்வேறு பிரதேச மக்கள் படும் இன்னல்கள் வாசலைத் தாண்டிய கடிதங்கள் மூலம் மனக்குமுறல்களாக வெளிப் படுத்தப்பட்டிருந்தன. விடுதலைப் புலிகளால் மிகவும் கசக்கிப் பிழி யப்படும் மன்னார் நகர வாசிகள் படும் அவஸ்தைகளை அவர்கள் வெளியே சொல்ல முடியாத ஒரு இக்கட்டான நிலையிலேயே உள்ளனர்.

மன்னார் வியாபாரிகளை பொறுத்தவரையில் வருடந்தோறும் அல்லது வருடத்துக்கு இரு முறையாவது ரூபா 15 இலட்சம் வரை (ஆகக் குறைந்தது) கப்பப்பணமாக செலுத்தியாக வேண்டும். இல்லாவிடின், இறுதி வரை தமிழீழத்துக்காகப் போராடும் வெறியர்களால் (யாருக்காகப் போராடுகிறார்களோ?) கடத்திச் செல்லப்பட்டு கடும் தண்டனைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

அண்மையில் இவ்வாறு இரு வியாபாரிகள் துன்புறுத்தப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமல்லாமல் புலிகளது தீவிர ஆதரவாளர்ளெனக் கூறிக்கொள்ளும் சமூக விரோதிகளுக்கும் அவர்களால் (புலிகளால்) ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதை வைத்து இத்தேசபக்தர்கள் சாதாரண மக்களை மிரட்டி பணத்தைப் பெற்றுத் தலைமறைவாகி விடுகின்றனர்.
இதனை தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என கூறிக்கொள்பவர்கள் கண்டுகொள்வதில்லை. ஆனால் இவ்வாறான நிகழ்வுகளை தட்டிக்கேட்டால் அவர்கள் தமிழ்த் துரோகிகள் என பெயர் சூட்டப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.
இதற்கு விடிவு கிடைக்குமா?
மனக்குமுறல்களுடன்,

**சித்ரகுப்தன், மன்னார்.**

எமது சமூகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக எல்லோரும் சோர்ந்துவிட்ட பின்னரும் தொடர்ந்து உறுதியாகப் போராடிவரும் விடுதலைப் புலிகள் உங்கள் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். எதுவுமே செய்யாது வெட்டிப் பேச்சுப் பேசுபவர்களுக்கு இடம் கொடுத்து அமுதே உன் பொன்னான ஏடுகளைப் பாழாக்க வேண்டாம்.

**என். தாஸ், வவுனியா.**

விஞ்ஞானக் கட்டுரைகள் கடந்த இதழில் இடம்பெறக் கண்டு, அமுதக் கடலில் இது வரை இருந்த ஒரு துளி குறையும் நீங்கியதாக மகிழ்ந்தேன். தொடருங்கள்.

**வி. விஜயலட்சுமி, கொழும்பு.**

**FIRE** படத்தில் சேர்ந்து நடித்து பலரையும் கலக்கிய சபானா ஆஸ்மியும் நந்திதா தாஸும் இப்போது **WATER** என்னும் படத்தில் நடிக்கிறார்கள் இது அவர்களுக்கான அட்டைப் படம்



இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

எதிர்பாருங்கள்!

திருத்திய
வடிவில்
புதிய
பொலிவுடன்
விரைவில்
உங்கள்
கரங்களில்...

பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

விளம்பர முகாமையாளர்:
வருண மல்லவஆராச்சி
தயாரிப்பு முகாமையாளர்:
அடய அமரதாஸ
அச்சமைப்பு முகாமையாளர்:
ந. சற்குணநாதன்
விற்பனை முகாமையாளர்:
அனுர அபேரத்ன

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒ:ப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

# நல்லதோர் வீணை செய்தே...



கருத்து!
அது மனிதனின் செயற்பாட்டுக்கான வழிகாட்டி. அவனது நெறிமுறைகளை வகுக்கும் அடிப்படை. தகுந்தது தகாததென அடையாளம் காட்டும் வெளிச்சம். ஏனையோருடனும் சமூகத்துடனுமான உறவுக்கான ஊடகம்.
அது தனிமனிதனுக்கு மட்டுமல்ல சமூகத்துக்கும் வியாபிக்கவல்லது. "கருத்து மக்களைப் பற்றிக்கெண்டால் சக்தியாக உருவெடுக்கும்" என்றார் கார்ல் மார்க்ஸ்.
ஒடுக்கப்பட்ட மனித குலம் புரட்சிகர கருத்துகளைப் பற்றிக் கொண்டதால் உலகெங்கும் நடந்த புரட்சிகளே கார்ல் மாக்ஸின் கருத்தை நிரூபித்தன.
கருத்தானது இயக்கமற்றதல்ல. அது வளர்வது. மாறுவது. அது அக ரீதியானதும் புற ரீதியானதுமான தாக்கங்களாலும் புதிய புதிய பரிமாணங்களுக்கு இட்டுச் செல்லப்படுவது.
கருத்தை யாரும் திணிக்கவும் முடியாது. தடைவிதிக்கவும் முடியாது. தனது கருத்தையன்றி மற்றவை யாவும் கருத்தல்லவென நிராகரிக்கவும் முடியாது.
எவரும் சொந்தக் கருத்தைக் கொண்டிருக்க உரிமை உண்டு. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல அதிகாரமற்றவர்களுக்கும் கருத்து உண்டு.
பலமுள்ளவர்களுக்கு மட்டுமல்ல பலமற்றவர்களுக்கும் கருத்து உண்டு. பெரும்பாண்மையினருக்கு மட்டுமல்ல சிறுபான்மையினருக்கும் கருத்து உண்டு. கட்சிகளுக்கோ, இயக்கங்களுக்கோ, ஸ்தாபனங்களுக்கோ, குழுக்களுக்கோ மட்டுமன்றி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கருத்து உண்டு.
ஒரு முரண்பாட்டில் மோதும் இரு தரப்பினருக்கும் மட்டுமே கருத்து இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இம் மோதலுக்கு அப்பாலிருக்கும் பொதுமக்களிடத்தேயும், ஒன்றல்ல, பல்வேறு கருத்துகள் இருக்க உரித்துண்டு.
மற்றவற்றிற்கு எவ்விதத்திலும் கீழ்ப்படாத தகுதி அதற்குமுண்டு. ஆனால் பல சந்தர்ப்பங்களில் அதிகாரமுள்ள, பலமுள்ள கருத்துகள் மற்றைய கருத்துகளை நசுக்கிவிட முனைகின்றன.
பொதுமக்களுக்கு கருத்தே இல்லாது ஆக்கிவிட முனைகின்றன. எதிரும் புதிருமான இரு அதிகார சக்திகளில் ஏதோ ஒன்றின் பக்கம்தான் மக்களின் கருத்தானது சாய்ந்திருக்க வேண்டுமென்ற ஒரு எழுதப்படாத விதியை அவை திணிக்கின்றன.
நாம் எமக்கான கருத்தைக் கொண்டிருப்பதற்குள்ள உரிமையைக் காத்துகொள்வதுதான் இன்றைய வரலாற்றுத் தேவை.

ஆ-ர்.



www.tamilarangam.net



# மொறு மொறு சிப்ஸ்



கதிரையொன்றில் அமர்ந்து உங்களால் அதன் இரண்டு காலில் நிற்க முடியுமா? நிச்சயம் உங்கள் காலின் உதவியும் தேவைப்படவே செய்யும். ஆனால் இந் தப்படத்தில் இருக்கும் ஹென்றி என்ப வர் பலலாயிரம் அடி உயரத்தில் ஒரு கதிரைக்கு மேல் இரண்டு தண்ணீர் கிளாஸ்களை வைத்து அதன் மேல் கதிரையின் இரன்டு கால்களையும் வைத்து அதில் உட்கார்ந்தபடியே சம நிலையில் இருக்கக்கூடியவர்.

கன்யோன், அமெரிக்கா, மொஸ்கோ போன்ற நாடுகளிலும் இன்னும் பல வேறு நாடுகளிலும் இந்த வித்தையைச் செய்து காட்டி யிருக்கிறார் ஹென்றி. இங்கே 3,842 மீற்றர் (12,604 அடி) உயரத்தில் அதுவும் கீழே விழுந்தால் பிரான்ஸின் மீஸ் நதி... அவ்வளவு பயங்கரமான இடத்தில் இருந்து கொண்டு இந்த வித்தையைச் செய்து காட்டினார். எங்கே முடிந்தால் நீங்களும் முயலுங்கள்.





ஹிரோசிமாவில் வீசப்பட்ட அணு குண்டுகளின் தாக்கம் இன்னும் அம் மக்கள் வாழ்வில் அழியா வடுக்களாகவே இருந்து வருகி ன்றன. இங்கே ஹிரோசிமாவில் அணுகுண்டு வீசப்பட்ட 54வது ஆண்டை நினைவுகூ ரும் வகையில் குண்டு வீச்சில் தப்பியோரும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் ஒன்று திரண்டு வந்து அணு குண்டுத் தாக்குதல் நினைவாகக் கட்டப் பட்ட தூபியின் முன் பழைய நினைவுகளை மீட்டு சமாதானத்துக் காக பிரார்த்திப்பதை யே காண்கிறீர்கள்.



உலகின் அதி வயது கூடிய மனிதராக் கூறப்படும் எகிப் தில் வாழ்ந்துவரும் இந்த முதியவரின் பெயர் **அம் அட்வா மவுஸ்ஸா**. அவ ரைக் குளிப்பாட்டும் அவ ரது பேரப்பிள்ளையின் வயது 39. முதியவரின் வயது என்ன இருக்கும்? 150வயது என்கிறார் அவர். ஆனால் பாவம் அந்தக் காலத்தில் பிறப்புச் சான்றி தழ் இல்லாததால் அவரால் கின்னஸ் புத்தக சாதனையில் இடம் பிடிக்க முடியவில்லை. எனினும் அவரது கூற்றுக்கு மதிப்பளித்து கின்னஸ் நூலில் பிரசுரித்துள்ளார்கள்.

60 வருடங்களின் முன் அவர் முதலாவது திருமணம் செய் தாராம். அதன்பின் நான்கு திரு மணங்களைக் கண்டுவிட்டார். 1869ல் சுவிஸ் கால்வாயை வெட்டும் பணியிலி ருந்து தப்பிக்க தன் குடும்பத் துடன் நாடு கடந்ததை இன்றும் நினைவுபடுத்திக் கொள்கிறார் அவர். இதற்குமுன், அதிகூடிய காலம் வாழ்ந்தற்கான ஆதா ரங்களுடன் கின்னஸ் புத்தகத் தில் இடம் பெற்ற நபர் ஜீன் கல்மென்ட் என்னும் பிரான்ஸ் நாட்டுப் பெண்ணாவார். 122 வருடங்கள் 164 நாட்கள் வாழ்ந்த அவர் 1997ல் காலமானார்.



அமெரிக்காவில் அதி நீளமான நகங்களைக் கொண்டவர் ஃபிரான்ஸெஸ் றெட்மண்ட் எனும் இப் பெண்மணியே! 12 வருடங்களாக வளர்த்த இவரது ஒவ்வொரு நகத்தினதும் நீளம் 48 சென்ரி மீற்றர்.

இதே வேளை உலகின் அதி நீள நகம் கொண்டவர் சிறீதர் சில்லால் எனும் இந்தியர். 1977ல் அவரது இடது பெருவிரல் நகத்தின் நீளம் 1.4 மீற்றர், சுட்டுவிரல் நகம் 1.09 மீற்றர், நடுவிரல் நகம் 1.17 மீற்றர், மோதிர விரல் நகம் 1.25 மீற்றர், சின்ன விரல் நகம் 1.22 மீற்றர்.

www.tamilarangam.net






விலங்கு இராஜ்யத்தில் ஒன்றுக்கொன்று வேறுபட்ட பல விலங்கினங்கள் இருந்தாலும் தமது நிறத்தை நினைத்த நேரம் மாற்றிக் கொண்டு சில நேரங்களில் சாதுவாகவும், சில நேரங்களில் பயங்கரமான ரூபத்திலும் இருக்கும் விலங்குகளுள் விசேடமானவை பச்சோந்திகளே என விலங்கியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஆபிரிக்கா, மடகஸ்கார், கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசியாவின் சில நாடுகளில் காணப்படும் இந்தப் பச்சோந்திகள் நமது நாட்டிலும் வேலி ஓரங்களிலும் மரக்கொப்புகளிலும் தலைகாட்டி நிற்கின்றன. உலகில் 80 வகையான பச்சோந்திகள் இருக்கின்றன.

சிலருக்கு இந்தப் பச்சோந்திகளைப் பார்த்ததுமே ஒரு பீதி உண்டாகும். ஏனென்றால் டைனோசரையொத்த உருவம் அதற்கு இருப்பதால்தான் எமக்கு மட்டுமல்ல விஞ்ஞானிகளுக்கும் இந்த அச்சம் ஏற்பட்டுள்ளது.

காரணம், அண்மையில் அவுஸ்திரேலியாவின் காடொன்றிலிருந்து டைனோசரையொத்த பயங்கர பச்சோந்தியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல அமெரிக்காவின் போர்டன் (PORTON) காட்டில், கண்ணிலிருந்து இரத்தத்தைப் பீய்ச்சி ஏனைய விலங்குகளை வேட்டையாடும் ஒரு பச்சோந்தியையும், டைனோசரின் முகத்தையொத்த சிறிய பச்சோந்தியொன்றையும் கண்டுபிடித்ததிலிருந்து விஞ்ஞானிகளும் இதை ஆராயத் தொடங்கியுள்ளனர்.

இலங்கையிலும் மலைநாட்டுப் பகுதியில் கொம்புள்ள பச்சோந்திகள் கண்டறியப்பட்டுள்ளன.

பாம்பு, பல்லி, முதலை, உடும்பு போன்றவற்றுக்கும் ஏனைய ஊர்வனகளுக்கும் செய்ய முடியாத ஒரு காரியத்தை இந்தப் பச்சோந்திகள் செய்கின்றன. அதுதான் காலநிலைக்கேற்ப தமது நிறங்களை மாற்றிக் கொள்ளும் வசதி. இந்தப் பண்பு பச்சோந்திகளுக்கு இயற்கையிலேயே ஏற்பட்டிருப்பது தமது எதிரிகளிடமிருந்து தப்பிக் கொள்வதற்கும், வேட்டையாடுவதற்கும் பேருதவியாக அமைந்து விடுகிறது.

ஆனால் இந்த ஆள் மாறாட்டம் இரவில் செய்ய முடியாது. பச்சோந்திகள் தமது கால், வால், நாக்கு போன்ற உறுப்புக்களைப் பயன்படுத்தியே வேட்டையாடுகின்றன.

இதன் நீண்ட நாக்கால் சிறு பூச்சிகளை தூரத்திலிருந்தே பிடித்து உள்ளிழுத்து விடும்.

**அடுத்தவனை வீழ்த்திவிட்டோ அல்லது கெடுத்துவிட்டோ, தான் உயர்ந்துவிட வேண்டும் என்ற துடிப்பில் அடிக்கடி நிறம் மாற்றிக் கொள்பவன் மனிதன். குத்துவெட்டு, குழிபறிப்பு, கூழைக்கும்பிடு என்று வேடங்களிட்டு ஏமாற்றிப் பழகியிருப்பவன். பாவம், பச்சோந்திகளோ தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நிறம் மாறுபவை!**

இவை நீர் அருந்துவதும் நாக்கினால்தான். இவற்றின் நாக்கு ஒட்டும் தன்மை வாய்ந்தது.

பச்சோந்திகளின் தோல் செதில்களால் ஆனது. காது மிகக் கூர்மையாகக் கேட்கும். கண் பார்வையும் அதே போலத்தான். இரையைப் பிடிக்கு முன் மிக அவதானமாக அந்த இரையின் சத்தத்தைக் கேட்கும். இரண்டு தடவை கேட்டபின் மெதுவாகச் சென்று பாய்ந்து பிடித்துவிடும். அநேகமானவை சிறு பூச்சிகள், பிராணிகளையே பிடித்து உண்டாலும், சிலவகை பச்சோந்திகள் தாவர இலைகளையும் உண்ணுகின்றன.

இரவு வேளைகளில் கர்ப்பிணித்தாய் பிள்ளை பெறும் வேளையில் அனுங்கும் சத்தத்தைப் போன்று சில வகை பச்சோந்திகள் சத்தமிடுகிறதாம்.

இந்தப் பச்சோந்திகள், ஆண் கொடுமை தாங்காமல் இறந்த மனைவியரின் அவதாரம் என்று கூட சில கிராமத்தவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் பச்சோந்திகளுக்கு சத்தமெழுப்ப முடியாது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (அப்பாடா பயம் ஒழிந்தது...)

அது சரி, போபம் வந்தால் கண்ணினால் ரத்தத்தைப் பீய்ச்சும் பச்சோந்தி பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ரக பச்சோந்தியொன்றை ஹாவார்ட் பல்கலைக்கழக விஞ்ஞானி ஜோன் மிலேன்டர் பரிசோதனை செய்து பார்த்ததில், 6 அடி தூரத்திற்கு இவை இரத்தத்தைப் பாய்ச்சுகின்றன. என்று கூறியுள்ளார். ஒரு முறை இரத்தத்தைப் பாய்ச்சும்போது தனது உடம்பிலுள்ள மொத்த இரத்தத்தில் ஐந்தில் ஒரு பங்கைப் பீய்ச்சுகின்றனவாம். அப்படியிருந்தும் அதற்கு எந்தக் குறைபாடும் நேர்வதில்லை

இப்படியான பயங்கரப் பச்சோந்திகள் எமது நாட்டில் இல்லை. சில பச்சோந்திகள் முட்டையிடும். சில வகைப் பச்சோந்திகள் குட்டி ஈனும். சுமார் 4-5 வருடங்களே இவ்வுலகில் வாழும் காலம் கொண்ட இந்த பச்சோந்திகளுக்கும் கெட்ட காலம் பிறந்துவிட்டது. காடழிப்புகளினால் வாழ இடமின்றித் தவிப்பதோடு பாம்புகளும் இவற்றைப் பதம் பார்த்துவிடுவதால் அழிந்துவிடும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

ஓரிரண்டு பயங்கரமான இனங்கள் இந்தப் பச்சோந்திகளில் இருந்தாலும், பொதுவாக ஆபத்தற்ற இந்த டைனோசரை ஒத்த இனத்தை நம் பின்னைய சமுதாயத்திற்கு காட்டுவதற்கு முடியுமா? அதற்கு முன்னரே இது அழிந்து விடுமா?

**எச். எஸ். டீன்**

www.tamilarangam.net



# இனவாத தீவிரவாதம் + இடதுசாரித் தீவிரவாதம் = குழிபறிப்பு



நக்கீரன்

இலங்கை அரசியலில் தீவிரவாதம் என்பது தொடர்ச்சியாக ஒரு சாபக்கேடாகவே இருந்து வருகிறது. இது இந்நாட்டின் சமூக அரசியல் பிரச்சினைகளைத் தீரவிடாது மேலும் பல சிக்கல்களை உருவாக்கி அடிப்படைப் பிரச்சினையிலிருந்து சமூகத்தை வேறு எங்கோ ஒரு திசையை நோக்கி இழுத்துச்சென்று விடுகிறது.

தீவிரவாதம் என்றவுடன் நமது மனதுக்குள் வருவது ஆயுதமேந்திய ஒரு குழுவின் செயற்பாடு தான். ஆனால் அது நிச்சயமாக தீவிரவாதமாகத் தான் இருக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் ஒரு தீவிரவாதக் கருத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற குழுவிடமோ அவ்வியக்கத்திடமோ ஆயுதமும் இருந்து விட்டால் நிலைமை இன்னும் மோசமாகி விடுமென்பதில் ஐயமில்லை.

இலங்கை அரசியலில் இன்று கொழுந்துவிட்டு எரியும் இனப்பிரச்சினையின் அடிப்படையாக சிங்கள இனவாதமே பிரதான காரணமாக அமைந்தது என்பது உண்மை. ஆனால் அதற்கு முகம் கொடுக்கவென தமிழ்ச் சமூகம் எழுந்தபொழுது அதற்குள்ளும் உறங்கிக்கிடந்த தமிழ் இனவாத கருத்துகள் தூண்டி விடப்பட்டன. அது தமிழ்ச் சமூகத்தின் ஆயுதப் போராட்டத்திற்குள் நுழைந்து தமிழ்ச் சமூகத்திற்குள் ஏற்படுத்திவிட்டுள்ள அழிவுகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

சிங்கள இனவாத தீவிரவாதத்திற்கு எப்போதும் தனியாக ஒரு அமைப்பு இருக்க வேண்டுமென்ற தேவை இருக்கவில்லை. அதற்குக் காரணம் ஒரு சிங்கள தீவிரவாத அமைப்பு என்ன செய்யுமோ அவற்றை இந்நாட்டை ஆண்ட, சிங்கள மக்களை பெரும்பான்மையாக பிரதிநிதித்துவப்படுத்திய அரசுகளே செய்து வந்தன. 1948 ஆம் ஆண்டு முதல் ஆட்சிக் கதிரையைக் கைப்பற்றுவதற்காக அதி தீவிரமாக சிங்கள இனவாதத்தைப் பேசக்கூடிய சக்திகளை இந்த இரு கட்சிகளும் போற்றி வளர்த்தன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை எடுக்க இவ்வரசுகள் நேர்மையாகவோ நேர்மையின்றியோ வரலாற்றில் முனைந்தபோது, அவர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட இனவாத சக்திகள் அரசாங்க கட்சிகளுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்தவண்ணம் கூக்குரலிட்டு கோஷம் எழுப்பி அத்தீர்வு முயற்சிகளை குழப்பியடித்தன. எதிர்க்கட்சியிலிருந்தவர்கள் இவ்வினவாத சக்திகளோடு கை கோர்த்தவண்ணமே வீதிகளில் இறங்கினர்.

இவ்வினவாத தீவிரவாத சக்திகளோடு கை கோர்த்து வீதிகளில் இறங்கி கோஷமிடும் கலாசாரத்தில் நமது நாட்டு இடதுசாரிகளும் பின் நிற்கவில்லை. 60களில் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது இந்நாட்டின் பாரம்பரிய இடதுசாரிகளும் வீதிகளில் இறங்கி தோசை, மசால் வடை கோஷமிட்டு குறுகிய அரசியல் செய்ததை நாம் அறிவோம். இவ்விடதுசாரிகள் பாராளுமன்ற அரசியலுக்குள் என்று நுழைந்தார்களோ அன்று முதல் சிங்கள தீவிரவாதத்தை தட்டிக்கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனால் 1970 களில் ஆயுதமேந்திய அதி தீவிர இடதுசாரி அரசியல் பேசிய ஜனதா விமுக்தி பெரமுன (JVP) மூன்றாவது ஒரு சக்தியாக உருவெடுத்தபொழுது சமூகத்தில் பாரிய எதிர்பார்ப்பு இருந்தாலும் காலப்போக்கில் அவர்களும் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில், சிங்கள தீவிர இனவாதத்தை தட்டிக்கொடுக்கா விட்டாலும் தடவிக்கொடுத்து அரசியல் செய்ய கற்றுக்கொண்டு விட்டார்கள்.

1987 இல் மாகாண சபை எனும் தீர்வு முழு நாட்டையும் தீ வைத்துக் கொளுத்தி, அத்தீர்வை ஆதரித்ததற்காக விஜயகுமாரணதுங்க போன்ற சில அருமையான தலைவர்களைக் கூட சுட்டுக் கொல்வதற்கும் அவர்களின் தீவிரவாதம் சென்றது. இன்று மீண்டும் ஒரு தசாப்தத்தின் பின் ஜே. வி. பி. யின் அரசியலில் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் பாரிய மாற்றம் தெரியவில்லை. இத்தனை காலமும் நேர்மையின்றிச் செயற்பட்ட அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இம்முறையாவது நேர்மையாகப் பேசி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனக் கூறுவதை விடுத்து குறுகிய அரசியலைச் செய்வதே அவர்களின் செயற்பாடாக உள்ளது.

அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் தவிர்க்க முடியாமல் இன்று அதிதீவிர சிங்கள இனவாதத்தை ஆதரிக்க முடியாத நிலை இருக்கின்றது. இந்நிலையில்தான் இப்போது சிங்கள வீரவிதான (SVV) பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் போன்றவை இன்று தலைதூக்கியுள்ளன. இனவாதத்தை ஆதரிக்கும் மதகுருக்கள், இராணுவ அதிகாரிகள், ஏன்... அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிக்குள் உள்ள சில அரசியல்வாதிகளும் கூட இவ்வியக்கங்களுக்குப் பின்னால் இருக்கின்றார்கள் என்பது வெளிப்படை.

இவர்கள் தீர்வுக்கு எதிராகவும், பேச்சுவார்த்தைக்கு எதிராகவும் நிற்பது ஒன்றும் புதுமையல்ல. வரலாற்றில் இவர்கள் முற்றாக இல்லாமல் போகவும் மாட்டார்கள். ஆனால் புரட்சி, வர்க்க அரசியல், உழைக்கும் மக்களின் விடுதலை என இடதுசாரித்தனம் பேசிக்கொண்டு இன்றைய எரியும் பிரச்சினையைத் தீர்க்க விடாது குழிபறிப்பு வேலைகளைச் செய்யும் ஜே. வி. பி. போன்றவர்களே சமூகத்தில் மிக ஆபத்தானவர்கள். ஏனெனில், இவர்களுக்கு புரட்சிகர முகமூடியொன்றுண்டு. இது கிழிக்கப்பட வேண்டும்.

இன்று அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே நடக்கின்ற பேச்சுவார்த்தைகளை எப்படியாவது இடைநிறுத்தச் செய்து, தமிழ் மக்களையும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் வேறு எந்தவொரு வழியும் இல்லாத நிலைக்குத் தள்ளிவிடுவதே இவ்வினவாத சக்திகளின் நோக்கம். இதன் மூலம் நடக்கக்கூடியது ஒன்றே ஒன்றுதான். தமிழ்ச் சமூகத்திற்குள் ஏற்கனவே பலமாக வளர்ந்து விட்டிருக்கும் தமிழ்த் தீவிரவாதம் மேலும் பலம் பெறுவதுதான். அதைத்தான் தமிழ்த் தீவிரவாதத் தரப்பும் விரும்புகிறது.

புரட்சி பேசும் ஜே. வி. பி. யினரின் நோக்கமும் எதிர்பார்ப்பும் இதைவிட ஒன்றும் வித்தியாசமானதல்ல. ஆனால் தமிழ், சிங்கள இரு தீவிரவாதமும் அவ்வரசியலைச் செய்கின்ற போது சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் விடிவு இத் தீவிரவாத அரசியலுக்குள்தான் இருக்கிறது என ஓரளவு நேர்மையாக நம்புகிறார்கள்.

ஆனால் ஜே. வி. பி. யினர் போன்ற தீவிர இடதுசாரிகள் இவ்வினவாத அரசியலை பாவிப்பது தாம் எப்படியாவது, எந்த கேடுகெட்ட வழிமுறையைப் பாவித்தாவது எவ்வளவு மக்களின் பிணங்களின் மீது நடந்தாவது ஆட்சிக் கதிரையைப் பிடித்துவிட வேண்டும் என்ற கபட நோக்கத்திலேயாகும். எனவே இவர்களே சமூகத்தில் மிகமிக ஆபத்தானவர்கள்.

எனவே இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் இனவாத தீவிரவாதத்தை நாம் வெறுத்து எதிர்க்க வேண்டிய அதே நேரத்தில் இனவாதத்தைப் பாவிக்கும் இடதுசாரித்தனத்தைக் கண்டால் விஷப் பாம்பை அடிப்பது போல் அடிக்க வேண்டும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் திடீர் மறைவு புலம்பெயர்ந்த தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. அவர் கொழும்பிலிருந்து கொண்டு மனித உரிமைகளிற்காகவும், தமிழீழத்திற்காகவும் அண்மைக்காலமாக குரல் கொடுத்து வந்தார். அன்னாரது அரசியல் வரலாறு இன்னும் ஆழமானது.

வெளிநாடுகளில் 'கொழும்பு தமிழ் அமைப்புகள் அடிவருடிகள்' என்று அடைமொழி கொடுக்கும் குமார், அதே கட்சிகளை கூட்டாக இணைத்து (தேர்தலுக்கு மட்டும்?) போட்டியிட முனைந்த

**வாசலைத்**

போதும், மாற்றுக் கட்சிகள் அண்ணன் குமாரிடமே, நீங்கள்தான் பொருத்தமான வேட்பாளர் என்று வழமாக மாட்டிவிட, 'கூட்டணி சிவா'வை வேட்பாளராக போடுங்கள் என்று கூறிவிட்டு நழுவிவிட்டார்.

புலிகள் சம்மதம் தந்தால்தான் போட்டியிடுவேன் என்று இம்முறை ஜனாதிபதி தேர்தலை ஒதுங்கியிருந்து ஆசையில் ஒரு பார்வை பார்த்தார். அவரது அறிவில், புலிகளின் பார்வை யாரில் விழுந்தாலும் காரியமில்லை, தன்னில் விழக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். புலிகளின் அனுமதியின்றி, பிறர் தேர்தலில் நின்று ஆபத்துக்குள்ளாவது பற்றி அவர் அக்கறைப் பட்டவர் அல்ல.

இவரின் நோக்கம் மாறிப்போன போக்கைப், புலிகளும் அறியாமல் இல்லை. புலிகளின் சர்வதேச பேச்சாளர் ஆக ஆசை இருந்தபோதிலும், அது புலிகளால் இறுதிவரை அங்கீரிக்கப்படவும் இல்லை. எனினும், வெளிநாடுகளில் புலிகள் ஆதரவு மேடையில் தன்னை அடையாளப் படுத்தி அபிமானம் தேடவும் குமார் தயங்கவில்லை. தனக்கொரு கட்சி, தன்னோடு இருவர் என அரசியல் கட்சி நடத்தியவருக்கு மற்றைய கட்சிகளைப் போல எந்தவித நெருக்கடிகளும் இருக்கவில்லை. வெறும் அறிக்கை அரசியல்வாதியாக, தன் சேவைகளை பத்திரிகைகளை தேடி விளம்பரம் செய்து அவரும் கொழும்புக் கட்சியாக - தனி மனித பவனி வந்தார்.

கொழும்பில் மனித உரிமை மீறல்கள் என சிலருக்காக சட்டப் பிரதிநிதியாகவும் அவர் கடமையாற்றிய உண்மை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும். இருப்பினும் அண்மையில் நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டதை, இன்னொரு தமிழ் மகனின் ''கோர கொலை மரணம்'' என்ற மரியாதை கூட வழங்க மறுத்திருந்தார். தமிழ் மனித குண்டில் தமிழனை தமிழன் கொல்வது, மனித உரிமை மீறலாக அவர் கருதிக் கொண்டதில்லை. சிங்களப் படைகளால் மீறப்படும் மனித உரிமை மீறல்களைப் பற்றியே

**தாண்டிய**

அக்கறைப்படும் மனித உரிமைவாதியும், சட்டத்தரணியும் அவர். நீலனின் மரணத்தைக் கண்டிக்கின்ற துணிவை தமிழ் மக்கள் அவரிடம் எதிர்பார்க்கவில்லை.

தனது முடிவும் அதே போலத்தான் விரைவில் என்பதை அறியாது நடந்து கொண்ட குமாரின் மரணமும் நீலன் திருச்செல்வம் போல் பாதை ஓரத்தில் அரசியல் வன்முறைக்கே இறுதியில் பலியிடப்பட்டுவிட்டது.

* நீலனின் கொலையில் புலிகளின் குண்டுதாரியுடன் சேர்த்து இரண்டு தமிழர்களை தமிழ் உலகு இழந்தது.

* இன்று கொழும்பில் இருந்து, குறைந்தது கைது செய்யப்படுபவர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளை ஓரளவு செய்து வந்த குமாரும் தமிழ் உலகின் இழப்புத்தான்.

* வெளிநாடுகளில் வசதியாக வாழ்ந்துகொண்டு எமது உயிர், உடமை, பாட்டி, பாட்டன் எனப் பலரை இங்கு பத்திரமாக வைத்துக்கொண்டு, எம்மண்ணில் கொலைகளை ஆதரிப்பதில் அர்த்தமில்லை. தமிழ் மகனை கொலை செய்து, தமிழ் மங்கையரை விதவைகள் ஆக்குவதையோ அன்றி தமிழ் மழலைகளை தாய், தகப்பன் இன்றி அநாதைகளாக்குவதையோ நிராகரிப்போம். தமிழீழம் என்ற பெயரில் புலிகளால் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்கள் என்றாலும் சரிதான், சிங்கள வீரவிதான என்றாலும் சரி தமிழர் கொலைகளை யார் செய்தாலும் நிராகரிப்போம்.

நல்லூர் கந்தன் கருணையில் தமிழ்ப் போராளிகள் படுகொலை....
மனித உரிமைவாதி, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ராஜனி படுகொலை...
அமிர்தலிங்கம் படுகொலை...
புலிகளின் மாத்தையா படுகொலை...
அதிபர் ஆனந்தராஜா படுகொலை...
புலிகளின் வதைமுகாமில் எழுத்தாளர் செல்வி படுகொலை...
யாழ்.அரச அதிபர் பஞ்சலிங்கம் படுகொலை...

**கடிதம்**

ராஜீவ் காந்தியுடன் பச்சைக் குழந்தைகள் படுகொலை...
''மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்பத் தடையில்லை! புலிகளின் வதைமுகாமால் எத்தனைபேர் வீடு திரும்ப முடியவில்லை! (உயிருடன்)''

**- இலங்கை தமிழ் மனித உரிமைகள் அமைப்பு**




நான் தேவையற்ற கருத்துக்களைக் கூறி இவ் விடயத்தை குழப்புவதற்கு வழி செய்யப் போவதில்லை. அவர் கூறிய கருத்துக்கள் பற்றி நான் அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்கப் போவதில்லை.



## இரா. சம்பந்தன்

*கேள்வி:* நீங்கள் அரசாங்கத்துடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் எப்படியிருக்கிறது.

*பதில்:* நாங்கள் இன்று மட்டும் பேசவில்லை. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த காலம் தொடக்கம் இனப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் பேசிக் கொண்டுதான் வருகிறோம். தற்போது நிகழும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைத்தே பேசுகிறோம். அது நல்லவிதமாக அமைவதைக் குழப்பக்கூடிய எவ்வித கருத்தையும் நான் கூற விரும்பவில்லை.

*கேள்வி:* அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளையிட்டு என்ன கருதுகிறீர்கள்?

*பதில்:* அரசாங்கம் புலிகளுடன் பேசவேண்டுமென்பதைத் தான் நாம் எப்போதும் வலியுறுத்தி வருகிறோம். நாம் அத்தகைய பேச்சுவார்த்தைகளை வரவேற்கிறோம். புலிகளோடு பேசித்தான் இப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண முடியும்.

*கேள்வி:* நோர்வே அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளில் அனுசரணையாளராக செயற்பட முன்வந்ததுபற்றி....?

*பதில்:* மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவத்தை நாம் எப்போதும் வலியுறுத்தி வந்தவர்கள். இந்த நாட்டின் இனப்பிரச்சினை மூன்றாம் தரப்பு ஒன்றின் தலையீடில்லாமல் தீரப்போவதில்லை. இரு தரப்பினரையும் ஒரு இணக்கப்பாட்டை எய்த வலியுறுத்துவதற்கு மூன்றாம் தரப்பு ஒன்றினாலேயே முடியும்.

இந்தவகையில் இப்போது பேச்சுவார்த்தைக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ள நோர்வே அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை நாம் வரவேற்கிறோம். முன்னைய நோர்வே அரசாங்கம் மாறி இப்போது புதிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது. அவர்களும் இம்முயற்சியைத் தொடரப்போவதாக உறுதியளித்துள்ளார்கள். அதை நாம் நம்பிக்கையுடன் நோக்குகிறோம்.

*கேள்வி:* நோர்வே முயற்சித்த அப் பேச்சுவார்த்தை இப்போது என்ன நிலையிலுள்ளது?

*பதில்:* அதை நோர்வே அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமுமல்லவா கேட்கவேண்டும்.

*கேள்வி:* நோர்வேயில் சிகிச்சை பெற்றுவிட்டுத் திரும்பியுள்ள புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அண்மையில் வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்த பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

*பதில்:* நான் தேவையற்ற கருத்துக்களைக்கூறி இவ் விடயத்தை குழப்புவதற்கு வழிசெய்யப் போவதில்லை. அவர் கூறிய கருத்துக்கள்பற்றி நான் அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்கப் போவதில்லை.

*கேள்வி:* புலிகள் யுத்தநிறுத்தத்தை வலியுறுத்திவருகிறார்கள். அதை நீங்கள் வரவேற்கிறீர்களா?

*பதில்:* யுத்த நிறுத்தம் வருவது நல்லது.

*கேள்வி:* அதேவேளை புலிகள் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் அரசாங்கம் பேசக்கூடாதெனத் தெரிவித்துள்ளதற்கு நீங்கள் உடன்படுகிறீர்களா?

*பதில்:* அப்படி அவர்கள் கூறவில்லையே?

*கேள்வி:* அவர்கள் அப்படிக் கோரியிருந்ததாகப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளில்கூட வந்திருந்ததே?

*பதில்:* அதை அவர்கள் உத்தியோகபூர்வமாக எங்கும் கூறவில்லை.

*கேள்வி:* அப்படியாயின் பேச்சுவார்த்தையில் உங்கள் பங்களிப்பு தொடருமா?

*பதில்:* நாம் பங்களித்துக் கொண்டுதானே இருக்கிறோம். ஏனைய தமிழ்க் கட்சிகளும் பங்களித்துக் கொண்டுதான் வருகிறார்கள். எவரும் இதிலிருந்து விலகியிருக்கவில்லை.



## டக்ளஸ் தேவானந்தா

*கேள்வி:* புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்பதை நீங்கள் வலியுறுத்துகிறீர்களா?

*பதில்:* இரு வகையான பேச்சுவார்த்தைகள் அவசியமென நாம் கருதுகிறோம். ஒன்று யுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை. மற்றையது இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தை. இவை இரண்டையும் வேறுபிரித்துப் பார்க்க வேண்டும்.

இவற்றில், யுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை புலிகளோடுதான் நடத்தப்பட வேண்டும். ஏனெனில் புலிகளும் அரசாங்கமும் தான் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தை, சம்பந்தப்பட்ட மற்றைய தமிழ்க்கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் உட்பட எல்லாத் தரப்பினரோடும் பேசப்பட வேண்டும். புலிகளோடு மட்டும்தான் பேச வேண்டுமென யாரும் வலியுறுத்த முடியாது.

புலிகளோடும் பேச வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கும் புலிகளோடு மட்டும்தான் பேச வேண்டுமென்று வலியுறுத்துவதற்கும் பாரிய வித்தியாசம் உள்ளது. நாம் இரண்டாவதைத்தான் ஏற்கிறோம்.

அத்தோடு, சகல தமிழ்க் கட்சிகளும் வலியுறுத்தும்போதுதான் நாம் கூடுதலான உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பது மட்டுமல்ல, அவற்றுக்கான நியாயாதிக்கமும் இருக்கும்.

நாம் ஏற்படுத்த விழைவது உண்மையான சமாதானமாக இருந்தால், அது இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானமாக மட்டும் அமைவதால் பூர்த்தியாகாது. தமிழ் சமுதாயத்துக்குள்ளும் சமாதானம் நிலவ வேண்டும். இங்கே சகல தமிழ்த் தரப்பினர்களுக்குமிடையேயும் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் வெளிக் காயம் ஆறினாலும் உட்காயம் ஆறாத நிலைமையே இருக்கும்.

**புலிகளோடும் பேச வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கும் புலிகளோடு மட்டும்தான் பேச வேண்டுமென்று வலியுறுத்துவதற்கும் பாரிய வித்தியாசம் உள்ளது.**

www.tamilarangam.net



**கேள்வி:** புலிகள் பேச்சுவார்த்தைக்கான நிபந்தனையாக, தற்போது தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள இராணுவம் முகாம்களுக்குள் முடங்கியிருக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** முதலில் அவர்கள் இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து வாபஸ் பெறவேண்டுமென்றார்கள். தற்போது முகாம்களுக்குள் சென்றுவிடவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்கள்.

இங்கு முக்கியமானது என்னவென்றால் யுத்தத்தைத் தவிர்ப்பது எப்படி என்பதற்கு வழி காண்பதே. யுத்தம் தவிர்க்கப்படவேண்டும் என்பதே அடிப்படை நிபந்தனையாக அமைய வேண்டும். அதை ஈட்டுவதற்கான வழிகளாக எமது நிபந்தனைகள் இருக்க வேண்டுமேயன்றி தடைகளாக அல்ல.

**கேள்வி:** புலிகளும் அவ்வாறான யுத்த நிறுத்தமொன்றையே வலியுறுத்துகிறார்களல்லவா? நீங்கள் அதனை வரவேற்கிறீர்களா?

**பதில்:** ஆம். யுத்தநிறுத்தம் இன்று மக்களுக்கு அவசியமானதாகவே உள்ளது. நாம் அதை விரும்புகிறோம். ஆனால் யுத்த நிறுத்தத்தின் நிபந்தனைகளுக்கு அரசாங்கம் மட்டுமல்ல புலிகளும் கட்டுப்பட வேண்டும். மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும் நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இன்று மக்கள் அவ்வாறு சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலைமை உள்ளது. அவர்கள் சுதந்திரமாகப் பேசக்கூடியதாகவும் அச்சமின்றி நடமாடக்கூடியதாகவும் இந்த யுத்தநிறுத்தம் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

பிரதேசசபை உறுப்பினர்கள், மற்றும் முக்கிய பிரமுகர்களுக்குள்ள கொலை அச்சறுத்தல்கள் நீக்கப்பட வேண்டும். மாறாக அவ் அச்சுறுத்தல்களை அதிகரிப்பதற்கு வழிகோலுவதாக யுத்த நிறுத்தம் அமையக் கூடாது. அத்தோடு யாழ்ப்பாண போக்குவரத்துக்கான தரைப் பாதையைத் திறந்துவிட இரு தரப்பும் உடன்பாடு காண வேண்டும். இதில் எத்தரப்பும் தமது இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளாதவாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளை ஈடுபடுத்திக் கொள்ளலாம். யுத்த நிறுத்தம் அவசியம். ஆனால் அது எவர்மீதும் அழுத்தம் கொடுப்பதாக அமையக்கூடாது.

**கேள்வி:** தற்போது அனுசரணையாளராகச் செயற்பட நோர்வே அரசாங்கம் முன்வந்துள்ளதையிட்டு என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:** அவர்களின் பங்களிப்பு வரவேற்கத் தக்கது. அது எமது பிரச்சினையின் தீர்வுக்கு உகந்த மத்தியஸ்துவமாகவே கருதுகிறோம். நோர்வே நாட்டுக்கு இவ்வாறான சிக்கலான சர்வதேசப் பிரச்சினைகள் பலவற்றில் நடுவராகச் செயற்பட்ட அனுபவம் உண்டு.

**கேள்வி:** நோர்வே தற்போது அனுசரணையாளர் என்ற ஒரு வகையிலேயே இம் மத்தியஸ்துவத்தில் ஈடுபடுகிறது. அந்த நிலை இச் சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வலுவினை அதற்கு வழங்குமா?

**பதில்:** முதலில் அனுசரணையாளராகவே செற்படவேண்டியிருக்கும். பின்னர் மத்தியஸ்தருக்குரியவலுவினைக்கொண்ட நிலையை அது எட்டலாம். அதற்கு சர்வதேச ஒத்துழைப்புகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

**கேள்வி:** தற்போது நிகழும் ஆனையிறவு யுத்தம் இப் பேச்சுவார்த்தைகளில் பாதிப்பை ஏற்படுத்துமா?

**பதில்:** ஏற்படுத்தலாம். பேச்சுவார்த்தைகளில் அத்தியாவசியமான விடயம் நம்பிக்கை. நம்பிக்கையற்ற நிலையில் பேச்சுவார்த்தைகளில் இறங்கும்போது அங்கு இணக்கமேற்படுவது சிரமம். இந்த யுத்தம் நம்பிக்கையின்மையை வளர்க்கவே செய்யும். இப்போது பேச்சுவார்த்தையில் இணக்கம் காண்பது என்பதைவிட யாரின் கை ஓங்குவது என்ற போட்டியிலேயே கவனம் செலுத்தப்படுகிறது.

**கேள்வி:** தற்போது தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்துடன் மேற்கொண்டுள்ள பேச்சுவார்த்தைகள் திருப்திகரமானதாக உள்ளதா?

**பதில்:** ஓரளவு திருப்திகரமாக உள்ளது. இன்னும் பிரதானமான விடயங்களில் முடிவு ஏற்படவில்லை. முடிவு ஏற்படாத நிலையில் இதுகுறித்து இறுதியான பதிலெதையும் கூற முடியாது.

**கேள்வி:** அரசாங்கம் ஐ.தே.க. வுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகள் சாதகமான பெறுபேறுகளைத் தந்துள்ளதா?

**பதில்:** அப் பேச்சுவார்த்தைகள் குறித்து உத்தியோகபூர்வமான முடிவுகள் எதுவும் எமக்கு இன்னும் வரவில்லை. அவை இன்னும் முற்றுப்பெறவும் இல்லை. நாம் அவற்றைப்பரிசீலித்தபின்னர்தான் முடிவு கூற முடியும்.

**கேள்வி:** உங்கள் கருத்துகள் குறித்து எதிர்க் கட்சியுடன் நீங்கள் பேசுவீர்களா?

**பதில்:** நாம் அவர்களுடன் பேச அழைக்கப்பட்டால், எமது கருத்துக்களை வலியுறுத்துவாம்.



அடைக்கலநாதன்

**கேள்வி:** தற்போது நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையோடு நடக்க ஏற்பாடாகிவரும் பேச்சுவார்த்தைகள் குறித்து என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:** நாம் முன்னரே மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவம் தேவை என வலியுறுத்தி வந்துள்ளோம். இந்நிலையில் இப்போது நோர்வே நாடு மத்தியஸ்தம் வகிக்க வந்துள்ளதை வரவேற்கிறோம். நாம் மட்டுமல்ல மக்களும் நோர்வேயின் மத்தியஸ்துவத்தை எதிர்பார்ப்போடு வரவேற்கிறார்கள்.

**கேள்வி:** நோர்வே மத்தியஸ்தராக அல்லாமல் அனுசரணையாளராகவே இதில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது. அந்த வகையில் பேச்சுவார்த்தைகளை வெற்றிபெறச் செய்யக்கூடிய வலுவைக் கொண்டிருக்குமா?

**பதில்:** மத்தியஸ்தராகப் பங்கேற்பதே கூடுதலான அளவில் ஒரு தீர்வை ஈட்டக்கூடிய தன்மையைக் கொடுக்கும். இலங்கை அரசாங்கம் அனுசரணையாளரையே விரும்புகிறது. எனினும் அரிய சந்தர்ப்பமாக கிடைத்துள்ள நோர்வேயின் ஈடுபாட்டை அரசாங்கம் சரியாகப் பயன்படுத்தி இப் பிரச்சினைக்கு ஒரு முடிவைக் காண வேண்டும்.

**கேள்வி:** இதுவரையிலான நோர்வேயின் முயற்சிகள் எந்தளவு சாதகமான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது?

**பதில்:** அவர்கள் அரசாங்கத்தோடும் எதிர்க் கட்சியோடும் பேசி அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு ஏதுவான வகையில் முன்வர வைத்துள்ளார்கள். அத்தோடு புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடனும் பேசியுள்ளார்கள்.

புலிகள் தரப்பிலும் நல்ல அறிகுறிகளைப் பெற்றுள்ளார்கள்.

**இரு தரப்பிலும் யாராவது ஏமாற்றுவார்களானால் நடுநிலையாளர்கள் அவர்களை வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் சமாதானத்துக்கு முட்டுக்கட்டை யாரென்பது புலப்படும்.**

எனினும் இப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் அரசாங்கம்தான் பிரதான பங்கு வகிக்க வேண்டும்.

**கேள்வி:** அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த பிரிட்டிஷ் தூதுவர், தமது நாடும் மத்தியஸ்தம் வகிக்கத் தயாரென விருப்பம் தெரிவித்துள்ளாரே?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பதில்:** இது சந்தோஷமான விடயம். இவ்வாறு இரு நாடுகள் முன்வந்துள்ளதை இலங்கை அரசாங்கம்தான் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு இரு தரப்பிலும் யாராவது ஏமாற்றுவார்களானால் நடுநிலையாளர்கள் அவர்களை வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான் சமாதானத்துக்கு முட்டுக்கட்டை யாரென்பது புலப்படும். ஏனெனில் எல்லோருமே சமாதானத்தை விரும்புவதாகத் தான் கூறிக்கொள்கிறார்கள்.

**கேள்வி:** புலிகள் பேச்சுவார்த்தைக்கு விதித்திருந்த நிபந்தனைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக பாலசிங்கத்தின் அண்மைய பேட்டியிலிருந்து தெரிகிறது. இதற்கு நோர்வேயின் அழுத்தம் காரணமா? உங்கள் கருத்து என்ன?

**பதில்:** நோர்வேயின் அழுத்தம் காரணமாகவா புலிகள் நிபந்தனையைத் தளர்த்தினார்களென்று எனக்குத் தெரியாது. ஆனால் இரு பக்கமும் நிபந்தனைகள் விதிக்கக் கூடாதெனவே நாம் கருதுகிறோம். புலிகள் ஒரு நிபந்தனையை விதித்தால் அரசாங்கம் இன்னொரு நிபந்தனையை விதிக்கும். இவை பேச்சுவார்த்தைக்குத் தடைக்கல்லாகிவிடும். முகாம்களுக்குள் போவதை நிபந்தனையாக விதிக்கத் தேவையில்லை. ஏனெனில் யுத்த நிறுத்தம் வந்தாலே இது நடக்கும்.

**கேள்வி:** நீங்கள் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்துகிறீர்களா?

**பதில்:** ஆமாம். யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு கட்டாயத் தேவை. யுத்தத்தின் மத்தியில் இரு தரப்பினரும் ஒரு மேசையிலிருந்துகொண்டு நல்ல விதமாகப் பேச முடியாது. பரஸ்பர நம்பிக்கை இருக்காது. சந்தேகமே இருக்கும். இதேவேளை யுத்த நிறுத்தத்துக்கு மத்தியில் மற்றைய கட்சி உறுப்பினர்கள் மற்றும் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பையும் புலிகள் தரப்பில் உத்தரவாதப்படுத்த வேண்டும். எவரும் ஆயுதத்துடன் நடமாடுவதைத் தடுக்க வேண்டும்.

**கேள்வி:** நீங்கள் அவ்வாறு கோரியுள்ளீர்களா?

**பதில்:** இன்னமும் யுத்த நிறுத்தம் பற்றிய முடிவுகள் ஏற்படவில்லை. அப்படி ஏற்படும்போது நாம் எமது இக் கருத்தை முன்வைப்போம்.

**கேள்வி:** இப்போது ஆனையிறவுப் பகுதிகளில் ஆரம்பித்துள்ள சண்டை, பேச்சுவார்த்தைகளில் என்ன பாதிப்பை எற்படுத்துமெனக் கருதுகிறீர்கள்?

**பதில்:** பேச்சுவார்த்தை நேரத்தில் ஏற்பட்டுள்ள இத்தகைய சண்டை சமாதானப் பேச்சுக்களை தூரத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். அரசாங்கத் தரப்பிலும் தாக்குதல்களை மும்முரப்படுத்தும் மனோபாவத்தையே தூண்டிவிடும். இதனால் வெளிநாடுகளின் இந் நல்ல முயற்சிகளும் ஸ்தம்பிதமடைந்து போய்விட வாய்ப்புண்டு.

**கேள்வி:** மற்றைய தமிழ்க் கட்சிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகியிருக்க வேண்டுமென புலிகள் கூறுகிறார்களே, அதற்கு நீங்கள் உடன்படுகிறீர்களா?

**பதில்:** நாம் முன்பிருந்தே புலிகளுடன்தான் பேச வேண்டுமென வலியுறுத்தி வருகிறோம். புலிகளுடன் பேசாமல் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அதேவேளை நாமும் தற்போது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம். புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு வழிகோலும் வகையில்தான் இப் பேச்சுக்களில் ஈடுபடுகிறோம். இறுதியாகப் புலிகளுடன்தான் பேசி முடிவுக்கு வர வேண்டும். அம் முடிவையிட்டு பின்னர் எம்முடன் பேசலாம். நாமும் தமிழ் மக்களின் விடுதலைக்காக பங்களித்தவர்கள், பங்களித்துக் கொண்டு இருப்பவர்கள்.

**கேள்வி:** நீங்கள் அரசாங்கத்தோடு நடத்தும் தீர்வுத்திட்டம் குறித்த பேச்சவார்த்தைகள் எப்படிச் செல்கின்றன?

**பதில்:** விட்டுக்கொடுப்புகளுடன் நகர்கின்றன. இன்னும் நிறையப் பிரச்சினைகளில் தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

**கேள்வி:** அரசாங்கமும் ஐ.தே.க.வும் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் ஏதும் சாதகமான முன்னேற்றங் காணப்பட்டுள்ளதா?

**பதில்:** அவை இணக்கப்பாட்டுடன் நடந்துவருவதாக அறிகிறோம். இப் பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை தருகின்றன. ஆனால் ஒட்டுமொத்தமாக என்னென்ன முடிவுகளுக்கு வந்துள்ளார்கள் என்று தெரிந்துகொண்ட பின்னர்தான் அவை குறித்து எமது கருத்துகளைத் தெரிவிக்கலாம்.

**யுத்தமானால் சண்டையிடும் இரு தரப்பினரையும் தவிர வேறு எவரும் கொல்லப்படக் கூடாது. யுத்த நிறுத்தமானால் எவருமே கொல்லப்படக் கூடாது.**





**வரதராஜப்பெருமாள்**

**கேள்வி:** நோர்வே அரசாங்கத்தின் மத்தியஸ்த முயற்சி குறித்து என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:** வரவேற்கத்தக்க முயற்சி. இலங்கைப் பிரச்சினையில் சர்வதேசக் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்கும். நோர்வே அனுபவமுள்ள நாடு. அவர்கள் இப் பிரச்சினையில் கால் வைக்கும்போது இதன் சிக்கல்களை நன்கு ஆராய்ந்துதான் இறங்குவார்கள். ஆனால் இன்னும் உண்மையான பேச்சுவார்த்தை ஏற்படவில்லை. அதற்கான தயாரிப்புகள் மட்டும்தான் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கேள்வி:** எப்போது நேரடியான பேச்சுவார்த்தைகள் ஏற்படும்?

**பதில்:** சொல்ல முடியாது. அதற்கு நோர்வே அரசாங்கம் திருப்திப்படக்கூடிய உத்தரவாதங்கள் இருதரப்பாலும் வழங்கப்பட்ட பின்னர்தான் இவை ஆரம்பிக்குமென நான் கருதுகிறேன்.

**கேள்வி:** தற்போது அதன் நிலை எப்படியுள்ளது?

**பதில்:** நிபந்தனைகளைச் சரிக்கட்டும் முயற்சியில் உள்ளது எனலாம். பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கு முன்னர் அவர்கள் அதற்குத் தடையான நிபந்தனைகளைப் போட்டுவிடுகிறார்கள். அவற்றை அகற்றுவது தான் இங்கே முதற் காரியமாக உள்ளது.

**கேள்வி:** புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள படையினர் முகாம்களுக்குள் செல்லவேண்டுமென விதித்துள்ள நிபந்தனைக்கு நீங்கள் புலிகளும் முகாம்களுக்குள் செல்ல வேண்டுமென மாற்று நிபந்தனை ஒன்றைத் தெரிவித்திருந்தீர்கள்... எதற்காக?

**பதில்:** யுத்தமானால் சண்டையிடும் இரு தரப்பினரையும் தவிர வேறு எவரும் கொல்லப்படக் கூடாது. யுத்த நிறுத்தமானால் எவருமே கொல்லப்படக் கூடாது. ஆனால் இந்த யுத்த நிறுத்தங்களை, மாற்று தமிழ் அரசியல் கட்சியினரையும் மாற்றுக் கருத்துடையவர்களையும் அழித்தொழிப்பதற்குப் பாவிக்காதிருக்கவே இந்த நிபந்தனை பற்றிக் கூறினேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு தரப்பு மட்டும் ஆயுதப் பிரசன்னமின்றி இருக்க மறு தரப்பு கட்டவிழ்த்து விடப்பட்டதாக இருக்கமுடியாதே. யுத்த நிறுத்தத்தின் மூலம் சண்டையிடும் தரப்பினர் மட்டும் பாதுகாப்புத் தேடிக்கொண்டால் போதாது. மற்றையோரும் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆயுதம் வைத்திருக்கும் எல்லோருமே முகாம்களுக்குள் செல்ல வேண்டும். மக்கள் ஆயுதங்களுக்குப் பயப்படாமல் தமது கருத்துகளை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். அப்போதுதான் பேச்சுவார்த்தை தொடர்பாக மக்கள் அறிந்து, அவைபற்றி சுதந்திரமான முறையில் கலந்துரையாடல்கள் நடத்தி ஆராய முடியும். அதுதான் மக்கள் பங்களிப்புடனான பேச்சுவார்த்தையாகவும் இருக்கும்.

**கேள்வி:** ஏனைய தமிழ் கட்சிகளைப் புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகியிருக்கும்படி கூறியுள்ளார்களே, நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** புலிகள் தமக்குத் தேவையானதைத் தாமே நேரடியாகப் பேசுவதுதானே? மற்றைய கட்சிகளுடன் அரசாங்கம் பேசுவதையும் பேசாததையும் பற்றி கவலை கொள்ளத் தேவையில்லையே. ஆனால் நாம் புலிகளை விலகியிருக்கும்படி கோரவில்லை. அவர்களாகத்தான் விலகி இருந்தார்கள். அத்தோடு இப்போதும் புலிகள் அரசாங்கத்தோடு பேசவுள்ளதற்கும் நாம் தடையல்ல. மாறாக, அவர்கள் பேச வரவேண்டுமென்றே வலியுறுத்துகிறோம்.

**கேள்வி:** இப்போது நிகழும் அரசாங்கத்துக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் எப்படிச் செல்லுகின்றன?

**பதில்:** பொதுவாகச் சொன்னால் ஆரோக்கியமான முயற்சி என்று சொல்லலாம். ஆனால் 'முயற்சி திருவினையாக்குமா' என்று ஆருடம் கூற முடியாது. எனினும் ஒரு சில விடயங்கள் சற்று அக்கறையுடன் ஆராயப்படுகின்றன என்பது உண்மை. அவை நல்ல முடிவைத் தருவது, எம்மவர்கள் எடுக்கும் அக்கறையிலும் தங்கியுள்ளது.

**கேள்வி:** ஆனையிறவில் ஆரம்பித்துள்ள யுத்தம் பேச்சுவார்த்தைகளில் பாதிப்பை ஏற்படுத்துமா?

**பதில்:** பாரிய அசம்பாவிதங்கள் நிகழ்ந்தாலேயன்றி இப்போது நிகழும் பேச்சுவார்த்தைகளை அது பாதிக்காது. ஆனால் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் கடினப் போக்குகள் உருவாக வழிவகுக்கலாம்.



சித்தார்த்தன்

**கேள்வி:** நோர்வே மத்தியஸ்த முயற்சி பற்றி என்ன கருதுகிறீர்கள்?

**பதில்:** இப் பிரச்சினையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமின்றி தீர்வு காண முடியாதென்றே நாம் வலியுறுத்தி வந்தோம். நோர்வேயின் முயற்சி வரவேற்க வேண்டியது. ஆனால் இரு புறத்திலும் தீர்வுக்கான மனப்பூர்வமான விருப்பமின்றி ஒரு தீர்வை அடைய முடியாது. இந்தியா இரு தரப்பின் மீதும் செலுத்திய நிர்ப்பந்தம் போன்ற ஒன்றை வேறு யாராலும் செலுத்த முடியாது. அவ்வாறிருந்தும் அவர்களால் ஈட்டப்பட்ட தீர்வும் தோல்வியடைந்தது. எனவே இரு தரப்பும் உண்மையான ஈடுபாடு காட்டுவதே முக்கியம்.

நோர்வே போன்ற மூன்றாம் தரப்பு தேவைப்படுகிறதென்றால் ஒருவரைஒருவர் நம்பவில்லை என்பதே அர்த்தம். நோர்வே இங்குநம்பிக்கையைஏற்படுத்த முயற்சிசெய்யலாம். ஆனால் இந்தியாவைத் தவிர்த்து ஒரு தீர்வைக் காண முயற்சிப்பது புத்திசாலித்தனமாக அமையாது. இதில் அவர்களையும் ஏதோ ஒரு விதத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

**கேள்வி:** புலிகளின் தரப்பில் பாலசிங்கம், படைகள் வாபஸ் பெறப்பட வேண்டுமென்ற நிலையிலிருந்து முகாம்களுக்குள் போக வேண்டும் என்பதாக நிபந்தனையைத் தளர்த்தியுள்ளாரே இது குறித்து....?

**பதில்:** இரண்டு நிபந்தனைகளும் ஒன்றுதான். முகாம்களுக்குள் பேகவேண்டுமென்றால் யாழ்ப்பாணத்தில் படைகள் பலாலிக்குத் திரும்பி விடவேண்டுமென்பதேயாகும். இவ்வாறான ஒன்றுக்கு அரசாங்கம் உடன்படப் போவதில்லை. என்னைப் பொறுத்தவரையில் இரு தரப்பும் நிபந்தனையின்றி பேச வேண்டும்.

**கேள்வி:** அரசாங்கம் நடத்தும் தீர்வுத்திட்டப் பேச்சுவார்த்தைகள் எப்படிச் செல்கின்றன?

> **யார்யார் மக்களின் பிரதிநிதிகள் என்று தீர்மானிப்பது மக்களேயன்றி புலிகளோ புளொட்டோ அல்ல.**

**பதில்:** என்னைப் பொறுத்தவரையில் ஜனாதிபதியிடம் தீர்வு காணுவதில் உண்மையான ஒரு விருப்பம் தெரிகிறது. ஆனால் அவரால் முடியுமா என்பதே கேள்வி. எதிர்க் கட்சியையும் தனது கட்சிக்குள் உள்ளோரையும் ஏற்கப் பண்ண முடியுமா என்பதும் அவர்கள் ஏற்ற விடயங்கள் தமிழ் கட்சிகளால் ஏற்கக் கூடியதாயிருக்குமா என்பதும் சந்தேகமே.

பேச்சுவார்த்தைகளில் முக்கியமான பகுதிகள் இன்னும் அவர்களால் ஆராயப்படவில்லை. அவற்றைப் பொறுத்தே யாவும் அமையும்.

அரசாங்கத்துக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையே இணக்கம் ஏற்படாவிடத்து, அல்லது அர்த்தமுள்ள தீர்வுகளை ஈட்டாதவிடத்து, அதுபுலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்த அனுகூலமாக அமையும்.

**கேள்வி:** புலிகள் தங்களைத் தவிர ஏனைய தமிக் கட்சிகளுடன் பேசக் கூடாதெனக் கூறுவதுபற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** இதை தாமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டிலிருந்தே அவர்கள் கூறுகிறார்கள். இன்று மட்டுமல்ல திம்புப் பேச்சுவார்த்தைக்குப் பின் நடந்த பெங்களூர் பேச்சுவார்த்தையிலிருந்து இவர்கள் இப்படிக் கூறி வருகிறார்கள். அதனை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. யார் யார் மக்களின் பிரதிநிதிகள் என்று தீர்மானிப்பது மக்களேயன்றி புலிகளோ புளொட்டோ அல்ல.

ஆனால் பேச்சுவார்த்தையைப் பொறுத்தவரையில் நாம் யாருடன் பேசியாவது தீர்வு வந்தால் சரி என்றே கருதுகிறோம். புலிகளுடன் பேசி தீர்வைக் காண முடியுமானால் அதனை நாம் வரவேற்கின்றோம். எம்மைப் பொறுத்தவரையில் தீர்வு முக்கியமானதேயன்றி யாருடன் பேசுவது என்பதல்ல.

**கேள்வி:** புலிகள் யுத்த நிறுத்தத்தையும் அரசாங்கம் யுத்தத்தின் மத்தியில் பேச்சுவார்த்தையையும் வலியுறுத்துகிறார்கள். உங்கள் கருத்து என்ன?

**பதில்:** யுத்த நிறுத்தமில்லாமலும் பேச்சுவார்த்தைகள் நடந்ததுண்டு. இஸ்ரேல் - பாலஸ்தீனப் பேச்சுவார்த்தைகள் அவ்வாறு நடந்தவையே. உடன்படிக்கை கையொப்பம் இடும் போதுதான் பேச்சுவார்த்தை நடந்ததையே வெளியுலகம் அறிந்தது. நோர்வே அதில் மத்தியஸ்துவம் வகித்தது.

யுத்த நிறுத்தமும் நல்லதே. மக்களுக்கு ஓய்வு கிடைக்கும். ஆனால் திம்பு பேச்சுவார்த்தை அனுபவத்தை எடுத்துக்கொண்டால், யுத்த நிறுத்தத்தின்போது பிரதானமான பிரச்சினைகளை விட யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய சச்சரவுகளே முன்னிலைப்பட்டு நிற்கும். பிரதானமான அரசியல் தீர்வு பற்றிய விடயங்கள் அடிபட்டுப் போய் சின்னச் சின்ன விடயங்களாலேயே பேச்சுவார்த்தை முறிவடைந்து விடும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மனித வரலாறு என்பது எப்போதும் எங்கும் ஒரு இரத்த ஆறாகவே இருக்கிறது.

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையின் வரலாற்றில் மட்டுமல்ல, தமிழரின் போராட்ட வரலாற்றிலும் இரத்தம்தான்!

'இலட்சியம்' 'புனிதம்' 'தியாகம்' என பல பெயர்களை, அந்தஸ்தை அதற்குச் சூட்டிக் கொண்டாலும் உள்ளே பாதகச் செயல்களின் படிக்கட்டுகளாகத்தான் எமது போராட்டமும்.

நாம் என்றாவது ஒரு நாள் இந்த உண்மையைக் காண நேரிடும்.

நியாயத்துக்காகக் குரலெழுப்ப வேண்டிய நாம் பல அநியாயங்களை நியாயப்படுத்தவே பழக்கப்பட்டு விட்டோமென்பதை உணர நேரிடும்.

அன்று நாம் மௌனமாகிப் போவோம். அந்த மௌனத்தில் பலர் கையாலாகாதவர்களாக ஒதுங்கிப் போய்விடுவார்கள்.

இவ்வாறு ஒதுங்குவதாலேயே இந்த இரத்த வரலாறு நீள்வதற்கு நாம் வழிசமைத்துக் கொடுக்கிறோம்.

வரலாறு தொடர்கிறது... அந்த வரலாற்றில் நிகழ்ந்த ஒரு கொடுமையின் துளி இது.

உடலும் மனமும் விறைத்துப் போகும் இந்தச் சம்பவம் எமது போராட்ட வரலாற்றில் பதிந்த ஒரு மாறா வடு!
இது நடந்தது 1987 மார்ச் 30ம் திகதி.
இது உலகத்துக்குத் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டது. இதனை மூடி மறைப்பதில் கொலையாளிகள் மட்டுமன்றி தமிழ்ப் பத்திரிகைகளும், ஏன் தமிழ் கல்வியாளர்களும்கூட பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர்.
வெலிக்கடைச் சிறைக்குள் தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டபோது அதற்காக குமுறிய சிங்கள நல்ல உள்ளங்களைக்கூட அவமானப்படுத்தக்கூடிய வகையில் அமைந்து விட்டது இத் தமிழ்ப் பெருங்குடிமக்களின் மௌனம்.
தெரிந்தும் தெரியாதவாறு மறக்கவும் மறைக்கவும் பட்ட சம்பவம் இது. அதனால், இது நிகழ்ந்து இன்று வரை 13 வருடங்களில் எங்காவது இது முழுமையாக வெளிவரவில்லை. அதனை இங்கு தருகிறோம்.

இந்தச் சம்பவத்திலிருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பி, இத்தகவல்களைத் தந்த 'தைரி' என்று அழைக்கப்படும் அந்நபர் இன்று உயிருடன் இல்லை. அவர் மீண்டும் 1987ல் கிழக்கு மாகாணத்தில் கல்முனையில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார். அவரைப் பாதுகாத்து அனுப்பி வைத்த ஒருவருக்கு அவர் கொடுத்த வாக்குமூலத்தின் மூலம் இத்தகவல்கள் உங்களுக்குக் கிடைக்கிறது.

# பிணங்களுள் கிடந்து மீண்டேன்

இரவுகள் பொதுவாக ஒரே மாதிரித்தான். இருளும், மௌனமும், துயிலும்....! ஆனால் அன்றைய இரவு - 1987 மார்ச் 30ம் திகதியின் யாழ்ப்பாணத்து இரவு அப்படியிருக்கவில்லை.

அது ஒரு கோர இரவு! அது எத்தனை படு கோரமாகத் தமக்கு அமையப் போகிறது என்பதை உணராமல், நாளாந்தம் கடந்து போகும் சாதாரண இரவு போலக் கருதி, மறுநாளை தரிசிக்கத் துயில்வதற்காகத் தமது இரவு உணவைப் புசித்துக் கொண்டிருந்தார்கள்.... அவர்கள் புலிகள் இயக்கத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள்.

கைதிகள் என்போர் - குற்றவாளிகள். அல்லது குற்றத்துக்காக சந்தேகிக்கப்படுவோர். ஆம். இவர்களும் அத்தகைய ஒரு குற்றத்துக்கு உரியவர்களே! அது என்னவென்றால், தமிழ் மக்களின் விடுதலைக்காகவெனப் போராடப் புறப்பட்டதுதான்! விடுதலைப் புலிகள் செய்த அதே காரியம் ஏன் அவர்களாலேயே குற்றமாக்கப்படுகிறது என்றால்....
அதை விளக்க அவர்களின் பக்கவாத்தியக்காரர்களால்தான் முடியும்! சில படித்த மனிதர்களுக்கு இது மிகச் சுளுவான காரியமாக இருக்கலாம்.
ஆனால் ஒன்று... இங்கு கைதிகளாக வைக்கப்பட்டிருந்தவர்கள் யாவரும் தமிழ்த் தாயின் புத்திரர்கள். ஒருவேளை இவர்களின் சகோதர சகோதரிகள் யாரும் புலிகள் இயக்கத்தில் கூட இருந்திருக்கலாம். இவர்கள் எல்லோருமே தத்தம் விடுதலை இயக்கங்களில் சேரும்போது தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் தமது உயிரையும் கொடுக்கத் தயாராகவே முன்வந்தவர்கள். தமது குடும்பம் வறுமையில் உழன்றாலும், திருமணம் முடிக்காத சகோதரிகள் இருந்தாலும், மனைவி மக்கள் இருந்தாலும், சொந்த வாழ்க்கையைப் பொருட்படுத்தாமல், பள்ளிப் படிப்பை - சிலவேளை பல்கலைக்கழகப் படிப்பையும் - உதறித் தள்ளிவிட்டு, ஒரு சிலர் தொழிலையும் உதறித் தள்ளிவிட்டு போராட்டத்தில் இணைந்தவர்கள்.

அவர்கள் இணையும்போது 'நாமும் போராட வேண்டும்' என்ற எண்ணம் ஒன்றைத் தவிர வேறெந்த நினைப்புமின்றி, எழுந்தமானமாகத் தமக்கு எட்டிய விடுதலை இயக்கங்களில் சேர்ந்தார்கள். இங்கு எமக்கு உணரக்கூடியதாக இருந்த ஒரு பிரதான விடயம் யாதெனில் 1983 ஜூலை இனக்கலவரம் உந்தித்தள்ளிய போராட்ட வேகத்தில் விளைந்த இப்போராளிகள் அப்போராட்டத்தாலேயே குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டிருந்த முரண்நிலைதான்!

இக்கைதிகள் யாவரும் எப்படி இந்தச் சிறை முகாமில் அடைக்கப்பட நேர்ந்தது என்பதே எமது போராட்ட வரலாற்றில் ஒரு பகுதிதான் - கசப்பான பகுதி.

1986ம் ஆண்டு தமிழ் ஆயுதப் போராட்டத்தில் புதியதொரு குணாம்சம், மிக மோசமான வடிவில் வெளிப்பட்ட ஆண்டு. ஏப்ரல் மாதம் டெலோ அமைப்பின் மீதான புலிகளின் தாக்குதலுடன் இது ஆரம்பித்தது. அடுத்தடுத்து புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். என, ஈரோசைத் தவிர அனைத்து இயக்கங்களையும் அவ்வாண்டுக்குள் தடை செய்து முற்றுப்பெற்றது.
(ஈரோஸை சில காலம் பயன்படுத்திவிட்டு பின்னர் இயக்கத்தைக் கலைத்துவிட்டு தம்முடன் சேர்ந்து விடும்படி புலிகள் உத்தரவிட்டனர்.)
இவ்வாறு புலிகளால் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் உறுப்பினர்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர்.

www.tamilarangam.net



# தப்பிப் பிழைத்த தைரியின் கதை




அவர்களில் பலர் இச்சிறை முகாமில் அடைத்து வைக்கப் பட்டிருந்தனர். இறுதியாக 1996 டிசம்பர் 13ம் திகதி புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான ஈ.பி. ஆர்.எல்.எப். இயக்க உறுப்பினர் களே இங்கு அதிகளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் 30 பேர் புலிக ளால் விடுவிக்கப்பட்டபின் இந்தி யாவுக்குச் செல்வதற்காக படகு ஏற்பாடு செய்துவிட்டு, அதற்காகப் புங்குடுதீவுக்கு வேன் ஒன்றில் சென்றுகொண்டிருந்த வேளை, மீண்டும் புலிகளால் இடைமறிக் கப்பட்டு, பாதுகாப்பாக அனுப்பி வைப்பதாக தந்திரமாகப் பேசி, ஏமாற்றி அழைத்து வரப்பட்டு இச் சிறை முகாமில் அடைத்துவைக் கப்பட்டவர்கள். அவர்களுடன் புலி களால் கைது செய்து அடைத்து வைக்கப்பட்டவர்களில் ஒருவரே இச்சம்பவத்தில் தப்பிவந்து இத் தகவல்களைக் கூறிய **தைரி.**

இதேபோல் இன்னும் ஒரு பகு தியினர் இந்தியாவிலிருந்து ஏமா ற்றி வரழைக்கப்பட்ட 30 ஈ.பி. ஆர்.எல்.எப். உறுப்பினர்கள். மன் னாரில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். தொலைதொடர்புப் பரிவர்த்தனை யாளர்களை துப்பாக்கி முனை யில் வைத்து, அவர்கள் மூலம் தம்மை ஆபத்திலிருந்து காக் கும்படி இந்தியாவிலிருந்த தலை மைக்குச் செய்தி அனுப்பச் செய் தனர்.

இதனை நம்பி படகில் வந்த 30 பேரைச் சுற்றி வளைத்துக் கைது செய்து, மன்னாரில் வைத்து விசாரணை நடத்திவிட்டு யாழ்ப் பாணத்தின் இச்சிறை முகாமு க்கு அனுப்பியிருந்தார்கள்.

இதைவிட, யாழ்ப்பாணத்தில் கைதான பல ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்களும், பொதுமக்களில் சிலரும் அச்சிறை முகாமில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர் களில் ஒருவர் நகைக்கடை முத லாளி. புலிகள் கேட்ட பணத்தைக் கொடுக்காததால் தடுத்து வைக் கப்பட்டிருந்தார்.

அனைவரும் வெவ்வேறு அறை களில் அடைக்கப்பட்டிருந்ததால் மொத்தமாக எத்தனை பேர் இருந் தனரெனச் சரியாக அறியக்கூடி யதாக இருக்கவில்லை. சுமார் 30 றாத்தல் பாண் வாங்குவதைக் கொண்டு 60க்கு மேற்பட்டோர் இருந்தனரெனக் கணக்கிட முடிந் தது. இங்கிருந்தோரை உற்றார், உறவினர், அல்லது வெளியார் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை.

அங்கிருந்த சின்னதயான் என்ப வரது மனைவிக்குக் குழந்தை பிறந்ததை அறிந்தும், மனைவி, குழந்தையைப் பார்க்க அனும திக்கப்படவில்லை. அவர் சாகும் போதும் தனது குழந்தையைப் பாராமலே சாக நேர்ந்தது.

அந்த இருளில் கடந்து கொண் டிருக்கின்ற கடிகார முட்களின் கணங்கள் ஒவ்வொன்றையும் காலன்தான் நகர்த்திக்கொண்டி ருந்தான் என்பதை அறியாமல் அடைபட்டுக் கிடந்தார்கள் அவர் கள்.

இன்னும் எத்தனையோ ஆண் டுகளுக்கு வாழவேண்டிய வயது அவர்களுக்கு. ஆனால் அவர்க ளின் விதியை மாற்றி எழுதிய எழுதுகோலாக எமது விடுதலைப் போராட்டத்தின் துப்பாக்கி மாறி யது. அது இரத்தத்தையே மை யாக்கி தனது மரணத் தீர்வை வரலாற்றில் பதிந்தது.

அன்று - 1987 மார்ச் 30, இரவு சுமார் 9 மணியிருக்கும். யாழ்ப் பாணத்தை ஓர் அதிர்ச்சிச் செய்தி மெல்லக் கிலியிலாழ்த்தியது.

அன்றைய காலத்தில் புலிக ளின் யாழ்ப்பாண இராணுவத் தளபதியான கிட்டுவின் வாகனத் தின் மீது கிரனேட் தாக்குதல் நடந்துவிட்டது என்பதுதான் அச் செய்தி.

இத்தாக்குதலை யார் நடத்தி னர் என்று அப்போது தெரிந்தி ருக்கவில்லை. பின்னர் அது புலி கள் இயக்கத்துக்குள் கிட்டுவுக் கும் மாத்தயாவுக்குமிடையிலான அதிகாரப் போட்டியில் மாத்தை யாவின் தரப்பினரால் மேற்கொள் ளப்பட்டது என்று ஊகிக்கக் கூடி யதாயிருந்தது.

இத்தாக்குதலின் பின் கிட்டுவை உடனடியாகப் பொறுப்பிலிருந்து நீக்கி இந்தியாவுக்கு எடுத்து, பின் லண்டனுக்கு அனுப்பியதும், மாத்தையாவிடம் முழுப் பொறுப் பையும் ஒப்படைத்ததும் இதனை உறுதிப்படுத்துவதாக அமைந் தன. இத்தாக்குதலில் கிட்டு காலொன்றை இழக்க நேரிட்டது. அவரின் மெய்ப்பாதுகாவலர் பலி யானார்.

இச்சம்வத்தையடுத்து என்ன விபரீதம் நிகழப் போகிறதோவென யாழ் நகரமே அச்சத்தில் ஆழ்ந் திருந்தது.

ஆனால்,
இச்சம்பவத்துடன் உருக்கொண்ட அந்த விபரீதம் தம்மை நோக்கி திசை திரும்பப் போகிறது என்ற ஆபத்தை அந்தச் சிறை முகா மில் அடைக்கப்பட்டிருந்தவர்கள் எவரும் அறிந் திருக்கவில்லை. உண்மையில் அவ ர்களுக்கு வெளியே என்ன நடந்திருக் கிறது என்பதே தெரி யாதிருந்தது.

தைரி மேல் மாடியில் உள்ள அறையில் அடை க்கப்பட்டிருந்தார். சாப்பாட்டு வேளைகளில் அவர்களைத் திற ந்து விடுவர். அதுவும் சாப்பாட்டு வேளையாக இருந்ததால் அவர் கீழே இறங்கி வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சுமார் 9.15 இருக்கும்.

திடீரென அம்முகாமை நோக்கி வெடிச்சத்தங்கள் கேட்டன. முத லில் அது "மிஸ் ஃபயர்" (தவறு தலான துப்பாக்கி வெடி) என்று தான் யாவரும் எண்ணினர். அம் முகாமில் நீண்ட நாள் இருந்த தில் தாம் கொல்லப்படுவோம் என்று எவரும் எண்ணியிருக்க வில்லை. ஆனாலும் ஏதோ ஒரு உள்ளுணர்வால் உந்தப்பட்ட தைரி குசினியை அண்டிய முடுக் கொன்றில் மறைந்து கொண்டார்.

அவ்வேளை -
அருணா என்ற புலி உறுப்பினர் தனது 5, 6 உதவியாளர் சகிதம் மூர்க்காவேசத்துடன் உள்ளே புகுந்தான். அவன் வந்த வேகத் தில் வலதுபுற மூலையிலிருந்த அறையில் அடைத்து வைத்திருந் தவர்கள் மீது, எம்-16 யந்திரத் துப்பாக்கியால் 'ஹிட் பொஸிஷ னில்' நின்று சரமாரியாகச் சுட் டான்.

துப்பாக்கியின் மகஸீன் தீர்ந்த தும், உதவியாளரிடமிருந்து மறு மகசீன் வாங்கிப் பூட்டி மறுபடி சுட்டான். சுட்டுவிட்டு அருகில் இருந்த மாடிப் படிகளால் ஏறி மேல் மாடிக்குச் சென்றான்.

அந்த வீட்டின் முகப்பில் பெரிய ஹோலிருந்தது. அதில் எதிரே இரு அறைகளிலும் கைதிகள் இருந்தனர். ஒரு அறையிலிருந்து மறு அறைக்கு வர வழியிருந்தது. இடப்புறமாக குசினியும் வலப் புற அறைக்கு அருகே மாடிப்படி களும் இருந்தன.

வலப்புற அறையில் சூடுபட்ட வர்கள் இடப்புற அறைக்குள் ஓடி னார்கள். மேல் மாடிக்குச் சென்ற அருணா அங்கும் வெடிகளைத் தீர்த்துவிட்டு திரும்ப இறங்கி வந்து இடப்புற அறைக்குள்ளிரு ந்தவர்களை நோக்கிச் சுட்டான். சிறிது நேரம் தொடர்ந்து சுட்டு விட்டு திரும்பிப் போய்விட்டான்.

.தைரியின் அதிர்ஷ்டம், பின்னால் சென்றிக்கு யாரும் இருக்க வில்லை. (பரபரப்பில் அவர்கள் முன்புறம் போயிருக்கலாம்) அடுத்த வீட்டு வளவினூடாக கால் சென்ற பக்கமாக ஓடிய தைரி, சிறிது தூரத்திலிருந்த ஏதோ வீடொன்றுக்குள் புகுந்தார்.

தலை முதல் கால் வரை இரத்தம் வழிந்தோட அவர்கள் முன் வந்து நின்ற தைரியைக் கண்டதும் முதலில் பயந்து வெல வெலத்துப் போனாலும், பின்னர் தைரி, அவர்களிடம் நடந்ததை மூச்சிளைக்கக் கூறியதில் அவருக்கு அவர்கள் சேட் ஒன்றைக் கொடுத்து உதவினர்.

சேட்டை அணிந்துகொண்டு இரவிரவாக வெளியேறி சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் ஓட்ட நடை நடந்து சற்று அறிமுகமான ஒருவரின் வீட்டில் தங்கினார். மறுநாள் காலை அங்கிருந்து கிறிஸ்தவ பாதிரியார் ஒருவருடாக தகவல் சொல்லியனுப்பி தனக் குத் தெரிந்த குடும்பத்தவர் ஒருவரை அழைப்பித்தார்.

வந்தவர் இவரை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு, யாழ்ப்பாண பிஷப் தியோகுப்பிள்ளை அவர்க ளிடம் சென்று அடைக்கலம் கோர எண்ணி, அங்கு அழைத்துச் சென்றார். இப்படியான உயிரா பத்து வேளையில் பிஷப் நிச்ச யம் மனிதாபிமான உணர்விலா வது உதவுவார் என்றே அவர் கள் நம்பினர். அத்தோடு புலிக ளிடமிருந்து தைரியின் உயி ரைக் காக்கக்கூடிய செல்வாக்கு அவருக்குத்தான் இருந்தது.

பிஷப் தனது ஆசனத்தில் இருந்த படியே அவர்களைக் கேட்டார். *"Yes, what do you want?"* (உங்களுக்கு என்ன வேண்டும்?) "இவர் (தைரி) பெரிய ஆபத்திலி ருக்கிறார். நீங்கள்தான் அடைக் கலம் கொடுத்து உயிரைக் காக்க வேண்டும்" என பிஷப்பை மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார்.

www.tamilarangam.net



சூடுபட்ட அஜித் என்பவருக்கு கை முறிந்து எலும்பு தெரிய, வயிறு பிரிந்து குடல் வெளியே தள்ளியது. அதை முறிந்த கையின் எலும்பால் அழுத்திப் பிடித்துக்கொண்டு "தண்ணீர், தண்ணீர்" எனக் கத்தினான். வலப்புற அறையில் றெஜி என்ற நெடிய சிவலைப் பெடியனுக்கு ரத்தம் ஒழுகியபடியிருந்தது. பலருக்கு என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. யார் யார் சூடுபட்டனர், யார் யார் கொல்லப்பட்டனர் என்பதும் தெரியவில்லை.




தைரியும் இன்னும் சிலரும் வெளிக்கதவால் தப்ப ஓடினர். காவலில் நின்ற புலி கள் 'யாரடா' என்று கத்தியபடி திரும்பச் சுட, ஓடி வந்தவர்கள் வெடிபட்டு கதவரு விழுந்தனர். அவர்களோடு சேர்ந் தைரியும் படுத்துவிட, தைரி மேல் ல விழுந்திருந்த கங்கா என்பவனுக்கு தலையில் வெடி பட்டு மூளை சிதறி தைரியின் முகம் மீது வடிந்தது. இரத்தம் வெள்ளம் போல் படர்ந் திருந்தது. தைரி அப்படியே இறந் தவர்களோடு இறந்தவன் போல் படுத்தபடி இருந்து விட்டார். சென்றிக்கு இருந்தவர்கள் சுட்டி யிருந்தவர்களை இஷ்டப் படி எஸ். எம். ஜி. களால் சுட்டனர். மேலே இருந்த மற்றைய இறந்த உடல்களும் இரத்தமும் தைரியை மறைத்திருந் தன.

அப்படிச் சடலங்களின்கீழ் புதைந்து கிடக்கையில் வெடிபட்டவர்களின் ஓலங் களும் முனகல் சத்தங்களும் கேட்டபடி இருக்கிறது. உயிர் பிரிகையில் ஒவ்வொருவரது மரண ஓசையும் அடங்கிச் செல்வது கேட்கிறது. அந்த ஓசை, குரல் வளை அறுபட்ட ஒரு ஆட்டின் கதறல் போல், மனிதக் குரலேயற்ற வேறோர் பயங்கர குரலாக ஒலித்து, மூச்சிழுத்து, ஓய்வதைக் கேட்கும்போது உடல் அச்சத்தால் சில்லிட்டுப் போய்விடுகிறது.

கதிர் என்பவனும் வேறு சிலரும் மலசல கூடத்தின் மேல் இருந்த தட்டு ஒன்றுக்குள் ஏறி அங்கிருந்த புலித் தோலால் போர்த்தபடி பதுங்கிக் கொண்டனர்.

அருணா சுட்டு, அதன்பின் சென்றிக்கு நின்ற புலிகளும் சுட்டு ஓய்ந்துவிட்டிருக்க, அடுத்ததாக சத்தியா என்பவன் வந்தான். சத்தியாவின் கீழ்தான் அந்த முகாம் இருந்தது. முகாமின் பொறுப்பாளராக பாலு என்பவன் இருந்தான்.

சத்தியா வந்ததும் அரைகுறையாய் உயிரோடிருந்தவர்களைச் சுட்டுக் கொன்றான். சத்தியா பிஸ்டலால்தான் சுட்டான். பின்னர் மலசல கூடத் துக்குப் போய் அங்கே மேலே ஒளித்திருந்தவர்களை நோக்கி 'இறங்கடா கீழே' என்று கத்தியபடி சுட்டான். சூடு பட்டவர்கள் தொப்பென விழும் ஓசை கேட்டது. கதிர் குப்புற விழுந்து கிடந்ததை பின்னர் தைரி தப்பிச் செல்லும்போது காண முடிந்தது.

இவ்வேளையில் வாகனச் சத்தம் கேட்டது. வெளியே சென்ற அருணா திரும்பி வந்தான். அவன் வேறொரு முகாமில் வைத்திருந்த ராசீக், பாப்பா ஆகிய இருவரையும் இழுத்து வந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழமையாக இவ்விருவரையும் அருணாவும் சத்தியாவும் இம்முகாமுக்கு கொணர்ந்து மிக மோசமாகத் தாக்கிவிட்டு திரும்பக் கூட்டிச் செல்வது வழக்கம். ராசீக் என்பவன் மிகவும் நெஞ்சுறுதி கொண்டவன். எவ்வளவு அடித்தாலும் "நானும் ஆண்மகன்தான்ரா, போராடத்தான் வந்தவன். சாவுக்குப் பயப்படமாட்டன். நீ கொல்லுறதெண்டா கொல்லு" என்று எதிர்த்துக் கூறுவான். அவனை இனியில்லை என்ற அளவுக்கு அடித்து நொறுக்குவார்கள்.

இத்தடவை அழைத்து வரப்பட்ட போது முகாமிலிருந்த நிலைமையைப் பார்த்ததும் தமக்கு என்ன நேரப் போகிறதென்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது. "உங்களால என்ன செய்ய முடியும். சுடத்தான்ரா முடியும். நீங்கள் அழிஞ்சுதான்ரா போவியள். இருக்க மாட்டியளடா. எங்களை அவிழ்த்து விட்டுப் பாருங்கடா..." என்று கத்தி இழுபறிப்படுகின்ற சத்தம் கேட்டது. சத்தத்தோடு சத்தமாக வெடிகிளம்ப, ஐயோ ஐயோ என்ற ஓலம் எழும்பி படிப்படியாக ஓய்ந்து அடங்கியது.

அதையடுத்து அங்கு மௌனம் நிலவியது. அநேகமாக அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர். இரத்தம் கணுக்கால் அளவு உயரத்திற்கு இருந்தது. இரத்த வாடையும் வெடிமருந்து நாற்றமும் மண்டி இருந்தது.

அருணாவும் சத்தியாவும் இறந்த உடல்களை ஏற்றிச் செல்வதற்காக வாகனம் எடுத்து வர வெளியே சென்றனர். ஒரே அமைதி. சிறிது நேரத்தில் தலை நிமிர்ந்து பார்த்த தைரி உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மெதுவாக எழுந்து, பதுங்கியபடி குசினிக்குச் சென்று பின்புறமாக இருந்த கதவால் பாய்ந்து ஓடி அடுத்த வீட்டு வளவுக்குள் ஏறி விழுந்து தப்பிச் சென்றார். பின்புறமாக இன்னும் சிலர் தப்பிச் சென்றிருக்கக் கூடும். யார் யார் தப்பினார்கள் என்பது தெரியாது. ஆனால் முன்புறமாகத் தப்ப முயன்றவர்கள் சென்றியிடம் வெடிவாங்கி இறந்தார்கள்.

தைரி ஓடும்போது மீண்டும் வாகனம் வரும் சத்தம் கேட்டது. அநேகமாக உடல்களை அப்புறப் படுத்தவே வாகனங்களை அவர்கள் கொண்டு வந்திருக்க வேண்டும்.

இந்த உடல்கள் எங்கு புதைக்கப்பட்டன அல்லது எரிக்கப்பட்டன என்பது தெரியாது.

பிஷப் தலையை நான்கைந்து தரம் ஆட்டியபடி கூறினார்: "இல்லை என்னால் அதைச் செய்ய முடியாது" இவர் கெஞ்சிக் கேட்டார். "மனிதாபிமான அடிப்படையிலாவது, ஆண்டகையே!" அதற்கு பிஷப், "*No*" என்று கூறிவிட்டுச் சொன்னார்: "*Ask him to go to Sri Lankan army camp.*" (அவரை ஆமி காம்ப்பிற்குப் போய்க் கேட்கச் சொல்லும்) "தயவு காட்டுங்கள் ஆண்டவரே!" கெஞ்சிக் கேட்க, பிஷப் இல்லையெனக் கையைக் காட்டி விட்டு எழுந்து உள்ளே போய்விட்டார். இதற்குப் பின் என்ன செய்வதெனத் தெரியாத அவர்கள் யோசித்துவிட்டு, மற்றொரு பாதிரியாரை நாடிச் சென்றனர். அவர்தான் காலம்சென்ற ஃபாதர் ஜெபநேசன். அவரிடம் அவர்கள் நடந்தவற்றையும், பிஷப் அடைக்கலம் கொடுக்க மறுத்துவிட்டதையும் கூறினர்.

அவர் "நீங்கள் ஏன் பிஷப்பிடம் போனீர்கள்? அவர் மறுத்த பின் அவரை மீறி நான் ஒன்றும் செய்ய முடியாதே" என்றார். இதனையடுத்து இவர்கள் திரும்பிச் செல்லக் கிளம்பிய போது "இரும் இரும்" எனத் தடுத்த பாதிரியார் "நான் உங்களுக்கு ஏதாவது செய்தாக வேண்டும்" என்று கூறிவிட்டு, யோசித்தபடி சொன்னார். "இன்றைக்கு மட்டும் நான் இவரை வைத்திருக்கிறேன். நாளை இந்நேரம் வந்து கூட்டிக் கொண்டு போய்விடும். என்னை மன்னிக்கவேண்டும். இவ்வளவுதான் என்னால் செய்ய இயலுமாக இருக்கிறது" என்றார்.

"நீங்கள் இவ்வளவு தூரம் செய்ததே புண்ணியம்" என்று தைரியை பாதிரியாரிடம் ஒப்படைத்து விட்டு அவர் சென்றுவிட்டார். மறுநாள் கூட்டிச்செல்ல வந்தபோது பாதிரியார் அவரிடம் "நான் இன்னும் சில நாட்கள் இவரை என்னுடன் வைத்திருக்க முடியம்" எனக் கூறினார்.

இருப்பினும் வேறு ஒழுங்குடன் வந்திருந்ததால், துணிந்து உதவ வந்த அந்த பாதிரியாரை மேலும் சிரமப்படுத்த விரும்பாது, ஆபத்துக்கு உதவியமைக்காக நன்றி கூறிக்கொண்டு தைரியை அவர் அழைத்துச் சென்று, நம்பிக்கையான உறவினர் ஒருவர் வீட்டில் தங்க வைத்தார்.

இச்சம்பவத்துக்கான ஒரேயொரு சாட்சியமும் இன்று அவர்தான். அல்லது தைரியின் மரணத்தோடு இவ் உண்மை மறைந்து போயிருக்கும்.

இவை நடந்த சில மாதங்களின் பின் இலங்கை இந்திய ஒப்பந்தம் நடந்து இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வந்தது. அவர்களுடன் ஏனைய இயக்கங்களும் அவர்கள் பாதுகாப்பில் இலங்கைக்கு வந்திருந்தனர். அந்த வேளையில் மட்டக்களப்பில் திடீரென புலிகள் மறுபடி ஏனைய இயக்கங்களைச் சுட்டார்கள். அப்போது தைரி கல்முனையில் மணற்சேனையில் உள்ள தனது வீட்டில் வசித்து வந்தார். இந்தத் திடீர்த் தாக்குதலை அறியாதிருந்த அவரை, அங்கு வாகனத்தில் வந்த புலிகள் கோஷ்டியொன்று வெளியே அழைத்துச் சுட்டுக்கொன்றுவிட்டுச் சென்றது.

அத்தோடு ஒரு பேராபத்திலிருந்து இத்தனை சிரமப்பட்டு தப்பிப் பிழைத்த அவரின் கதை நினையாப் பிரகாரமாக முடிந்தது.

## பேராசிரியரின் சின்னப் புத்தி

1987 மார்ச் 30ம் திகதி மாற்று இயக்கத் தமிழ்க் கைதிகள் மீது புலிகள் மேற்கொண்ட படுகொலை நடந்தது.

அதற்கு இரு வாரங்களின் பின் 17-04-1987ல் லண்டனில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டார் ஒரு பிரசித்தி பெற்ற இலங்கை தமிழ்ப் பேராசிரியர். அவரிடம் புலிகள் செய்த இப்படுகொலை பற்றி அங்கிருந்த தமிழ் மாணவர்கள் அபிப்பிராயம் கேட்டார்கள். அதற்கு அவர் கூறிய பதில் இவ்வாறு இருந்தது:

"கிட்டுவுக்கு நடந்த தாக்குதல் உட்கட்சிப் பிரச்சினையால் ஏற்பட்டது என்ற வாதம் முற்றிலும் பிழையானது. இதனால் ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்களெனில் அவர்கள் யார், எங்கிருந்தார்கள், என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்றெல்லாம் பார்க்க வேண்டும்" என்று தனது அழகிய தமிழில் கூறினார் அப் பெரிய மனிதர். அவர்.... பேராசிரியர் சிவத்தம்பி.

அவரிடம் சில வார்த்தைகள்.... ஐயா பெரியீர்! தங்களது கருத்துச் சுதந்திரத்திற்கும் உரிமையுண்டு; (பொய்யான) கருத்தை உருவாக்கிக் கொடுக்கும் சுதந்திரத்துக்கும் உரிமையுண்டு. கொலைகளை நியாயப்படுத்த, கொன்றவர்களுக்கே தெரியாத நியாயங்களை எடுத்தியம்பவும் உரிமையுண்டு - இச்சுதந்திரங்கள் கொல்லப்பட்டவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தாலும் கூட!

ஆனால் ஐயா இக்கொலைகளில் தாங்கள் மிக முக்கியமானதாகப் பார்க்க வேண்டியதாகச் சொன்ன அந்த விடயங்கள்.. யார் எங்கிருந்தார்கள், என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது பற்றி ஒரு சிறிய விளக்கம். அவர்கள் வேறு யாருமல்ல. இந்த மண்ணின் தமிழ்த் தாயின் புத்திரர்களே! புலிகளையும் தங்களையும் பெற்ற அதே தாயின் புத்திரர்களே!

அவர்களுக்கு உங்களைப் போல் பல்கலைக்கழகமேறி பேராசிரியராகி விரிவுரைகளையும் விளக்கங்களையும் வழங்கும் ஆர்வமின்றி, ஏதோ தமிழ் மக்களின் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்தில் இணைந்து உடலையும் உயிரையும் வழங்க முன்வந்தவர்கள் என்பது உங்களுக்கு சற்றுக் கீழ்த்தரமாகத் தோற்றமளித்திருக்கலாம்.

அவர்கள் எங்கேயிருந்தார்களென்று கேட்டீர்களல்லவா? அவர்கள் ஒடுக்குமுறைக்கு அஞ்சியும், பிழைப்பைத் தேடியும் வெளிநாடுகளுக்கு ஓடாது, அல்லது படித்த கனவான்களாக உலக நாடுகளுக்குச் சுற்றித் திரியாது இதே மண்ணில் காடுகரம்பைகளில் உழன்று எல்லா நெருக்கடிகளிலும் மக்களோடு மக்களாக இருந்தவர்கள்.

தாமுண்டு, தமது வேலையுண்டு என்று இருக்காது படித்துப் பட்டம் வாங்க எண்ணாது, தமது மணமாகாத சகோதரிகள், வறிய பெற்றோர், மனைவியர் பற்றி எண்ணாது தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

அத்தோடு ஐயா, அவர்களோடு அடைக்கப்பட்டிருந்து கொல்லப்பட்ட பொதுமக்கள் செய்த தவறுகளையும் கண்டுபிடித்து அவற்றையும் நீங்கள் நியாயப் படுத்தியிருக்கவேண்டும்.

அதுசரி, தாங்கள் இப்படி ஒரு பச்சைப் படுகொலையை "வெள்ளை"யாக்க முனைந்ததற்கு வெகுமதியாக, ஹிட்லர் தனது ஆலோசர் கோயபெல்ஸுக்கு வழங்கிய பதவியைத் தங்களுக்கு தருவதாகச் கொலையாளிகள் சொன்னார்களா? ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நண்பனே!
அன்று, இன்றைய தினத்தில்
இரத்த வெறிபிடித்த தோட்டாக்கள்
உன்னைத் துளைத்த செய்தி
எங்கள் நெஞ்சங்களை
சல்லடையாக்கியது.
அன்றிலிருந்து நாங்கள் வெறுப்பது
மரண வெறிபிடித்த
துப்பாக்கிகளை மாத்திரமல்ல
உயிருக்குப் பயந்து
மௌனமாகிப்போன
பேனாக்களையும்தான்

- உமாகாந்தன்



## தேடிச் சென்ற உறவினர்க்கு புலிகள் அளித்த பதில்

கல்லுண்டாய் பகுதிக்குக் கொண்டு போய் எரித்தாகச் சிலர் கூறுகிறார்கள். ஆனால் சம்பவ தினமன்று காலை கைதிகளைக் கொண்டு பாரிய ஒரு குழி வெட்டுவித்தார்கள். இது மலசலகூடத்துக்கான குழி என்றே அவர்களுக்குச் சொல்லப்பட்டது. இது இவர்களைப் புதைப்பதற்கானதாக இருந்தால், கிட்டு தாக்கப்படுவதற்கு முன்னரே இக்கொலைத் திட்டம் தீட்டப்பட்டதாக இருந்திருக்க வேண்டும். கிட்டு மீதான தாக்குதல் அக்கொலைத் திட்டத்தை அன்றே நிகழ்த்த வழி செய்திருக்கலாம். எவ்வாறாயினும் சுமார் 60 தமிழ் இளைஞர்கள் அந்த ஒரே இரவில் ஒரு வீட்டிற்குள் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட வரலாற்றுக் கறை... எப்படி எம்மவரால் நியாயப்படுத்த முடியும்?

இப்படியொரு படுகொலைச் ... பவம் நிகழ்ந்ததை எப்படியோ அறிந்... கைதிகளின் உறவினர்கள் சில... லிகளின் முகாம்களுக்குச் சென்று வினவினர். அப்படிக் கேட்டபோது புலிகள் பதிலளித்த முறை இப்படித்தான் இருந்தது. (அவ்வாறு கேட்கச் சென்ற ஒருவர் கூறியது இது.)

**புலிகள்:** கைதிகள் கொஞ்சப் பேர் தப்பியோடப் பார்த்தவை. அவையளைத் தடுக்க சுடுபாடு நடந்ததில கொஞ்சப் பேர் செத்தவை.

**உறவினர்:** (ஒருவரது பெயரைக் குறிப்பிட்டு) அவருக்கு என்ன நடந்தது?

**புலிகள்:** அவரில்லை.

**உறவினர்:** இல்லையென்றால்... செத்திட்டாரோ?

**புலிகள்:** ஓம்!

**உறவினர்:** அப்ப பொடியை (உடம்பை) யாவது தாங்கோ. தாய், தகப்பனுக்கு அனுப்ப வேணும்.

**புலிகள்:** (உறுக்கி) அப்ப இருங்கோ...

'போனவர்கள் நீண்ட நேரமாகப் பதிலேதும் சொல்லாதிருக்கக் கண்டு, அவ் உறவினர்கள் உள்ளே போய் மீண்டும் அவர்களைக் கேட்டனர்.

**உறவினர்:** தம்பி, ஒண்டும் பேசாமல் இருக்கிறியள்.

**புலிகள்:** உங்களுக்கெல்லே சொன்னனாங்கள் ஆள் இல்லையெண்டு.

**உறவினர்:** பொடியல்லே கேட்டனாங்கள்.

**புலிகள்:** நாங்கள் எரிச்சுப் போட்டம்.

**உறவினர்:** (சற்றுக் கோபத்துடன்) அப்ப எழுதித் தாங்கோ, இப்பிடி நடந்திட்டுதெண்டு.

புலிகள் முறைத்துப் பார்க்க, ஏனையோர் விபரீதத்தை உணர்ந்து அவ்வுறவினர்களை சாந்தப்படுத்தி திருப்பி அனுப்பி வைத்தனர்.

இங்கே மனுக்கள், முறைப்பாடுகள், நீதிமன்றங்கள், விசாரணைகள், விசாரணைக் கமிஷன் எதுவுமில்லை. இந்தப் பதிலோடு விடயம் முடியவேண்டியதுதான். ●

**வரலாற்றின் ஓட்டத்தில் நம் அசிங்கங்களெல்லாம் கழுவப்பட்டு நியாயவாதிகளாகி விடுவோம் என்றே பலர் மனப்பால் குடித்து வருகிறோம். இன்னும் சிலர் 'நாமும் கொடுமை புரிந்தோம்' என்ற உண்மையை வரலாற்றில் மறைத்துவிட விரும்புகிறோம். இந்த மறைக்கும் செயலில், மகா உத்தமர்களாக தம்மை வெளிக்காட்டிக்கொள்ளும் பெரும் பெரும் கல்விமான்கள்கூட ஈடுபடத் தவறவில்லை. உண்மையில், சாதாரண மக்களைவிட இவர்களே எம் சமூகத்தின் மனசாட்சியை பெரிதும் அசிங்கப்படுத்துபவர்கள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**துரோகியெனத் தீர்த்து**
**முன்னொரு நாள் சுட்ட**
**வெடி**
**சுட்டவனைச் சுட்டது**
**சுடக் கண்டவனைச்**
**சுட்டது**
**சுடுமாறு**
**ஆணையிட்டவனைச்**
**சுட்டது**
**குற்றஞ்சாட்டியவனை**
**வழக்குரைத்தவனை**
**சாட்சி சொன்னவனை**
**தீர்ப்பு வழங்கியவனைச்**
**சுட்டது**
**தீர்ப்பு ஏற்றவனைச்**
**சுட்டது**
**சும்மா இருந்தவனையும்**
**சுட்டது.**

**- *சிவசேகரம்***


கந்தன் கருணை காரியாலயத்தின் இன்றைய நிலை

*புலிகள் சுமார் 60 ஏனைய இயக்க, மற்றும் பொதுமக்களை ஒரே இரவில் படுகொலை செய்த அந்தக் குரூர சம்பவம் நிகழ்ந்த இடம் நல்லூரிலுள்ள 'கந்தன் கருணை' எனும் வீடெனப் பலர் தவறாகக் கருதி வருகிறார்கள். அதனால் இச்சம்வத்திற்குப் 'கந்தன் கருணைப் படுகொலை' என்ற பெயர் நிலைபெற்றுவிட்டது.*
*'கந்தன் கருணை' என்ற வீடு புலிகளின் ஓர் அலுவலகமாகப் பாவிக்கப் பட்ட வேறொரு வீடு. ஆனால் சம்பவம் நடந்த வீடு யாழ். இந்துக் கல்லூரிக்கும் யாழ். மகளிர் கல்லூரிக்கும் இடையே இருந்தது.*

*அந்த வீட்டில்தான் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் தற்போதைய பிரதம ஆசிரியர் வித்தியாதரன் தற்போது வசித்து வருகிறார். அவருக்கும் இது தெரியும். அவர் சிலரிடம் "இன்னும் எனக்கு இங்கே நடந்த படுகொலைகள் பற்றிய பிரமை இருக்கிறது. இறந்தவர்களெல்லாம் இங்கே உலவுவது போன்று தோன்றுகிறது. நான் சாந்தி (பரிகார பூசை) செய்துவிட்டுக் குடியிருக்கிறேன்" என்று கூறியுமுள்ளார்.*

*புலிகளின் 87' மார்ச் 30 படுகொலையின்போது நேரடியாகக் கொலையில் ஈடுபட்ட அருணா, சத்தியா ஆகிய இரு புலி உறுப்பினர்களும் இப்போது புலிகளில் இல்லை. அருணா என்பவன்தான் விஜயகுமாரதுங்கவின் முயற்சியால் 86 டிசம்பர் 22ம் திகதி இரு இராணுவ வீரர்களை புலிகள் விடுவித்ததற்குப் பதிலாக அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்ட இரு புலி இயக்கக் கைதிகளில் ஒருவன். (மற்றவன் காமினி என்பவன்). அருணா பின்னர் ஐ.பி.கே.எப். உடனான மோதல்களின்போது மதில் பாய்ந்து ஓடும் போது சுட்டுக் கொல்லப்பட்டான். மற்றைய கொலையாளியான சத்தியா முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆதரவாளராக இருந்து, பின்னர் டெலி எனும் இயக்கத்தில் சேர்ந்து, அதன் தலைவர் ஜெகனுடன் அவ்வியக்கம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதையடுத்து வெளிநாடு சென்று அங்கிருந்து புலிகளில் சேர்ந்து பின் மீண்டும் இலங்கைக்கு வந்து புலிகளின் யாழ் உளவுப் பிரிவின் பொறுப்பாளர் வாசுவின்கீழ் இயங்கியவன். இக் கொலைகளின் சில காலத்தின்பின் புலிகளிலிருந்து ஒதுங்கி, மூளை குழம்பிய நிலையில் போதைப் பொருள் பாவித்துக்கொண்டு யாழ்ப்பாணத்தில் திரிந்தான். அதன் பின் வெளிநாடு சென்றுவிட்டான்.*

*1983 ஜுலைக் கலவரத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்த குட்டிமணி, தங்கதுரை உட்பட 53 தமிழ் அரசியற் கைதிகளை 23, 25ம் திகதிகளில் இரு முறை படுகொலை செய்தது அன்றைய அரசாங்கம். அதனை நாம் இலங்கை அரசின் கொடுஞ் செயலுக்கு எடுத்துக்காட்டாக உலகெங்கும் பிரசாரம் செய்தோம். அச்செயலைக் கண்டித்து எத்தனையோ கட்டுரைகளும் கவிதைகளும் வெளியாகின. (அமுது 1999 ஜுலை இதழிலும் அக்கொலை பற்றி விபரித்திருந்தோம்) ஆனால், எம் விடுதலைப் போராளிகளாலேயே, விடுதலைப்போராட்டத்துக்கென முன்வந்த ஏனைய இயக்க உறுப்பினர்களும் அவர்களுடன் அடைக்கப்பட்டிருந்த பொதுமக்களுமாக 60ற்கும் மேற்பட்டோர் ஈவு இரக்கமின்றி ஒரே இரவில் சகட்டுமேனிக்கு ஒருவர் மாறி ஒருவராகச் சுட்டுக் கொல்லப்பட்ட கொல்லப்பட்ட கொடுமை பற்றி யார் வினவினர்? யார் எழுதினர்? யார் கவிதை செய்தார்? இது வெலிக்கடைச் சிறைப்படுகொலையை விடக் கொடூரமான ஒன்றல்லவா? எம்மவராலேயே செய்யப் பட்டதல்லவா? இன்று காணாமற் போனோர் பற்றி நாம் அரசாங்கத்திடம் நியாயம் கோரிப் போராடுகிறோம். அன்று இரவோடிரவாகக் கொன்று புதைக்கப்பட்டோருக்காக யார், என்ன போராட்டம் நடத்தினார்கள்?*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தொடக்கம்

எப்போது என் வாழ்வு
தொடங்கிற்று?
அன்னையின் கருவறை விடுத்து
வந்த பொழுதா?
அன்றியும் -
அம்மாவின் முலையில்
பால் உறிஞ்சிய பொழுதா?
எப்பொழுதுதான் தொடங்கிற்று!
"அ" எழுத கை விரலை
அண்ணன் மணலில் போட்டுத்
தேய்த்த பொழுதா?
பள்ளிக்குக் கள்ளப்பட்டு
பற்றைக்குள் ஒளித்த பொழுதாயினும்
முதன் முதலில் சுயமாய்
ஏதோ ஒன்றை பெற முயன்று
முடிவில் மனம் சஞ்சலப்பட்டு
என்னை நான் வெட்கப்பட்டநேரம்
காதல் என்று
நடுத்தெருவில் நாதியற்று
கிடந்த நேரத்திலும்
எல்லாம் துறந்து,
எல்லாம் மறந்து,
கனவாகிக் கலைந்த பொழுதா?
கற்பனைகளுடன் காலம் முழுதும்
வாழ்ந்த பொழுதாயினும்

தொடங்கும் என் வாழ்வு தொடங்கும்
அந்தி சாயும் நேரம் - என் தேகம்
செந்தீயில் எரியும்போது.

**- புலோப்பளை கோகுலராகவன்**



## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் பிறப்பிடம்
இலண்டன் இப்போ வசிப்பிடம்
சைவ வேளாள உயர்குலம்
மணமகள் தேடுவதும்
அதே குலம்

ஐந்தடி ஏழங்குலம்
வயது இப்போ முப்பத்தாறு
கறுப்பு நிறம் ஆயினும்
சைவ வேளாள உயர்குலம்

இலண்டன் வந்து பத்து வருடம்
இங்கிலாந்தின் குடிமகன்
பெற்றோல் நிரப்பும் நிலையத்தில்
காசாளராக உத்தியோகம்
காசாளர் என்று சொன்னால்
கக்கூசும்தான் கழுவவேணும்
தரையும் கூட்டித் துடைக்க வேணும்
என்ன வேலை செய்யினும்
மணமகன் சைவ வேளாளர்

அலுப்பு வந்தால் குடிப்பதுண்டு
ஆசை வந்தால் படுப்பதுண்டு
என்ன பழக்கமிருப்பினும்
சைவ வேளாளர் உயர்குலம்

மணமகள்,
அழகில் சற்றுக் குறைந்தாலும்
படிப்பில் மட்டம் என்றாலும்
உயரம் குறைவு ஆயினும்
சைவ வேளாளப் பெண் என்றால்
விண்ணப்பிக்கத் தடையில்லை.

ஒழுக்கம் இருந்தால் நல்லது
ஆங்கிலம் தெரிந்தால் நன்று
சீதனம் ஒரு தடையில்லை
ஆனால்
சாதி.... மிகவும் கவனம்.

**- சின்னத்தங்கச்சி**



## சுமைகள்

**தலைமேல் கற்களைச் சுமந்தபடி**
**என் அப்பா போகும்போது**
**மீசையைத் திருகியபடி கங்காணி சொல்வான்**
**'டேய் கிட்ணையா**
**அருமையான ஒரு லாவணி பாடுடா'**
**என் அப்பா பாடுவார்**
**பச்சை குத்திய கழுத்து நரம்புகள் புடைக்க!**
**அவருடைய பாட்டில்**
**நிலவு வரும், சூரியன் வரும்,**
**பூக்கள் மலரும், கடல் அலைகள் எழும்,**
**காதல் போதைமிக்க கன்னியும் வருவாள்.**
**வியர்வைக் கறை படிந்த**
**கரங்கள் கை தட்டும்**
**எங்கும் ஒரே பாராட்டு ஒலியெழும்**
**என் அப்பா நெகிழ்ந்து**
**நன்றிப்பெருக்கில் தத்தளிப்பார்**
**வீட்டுக்குத் திரும்பும்போது**
**சோற்றுப்பாட்டோடு மல்லாடுவார்**
**அந்தப் பாட்டில் அவர் வென்றதே இல்லை.**

**- பீம்சென் தேதே (மராட்டி)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிறுகதை

வ. சசிகுமார்
சுன்னாகம்

# இதுவும் சங்கமம்

வண்டில் ஊரெல்லையிலுள்ள பழைய இடிந்த குடிசையை அடைந்தது. வண்டிலை நிறுத்திய செல்லையா வண்டிக்குள் இருந்தவரை நோக்கி, "ஐயா, நீங்க சொன்ன இடம் வந்திட்டுது. மெல்லமா இறங்குங்கோ'' என்றான்.

வண்டிலினுள் முகத்தை முழங்காலில் புதைத்திருந்த முருகேசர் மெதுவாக தலையை நிமிர்த்திப் பார்த்தார். கண்ணீரினால் கழுவப்பட்ட முகம் கவலையில் தோய்ந்திருந்தது. தள்ளாடியபடி மெதுவாக இறங்கி, சரிந்த உத்தரீயத்தை சரிப்படுத்தி வெற்றிலையை வாய்க்குள் போட்டுக் கொண்டு,

"செல்லம்.... இஞ்ச வா...''

"என்னய்யா...''

"திரும்ப நீ வர வேண்டாம்... வண்டில கொண்டு போ.. நான் பிறகு வாறன்''

"ஐயா வீட்டில உங்களத் தேடுவாங்கள்...''

"ம்... நீ போ... நான் வாறதாம் எண்டு சொல்லிட்டு கொஞ்சம் றெஸ்ட் எடு''

"சரிங்க''

செல்லையா வந்த வழி திரும்பினான்.

முருகேசர் சென்று திண்ணையில் அமர்ந்தார். பழுதடைந்திருந்த அச்சிறு குடில்மீது தன் கண்களை ஓடவிட்டபடி புன்னகை செய்தார். அவர் மனதின் சோகம் புன்னகையைக் கசப்பாக்கியது. வெற்றிலைப் பையை நடுங்கிய விரல்களால் எடுத்து விரித்தார். அதற்குள் பத்திரமாக இருந்த படம் கண்ணுக்குள் வேல் பாய்ச்சியது போன்ற துன்பத்தைக் கொடுத்தது. இரு ஜீவன்களின் பிரிவு, மனதிற்குள் எரிமலையைக் கக்கியது. படத்தை நோக்கியபடி மௌனமானார்.

"அப்பா எனக்கு கலியாணம் எண்டால் அந்த லதாவோடதான். இல்லாட்டி என்னை நீங்கள் உயிரோடு பார்க்க முடியாது''

மகனின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் முருகேசரின் மனதை குத்தி மிக்க வேதனையைக் கொடுத்தது.

'சே... அதுகள் ஏதோ ஆசைப்பட்டுதுகள்... தப்பில்லையே... ம்... ஏன் நான் இதை அப்போது நினைக்கேல்ல... இதற்குப் போய் அடி தடி எண்டு இறங்கி... மனைவியை மட்டுமன்றி, அந்தப் பிஞ்சுகளையும் இழந்துவிட்டிருக்கிறன். அந்த ஜீவன்களை... உயிரோட இருக்கேக்க சேர்க்காமல்... ம்... நான் செய்ததுதான் அநியாயம். இதுக்கு ஆர் தண்டனை கொடுத்தாலும் எனக்கு அடங்காது' தனக்குள்ளே புலம்பிக் கொண்டு படத்தை உற்று நோக்கினார். 'கடவுளே...!' அருமை மகனின் எழிலை படத்தில் காணும் போது, எல்லையற்ற துன்பத்தில் மிதந்தார்.

00 00 00

முருகேசருக்கு ஒரே மகனான சந்திரன் சிறு வயதில் தாயை இழந்து, தந்தையின் அன்பிலும், அதிகாரத்திலும் வாழ்ந்தான். கண்டிப்பு அதிகம்தான். தாயுடன் இருப்பது போல வருமா?

லதாவை பல காலமாக காதலித்தாலும், குடும்ப கௌரவம் என்ற தடையால் இருவரும் தவியாய்த் தவித்தார்கள்.

இக் காதல் செய்தி பரவி, அதனால் இரு குடும்பமும் அடிதடி என்று களத்தில் இறங்கியது. இதற்கு மத்தியிலும், காதல் வளர்ந்தது.

"அப்பா... பள்ளிக்கூடம் போறன்.. நான் வர லேற்றாகும். நீங்கள் என்னைப் பார்க்காமல் சாப்பிடுங்கோ''

"அப்படி என்ன பெரிய வேல உனக்கு...?'' என்று கத்த ஆரம்பித்தவர் சுதாரித்துக்கொண்டு, "ம்... என்ர நம்பிக்கைய காப்பாத்தினா சரி... போயிட்டு வா...'' என்றார். சந்திரன் குற்றவுணர்ச்சியோடு அந்த இடத்தை விட்டு அகன்றான்.



அவனுக்காக காத்திருந்த லதா... கவலையுடன், "சந்து... எங்கட அப்பா, அம்மா... என்ன புதைகுழியில் தள்ள முடிவெடுத்திட்டாங்கள்... வெளிநாட்டு மாப்பிள்ளையாம் ஒசில பெண் கேட்கிறானாம்... உடனே திருமணத்தை செய்யப் போறானாம். எப்படி சந்து... உங்கட நினைவோடு இன்னொருத்தருடன் வாழுறது...? சந்து... என்னால உங்கள விட்டு உசிரோட இருக்க முடியாது'' எனக் கண்ணீர்த் துளிகளைக் கொட்டினாள்.

"ஏய்... லதா... உனக்கு பயித்தியம்... என்னால மட்டும் உன்னை விட்டுட்டு இருக்க முடியுமா?'' அவள் கரங்களை ஆதரவாகப் பற்றினான்.

நாட்கள் சென்றன. காதல் பிரிக்கப்பட்டு, அடிதடி, வெட்டு என்று இரு குடும்பத்தாரும் இறங்கினர். மகன் வெறும் பொம்பிளையை எடுக்கப் போறானே என்ற தந்தையின் ஏக்கம் சுயநலத்தை நோக்கி இருந்தது. "முடியாது. சந்திரனுக்கு நாளைக்கே கலியாணம்'' என்றார் முருகேசர்.

காதலர் தனிமையில் சந்தித்தனர். "நாளை விடிஞ்சதும், பழையபடி அடி தடி எண்டு அவங்கள் குதிக்கப் போறாங்களே... அதை நினைக்க எனக்கு கவலையாய் இருக்கு...''

"என்ன லதா... நீ சொல்றe...''

"இந்தப் பிரச்சினையை நிப்பாட்டுவதற்கு ஒரு வழி இருக்கு சந்து''

"என்ன சொல்லன்''

"நாங்கள் பிரிவதுதான் சரி...''

"லதா...'' சந்திரன் கத்தியே விட்டான்.

"சந்து என்னை மன்னிச்சுக் கொள்... இஞ்ச பார்.. எங்களால உயிர்கள் ஏன் பலியாகவேணும்? சிந்தித்துப் பார்''

சந்திரன் அமைதியாக இருந்தான். சற்று நேரத்தின் பின் இருவரும் திடமான முடிவோடு பிரிந்து சென்றனர்.

பிறருக்காக அன்றி தம் சொந்த சுயநலத்திற்காக, தம் இச்சைக்காக வாழும் அந்தச் சமுதாயம், இவர்களைக் கண்டதும் சண்டையை நிறுத்தினர். அதுமட்டுமன்றி 'பெற்றோரின் விருப்பத்திற்கு இசைவோம்' என்ற வார்த்தைகளும் அவர்களுக்கு தேன் போன்று இருந்தது.

00 00 00

இருள் பாய்ந்து விட்டது. ஊர் எங்கும் அமைதி. திடீரென அலறல் சத்தம். இரு வீட்டிலிருந்தும்தான் வந்தது.

அந்த இரு காதலர்களும் இறந்து கிடந்தார்கள். பக்கத்திலே சிறு கடிதம்...

"அம்மா... அப்பா... நாங்கள் உயிரோடு சேருவதற்குத்தானே நீங்கள் விரும்பவில்லை. உயிர் இல்லாத சடலங்களை நிச்சயம் சேர்த்து வைப்பீர்களென நினைக்கிறோம். அதுவே எமது இறுதி ஆசை..''

பார்த்தவர்கள், கேட்டவர்கள் உருகி அழுதார்கள். தவறுகள் நெஞ்சில் பலமாகக் குத்த... தம்மையே அடித்தழுதார்கள். அந்த சோகக் காட்சியைக் காணச் சகிக்காமல் மீண்டும் எல்லோர் கண்களையும் அந்த இருள் மறைக்க, காதலர் இருவரும் ஒன்றாகத் தீயில் கலந்து சங்கமமாகிக் கொண்டிருந்தார்கள். ●

www.tamilarangam.net



அதுவரை இருந்த ரூமைக் காலி செய்யச் சொன்னதால், பேப்பர் விளம்பரம் பார்த்து இந்த "வயலட்" என்ற மனுஷியின் வீட்டையொட்டிய 'அனெக்ஸ்' வந்து ஏறத்தாழ எட்டு வருடமாகிவிட்டது.

வயலட் புருஷனை துரத்தி விட்டவள் என்பது சில நாட்களில் புரிந்தது. பதினாறு வயதில் அவள் மகளும் ஒரு பறங்கிப் பயலை வீட்டோடு கூட்டி வந்து விட்டிருந்தாள். வயலட்டின் தகப்பன் பயங்கர இருமல் வாதி. விடிய விடிய இருமினாலும் செத்துப்போன அந்தாளின் பெண்டாட்டியின் பென்ஷனும், காலால் மிதிக்கிற பிரிண்டிங் மெஷினும் வைத்துக் கொண்டு அவனும் பிறிதாக ஒரு அனெக்ஸில் இருந்தான்.

எப்படியும் ஆபிஸ் முடிந்து நண்பர்களோடு தண்ணி போட்டு விட்டு என் ரூம் திரும்பும் போது அநேகமாக மணி பன்னிரண்டைத் தாண்டிவிடும். எல்லாம் வழமை போல நடந்து கொண்டிருந்தது. கிழவன் நான் வரும்போது இழவே என்று விழித்துக்கொண்டிருந்தான் என்றால் என் பாடு பெரும்பாடுதான். 'என்ன இவ்வளவு லேட்டாகி வரலாமோ? ஊர் கெட்டுக் கிடக்குது. தினமும் குடிக்க வேறு செய்கிறாய்?' என்று மனுஷன் அறுத்துத் தள்ளி, போதாக்குறைக்கு என்னிடமே சிகரட் வாங்கிப் பத்திக் கொண்டு, ரூமில் இன்னும் ஒரு மணித்தியாலம் உட்கார்ந்து, என்னுள்ளிருக்கும் அற்புதத் திராவகம் வற்றிக் காற்றோடு கலந்து, தூக்கத்தை துவம்சமாக்கும் மட்டும் கதையோ கதையென்று கதைத்துத் தள்ளிவிடுவான்.

அதனால் எப்போதும் நான் வரும்போது கேட்டை சத்தமில்லாமல் திறந்து மூடி ரூமுக்குள் நுழைந்து அமானுஷ்யமாய் உறங்கிப் போய்விடுவதை வழக்கமாக்கிக் கொண்டதால், எந்தப் பெரிய கேட், பூட்டு என்றாலும் சத்தமின்றி திறந்திடும் அலிபாபா கலையை நாளடைவில் கைவரப் பெற்றேன்.

**எந்தப் பெரிய கேட், பூட்டு என்றாலும் சத்தமின்றித் திறந்திடும் அலிபாபா கலையை நாளடைவில் கைவரப் பெற்றேன்.**

**எப்படியோ எல்லாமே ஒரு சிஸ்டத்தில் நடந்தேறிக் கொண்டிருந்தபோது தான் அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது....**



எப்படியோ எல்லாமே ஒரு சிஸ்டத்தில் நடந்தேறிக் கொண்டிருந்தபோதுதான் அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது.

கட்டையாய் நீட்டமாய் வளர்ந்தபின் தோன்றும் மேற்குலக, அதி விலையுயர்ந்த பிராணியொன்று சுத்தமாக 'சும்மா' கிடந்தது என்று அந்தப் பறங்கிப் பயல் ஒரு நாய்க் குட்டியை வீட்டுக்கே கொண்டு வந்து கிழவனிடமும் வயலட்டிடமும் காட்ட வயலட் வீறிட்டலறி வெகுண்டெழுந்து அவனை வைய, வழமைபோல ஊத்தைப் பேச்சுப் பேசி வயலட்டின் ஜீவ காருண்யமின்மையை இகழ்ந்த கிழவன், அந்த நாய்க்குட்டியை அள்ளியணைத்து படுபாவி அன்னைக்கு அன்னையாய், தந்தைக்குத் தந்தையாய் வளர்க்கத் தொடங்கிய நாளிலிருந்து பிடித்தது எனக்குச் சனி.

பெயரில்லாத அந்தப் பிசாசானது, நாளொரு பொழுதும், பொழுதொரு வண்ணமுமாக வளர, வளர ஒன்றரையடி உயரத்தில் சுருண்ட வாலோடு சகிக்க முடியாத முகத்தோடு வளர்ச்சி நின்று போய்விட, கிழவனுக்கு இது சாதாரண 'வள்' பல்லா என்னும் பற நாய் என்பது தெரிந்து போனது. குட்டியாக இருந்த போதே இந்தச் சனியன் இதுதான் என்று நான் கூறியதை கேட்டானா! வேண்டும்! இருப்பினும் கிழவனின் 'லௌ' நாயின் 'வள்வள்'ளோடு ஒன்றிப் போனதால் அது வீட்டிலேயே இருக்கக்கூடிய பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டது.

எவ்வளவுதான் சத்தமில்லாமல் கேட்டைத் திறந்தாலும் அந்தப் பகுதியே கிடுகிடுக்குமளவுக்கு அது கத்தித் தள்ளிவிடும். பிறகென்ன... கிழவன், அட்வைஸ், சிகரெட்.... என் தூக்கம் அதோகதி.

நானும் இந்தக் குட்டிச் சாத்தானை வசப்படுத்த எத்தனையோ கைங்கரியம் பார்த்தாகி விட்டது. இறைச்சிப் பார்சல், சப்பாத்தால் அடி, உதை, ஸ்டூல் ரூலரால் தலையில் அடி (பைத்தியமாவது பிடிக்கட்டுமே என்று) எதுவும் பயனளிக்கவில்லை. அடி உதைகளைக் கூட கிழவன் இல்லாத பகல் நேரங்களில்தான் அரங்கேற்றுவேன்.

இதில் வேறு அதன் காதில் இந்த உலகையே அழிக்குமளவுக்கு உண்ணிகள்.... அதன் கழிவுப் பதார்த்தங்களும், திரவமும் ஒரு புதுவித உணர்வையும் அளித்துக்கொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாயகர்

காலம் இவ்வாறு என்னையும் என் சுதந்திரத்தையும் இங்கிலீஸ்காரன் இந்தியாவைப் பிடித்துக் கொண்டிருந்த மாதிரி, பீடித்துக் கொண்டிருந்த வேளையில், எங்காத்தாள் குஞ்சாலம்பட்டி கருமாரிக்கு நான் வேண்டிக் கொண்டதாலோ என்னவோ அந்த ஒரு மாற்றத்தை ஏற்படுத்தித் தந்தது.

''நாய் சீசன், நாய் சீசன்'' - என்பார்களே, (நாய் பஸ்ஸில் போகும் சீஸனல்ல) நாய்களுக்கு மூட் வந்து பெட்டைகளை தேடும் சீசன் அது. பலதரப்பட்ட நாய்கள் ஒன்றாகப் பாதையோரம், நடுவே, வீடு, வீட்டின் முன், பின் என்று காணும் திசையெல்லாம் கற்பழித்துக்கொண்டிருந்தன.

எங்கள் கேட் எப்போதுமே பூட்டப்பட்டும், எங்கள் இளவரசி எப்போதுமே கட்டப்பட்டுமிருப்பதால் கேட்டின் அடிவாரத்தில் மூக்கை நுழைத்து, பழசாகிப் போன ஒரு பாதையோர கிழட்டு, நல்ல ரசிகன் என்றியம்பி, கேட்டை மூடாமல் திறந்து வைத்துவிட்டு அந்த பாதையோர கண்ணாளனுக்கு உட்பிரவேசித்து உல்லாசம் காண வழி வகுத்தேன்.

அடுத்த நாள் காலை அசிங்கமான நிலையில் இருவரையும் கிழவன் கையும் களவுமாகக் கண்டு, குய்யோ முறையோ எனக் கதறி, (நான் கண்ணுறங்குவது போல பாசாங்கித்தேன்) மூர்க்கமான முறையில் அவ்விருவரையும் பிரித்து பாதையோர கண்ணனை இடம் கடத்தினான். உன் குடி போதையால் நடந்த இந்தக் கொடூரமான பாலியல் வன்முறைக்கு எவ்வாறு பரிகாரம் செய்வாய்? என என்னையும் வைதான்.

இந்த துர்ப்பாக்கிய செயலுக்கு நான்தான் பொறுப்பென்றாலும், ஒரு இளம் பெண்ணுக்கு வாழ்வளித்த பாக்கியம் எனக்கு என்பதால் நான் அவ்வளவாக அலட்டிக்கொள்ளவில்லை.

- 'வள்'ளுவன் -

ஆனால் படு அனுபவசாலியான ஒரு நாய் தினமும் மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தது. கிழவனுக்கு அதைக் கண்டுவிட்டால் படுகோபம். கல்லால், கம்பால், சொல்லால் இன்னும் பல அஸ்திரங்களால் துரத்து துரத்தென்று துரத்தியே விடுவான்.

இந்த வேளையில்தான் என் புத்திக்கு அந்த யோசனை தோன்றியது. ஒரு பெண், வயது வந்த குமரி இப்படி சிறைப்பட்டால்... அது எவ்வளவு பாவம்? என்னே உலகமடா என்று அது இதுவென அங்கலாய்த்து, ஒரு நாள் போதையின் உச்சஸ்தாயில், காருண்யம் பெருக்கெடுத்து, கண்களில் தாரை தாரையாக வழிய, நான் அது குரைப்பதைக் கணக்கில் எடுக்காமல், பூட்டைப் போட்டு கேட்டைப் பூட்டுவதைத் தவிர்த்து போடா வருவது வரட்டும் என்பவனே

ஆனால் கிழவன், அதுமேல் அதுநாள் வரையும் வைத்திருந்த பாசம், அன்பு, நம்பிக்கை எல்லாம் தவிடுபொடியானதால் அதை தினமும் பிரம்பால் சம்ஹாரம் பண்ணத் தொடங்கிவிட்டான்.

இங்கே கொடுமை அதிகரிக்க அதிகரிக்க அதுவினதும் கண்ணாவினதும் காதல் ஜெகஜோதியாய் எரியத் தொடங்கியது. நானும் பகல் நேரம் இதற்கென ஆபிஸ் லீவு போட்டு கேட்டைத் திறந்து மூடி, மூடித் திறந்து என்னாலான உதவி ஒத்தாசைகளை கைமாறு கருதாது செய்து வந்தேன். என் பிரார்த்தனை, கனவு, எதிர்பார்ப்பு, எதையுமே வீணாக்கிவிடாது ஒரு நல்ல நாளில், நல்ல திதி, முகூர்த்தம், லக்னத்தில் ''அது'' கண்ணாவோடு சங்கிலியையும் அறுத்துக்கொண்டு (நான்தான் கழற்றிவிட்டது கிழவனுக்குத் தெரியாது) ஓடியே போய்விட்டது. கிழவனுக்குத் தாளவில்லை. பற்பல தொனிகளில் ஏசி என் சிரரெட்டில் பத்தை ஊதித் தள்ளி இருமி, இருமி உறங்கிப் போனான். இந்த நல்ல சந்தர்ப்பத்தில், இழந்த சுதந்திரம் மீண்டும் கிடைத்ததை கொண்டாடுமுகமாக இரண்டு கிழமை லீவில் நானும் ஊருக்குக் கிளம்பினேன்.

ஊரில் நண்பர்களிடமும் இந்த உண்மைக் காதல் சுதந்திரப் போராட்டத்தை மீண்டும் மீண்டும் அவர்களே வேண்டாம் என்னுமட்டும் சொல்லி அளவளாவி முடிய, லீவும் முடிய சரியாக இருந்தது. இரவு ரூம் திரும்ப வழமை போல் பன்னிரண்டு தாண்டிவிட்டதால், கிழவன் காணாதவாறு உட்புகுந்து உறங்கிப் போனேன்.

அடுத்த நாள் காலை ஆபிஸ் கிளம்பும்போதுதான் அந்த அதிர்ச்சியை மீண்டும் காண நேர்ந்தது. ''அது'' வீட்டின் முன்னேயுள்ள லைட் கம்பத்தின் அடியில் சோகமே உருவாக அமர்ந்திருந்தது.

ஐயோ.. இறைவா என்ன நேர்ந்திருக்கும். கிணறு வெட்ட நாய் கிளம்பிவிட்டதே! இது தெரு நாயாகிவிட்டதா? இரவு நான் திரும்பும்போது பழிக்குப் பழி, ரத்தத்துக்கு ரத்தம் வாங்கிவிடுமா? இன்னும் நிறைய காதலர்கள் வேறு உருவாகியிருப்பார்களே! - என்னுள் ஆயிரம் வோல்ட் மின்சார அதிர்ச்சி.

தாங்கொணா தவிப்போடு கிழவனிடம் ஓடினேன்.

''அங்கள் - என்ன அது... அது... மீண்டும்...!''

''ஹா... ஹா...'' என கிழவன் சினிமாத்தனமாக சிரித்து, பெருங்குரலெடுத்து பின்வருமாறு செப்பலானான்.

''எங்க போயிடப்போகுது வல் நாய்! திரும்பி வந்து ஒரு நாள் கூட்டில படுத்திருக்கு! வெக்கம் மானம், ரோசம் வேணாம்! அடி அடின்னு அடிச்சி தொரத்தினேன். போகாம முன்னுக்கு லைட் தூணுக்கு அடியிலதான் இப்ப கிடக்குது இப்ப ரெண்டு நாளா. இன்னிக்கு குடு அடிக்கிற ராஜாவ கூப்பிட்டிருக்கேன். அவனிட்ட குடுத்து எங்கயாவது தூர விட்டிட்டு வரச் சொல்லப் போறேன். என்கிட்டயா...!''

அப்பாடா.. தலைக்கு வந்தது எதுவோடோ போச்சு.

00 00 00

அன்று ஒரு ரிசப்ஷன் டின்னர் இருப்பதால் கொஞ்சம் நேரத்துடன் ரூம் வந்தேன். வீட்டின் முன் போலீஸ் ஜீப். கிழவன், பக்கத்தில் குடு அடிக்கும் அந்த சோம்பேறி ராஜா. கூடவே சங்கிலியில் கட்டியபடி பதுங்கிக் கொண்டே ''அது''!

என்ன - என்னவாகியிருக்கும்!

''இது யாருடைய நாய்?''
- போலீஸ்
''என்னுடையதுதானய்யா!''
- கிழவன்.
''லைசன்ஸ் இருக்கா?''

''இல்லையய்யா''

## சுமைகள்



வயிற்றில் குடியிருந்து
வாழ்ந்து பசிக்கிறது
நிகழ்காலம்.
பசியில் அடைத்த
காதிலும் விழுகிறது
'நாளை புரட்சி
சரித்திரம் நமது கட்சி'
என்றென்
பசியைக்கூட
ஜீரணிக்க முயற்சிக்கும்
ஏப்பக் குரல்கள்.
ஆனால்,
நாளைகள் ஒவ்வொன்றும்
நாள்தோறும் நேற்றாக
தன்பாட்டில் போகிறது
தான்தோன்றிச் சரித்திரம்

- பிரமிள்

www.tamilarangam.net



*"இவனிடம் இது எப்படி வந்தது?"*

*"நான்தான் எங்காவது கொண்டு விட்டுவரச் சொன்னேனய்யா!"*

*"இதோட பேரு?" - "பேரு இல்லீங்கய்யா!"*

*இஷ்டப்படி வளர்க்கிறது! லைசன்ஸ் இல்லாம! தேவையில்லாட்டி விரட்டிர்றது. என்னய்யா நெனச்சுக்கிட்டிருக்கே? நேற்று எங்களுக்கொரு கம்ளெயின்ட் வந்திருக்கு. இந்த ஏரியா ஜட்ஜோட பெண் தன் செல்ல நாய காணமுன்னு கம்ப்ளெயின்ட் குடுத்திருக்கா. அவங்க இப்ப காரில எல்லாருமா இங்க வருவாங்க! எங்களுக்கென்னமோ இது ஜட்ஜோட நாயா இருக்குமின்னு சந்தேகம். சந்தேகமென்ன... அதுவேதான். பேரு கூடத் தெரியாது. கம்பியெண்ணத் தயாராயிரு!*

*அட மாடு! இதுவா ஜட்ஜோட பெண் வளர்த்த செல்ல நாய்! ஏண்டா... உங்களுக்கு கண்ணு கிண்ணு கெடையாதா? இப்படியும் பொலீஸ்லஆளுகளா?-நாவரை வந்ததை சொல்லாமல் தள்ளி நின்று கொண்டேன்.*

*சிறிது நேரத்தில் பென்னாம் பெரிசா ஒரு கார் வந்ததும், அதில் இருந்து ஜட்ஜ், அவர் மனைவி, மகள்கள், மருமகன், மகன் என்று பெரிசு பெரிசா இறங்கியதும், மம்மி.... தேங்க் கோட்! ஐ கொட் மை Jimmy! என்று சின்னப் பாப்பா இறங்கி ஓடி வந்து "அது" வைக் கண்டு வீறிட்டலறி "நோ.... நோ திஸ் இஸ் நொட் மை Jimmy! Oh God! என்று கதறி மம்மியை கட்டிக் கொண்டதும், ஜட்ஜ், மருமகன், மகன், மனைவி ஆகியோர் அத்தனை பொலீஸ்காரர்களையும் வையோ வை என்று வைது, தங்கள் தரத்துக்கு இப்படியா நாயை வளர்ப்போம் - எங்கள் Jimmy என்ன விலை தெரியுமா? அதன் Breed என்ன தெரியுமா... Jimmy எப்பேர்ப்பட்ட நாய் தெரியுமா.. We love Jimmy தெரியுமா என்றதும், பொலீஸ் சிவந்த முகங்களுடன் மன்னிப்புக் கேட்டு Jimmy சீக்கிரமாகக் கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறி, வாக்கி டோக்கியில் ட்ராபிக் பொலீசாரிடமும் செய்தி சொன்னதும், பிறகு சர் சர்ரென்று ஜட்ஜ் காரும், போலீஸ் ஜீப்பும் போய்விட்டதும் கனவு போல இருந்தது!*

*ஆனால் ராஜா அச்சத்தின் காரணமாக தான் மேற்கொண்ட பணியை செவ்வனே செயற்படுத்த முடியாமைக்கு வருத்தம் தெரிவித்து விடைபெற்றும் போனவுடன் "அது" மீண்டும் கோகிலா என லைட் கம்பத்தின் கீழ் சரணடைந்ததும்... அதுவும் கனவுபோலத்தான்!*

*கிழவனதும் எனதும் மூஞ்சியைத்தான் காணச் சகித்திருக்காது.* •

## காதல்



## வஞ்சனை

**மனித மனங்களில் காதல் எழுவதுண்டு. அது கண்ணீராய்க் கரைவதுண்டு. அந்தக் கதைகள் திரும்பத் திரும்பத் தொடர்வதுண்டு. ஆனால் மனிதர்களை விஞ்சிய காதல் வஞ்சகர்கள் உலகில் இருக்கிறார்கள். அவர்கள்தான் சிலந்திகள்.**

**சிலந்தியின் காதலே ஒரு வஞ்சனை வலைதான். பெண் சிலந்தி தன் காதலனை காம சரசங்களால் மயக்கி நடனத்துக்கு அழைக்கும். அதனைக் காதலாட்டம் என்பர். அந்த நடனத்தின்பின்னர் இருவரும் ஈருடல் ஒருயிராகிக் கலவியில் களிப்பர். கலவி முடிந்தபின்தான் அந்தப் பயங்கரம் நிகழும். ஆம் உருவத்தில் பெரிதான பெண்சிலந்தி, தனது சோடியான ஆண்சிலந்திமேல் பாய்ந்து பற்றிக்கொள்ளும். அந்தப் பற்று காதல் பற்றல்ல. மரணப் பற்று. ஆம், அப்படியே அந்த ஆண் சிலந்தியைக் கொன்று உறிஞ்சிக் குடித்து கோதாக விட்டுச் செல்லும். அந்தக் காதலின் பரிசு மரணம்தான். உயிரினங்களில் ஏகபத்தினி விரதனென்று இந்த அப்பாவி ஆண் சிலந்திகளைக் கூறிக்கொண்டால் தப்பில்லைதானே!**

## கடற்பாம்பு

**இது என்ன பிராணியென்று அதிசயிக்கிறீர்களா? இது ஒரு கடற் பாம்பு.**

**1860களில் பெர்முடா கடலில் நிகழ்ந்த பல கடல் அனர்த்தங்களுக்கு இப் பாம்பே காரணமென ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஓர்ஃபிஷ் என்று அழைக்கப்படும் இக் கடற் பாம்பு உயிருடன் பிடிபட்டதில்லை. இறந்த உடல்களாக கரையொதுங்கித்தான் யாராவது கண்டுள்ளார்கள். 600அடி ஆழத்தில் நீந்தும் இப் பாம்பு மிக அரிதாகக் கடல் மேல்மட்டத்துக்கு வந்தபோது அதிஷ்ட்ட வசமாக புகைப்பிடிப்பாளர்களின் கமெராவில் பிடிபட்டுவிட்டது. இப்பாம்பு பொதுவாக 16 முதல் 26 அடி நீளமானது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதில் அதிநீளமான இப்வகைப் பாம்பு 56அடி நீளமானது. இப் பாம்பில் விசேடமென்னவென்றால் இது ஒரு இரசாயணக் கதிரொன்றை சுழற்றி வீசும். அதனால் தாக்கப்படும் இரைகளை அது இருளிலும் கண்டுகொள்ளக்கூடியதாக இருக்கும்.**



## சந்தா விபரம்

### உள்நாட்டு சந்தா (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

### வெளிநாட்டு சந்தா (அமெரிக்க டாலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்படவேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.
**முகவரி:**
Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd,
P.o. Box 1198,
Lake House,
Colombo,
Sri Lanka.



www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


வாசகர்களுக்கு எமது
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

www.tamilarangam.net


# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

**11%**

**செமிப்பு கணக்குகளுக்கு**

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 – 331101, 565998 அல்லது 565624

PRAMUKA BANK

பிரமுக
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
வங்கி
லிமிட்டட்

*வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி*

316, காலி வீதி, கொழும்பு –3 பிரதான நகரக் கிளை தொலைபேசி : 565220–3
பெர்க்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411–16

NETWORK

### மழைக்கால ஈசல்

சிறகுலர்த்திப்
பறந்தபோது
போர்மழையில்
சிறகுதிர்ந்து போனது.

ஒருவாறாக
உடல் வருத்தி
ஊர்ந்தபோது
இனவாதக் கழுகு
உடல் கொத்திப்
போனது.

இன்று ஊனமாகிய
உயிர் மட்டும்...

உடல் படைக்கும்
பிரமன்கள்
உயிர் பறிக்கும்
இயமன்களாய்.

சமாதானமும் ஓர்
மழைக்காலத்து
ஈசல் தானா?

**எம். வதனரூபன், சம்பூர்-5.**



### தேடுகிறேன் தெருவோரம்

வெடிவால் முளைத்திட்ட
வெள்ளடியன் சேவல்கள்
வீதியோரம் சென்ற பின்னர்
விழியிரண்டில் சிக்கவில்லை!

கொட்டிலில் நின்றுகொண்டு
கொண்டையை நிமிர்த்திவிட்டு
கூவியது, வரப்போகும்
கொடுமையை யாரறிவார்.

மரக்கொப்பிடையே
மறைந்திருந்த மரநாய்கள்
மடக்கிச் சென்றன இன்றும்
மறக்க முடியாது துடிக்கின்றோம்.

பாசமாய்த் தீனிபோட்டு
பக்குவமாய் வளர்த்துவிட்டோம்!
மோசமாய் போனதுவோ...
முகவரிகள் எங்குமில்லை!

கூவலுமில்லை, நம் சேவலுமில்லை
கண்டவரில்லை,
ஒன்று சொல்வாருமில்லை,
வேண்டாமென்று
விட முடியவுமில்லை
விழியிரண்டில் அழ ஈரமுமில்லை

முகம் காட்டி மறைந்துபோன
இரத்த உறவுகளை இரவு பகலாய்
தேடுகின்றேன் தெருவோரம்!
தொலைந்த முகவரிகள்
கிடைக்குமென்று.

**அ. பௌநந்தி, துன்னையூர்.**

### நாற்காலியில்லாத நதிகள்...

கடல்
கதறிக்கொண்டேயிருக்கிறது
நாம்
காது கொடுப்பதில்லை

பூக்கள்
சிரித்துக்கொண்டேயிருக்கிறது
நாம்
அவைகளை முத்தமிடுவதில்லை

நதிகள்
ஓடிக்கொண்டேயிருக்கிறது
அமர்ந்துவிட்டுப் போகலாமே என்று
நாற்காலி போட்டதில்லை

காகங்கள்
கரைந்தபடியிருக்கின்றன
தொண்டைகள் கம்மிப்போய்விடுமென்று
சும்மாவாவது சொன்னதில்லை

சந்தனம் பூசாது காற்று வீசுகிறது
அதற்காக
மூக்குகளைப் பொத்திக்கொண்டு நாம்
மூச்சுகளை விட்டதில்லை

இதயங்களைத் துளைக்கத் தெரிந்த
துப்பாக்கி ரவைகளுக்கு
இதயங்களைத் தொட்டுப்பார்க்கத்
தெரியாமலிருக்கிறது

காலம்
கண்களை மூடிக்கொண்ட போதும்
கவிதைகள் எழுதிக்கொண்டிருக்கிறது

**எம்.எம்.எம். நகீபு, சாய்ந்தமருது.**

### அவள் நினைவுகளால்

காற்றே
நான் உன்னை சுவாசிக்கிறேன்
ஆனால்
உயிர் வாழ்வது
அவள் நினைவுகளால்!

**அ.ஹ.மு. தஸ்லீம், காத்தான்குடி.**

### வாழ்ந்துதான் பார்ப்போம்

இனிப் பழக்கப்பட்டுப் போவதற்கும்,
பழகிக் கொள்வதற்கும் என்ன இருக்கிறது.
எதைத்தான் எதிர்பார்ப்பது...
எஞ்சிப் போயிருந்த
சமாதான சகவாழ்வு பற்றிய ஒரு பகற்கனவோடு.

பயணிக்கும் வாகனமொன்றிலோ,
பள்ளிக்கூடம் போய் பிள்ளையை
அழைத்து வரும் பொழுதொன்றிலோ,
ஏன்....
வீட்டுக்குள் அசந்து தூங்கிக் கொண்டிருக்கும்
வேளை ஒன்றிலோ
கடந்து போன கணப்பொழுதொன்றில்...
செத்துத் தொலைந்து போயிருக்காத வரையில்.

சோதனைச் சாவடிகளும்,
சுற்றிவளைப்புக்களும், விசாரணைகளும்...
தடுத்து வைப்புக்களும்...
இவையெல்லாம்,
என் பிள்ளைகளுக்குப் பழக்கப்பட்டுப் போனது
இதுதான் சமூக நகர்வென்று
இனியாரும்
அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை
இரண்டும்கெட்டான் கால வாழ்விலுள்ள
என் ஆத்மாவுக்குத்தான் தொல்லை.

**கவியூரன்**

### நெஞ்சு பொறுக்குதில்லை...

கொதி மண் பரப்பில்
குப்புறக் கிடத்தியென்னை
சூடு கனத்த
முட்கம்பித் துகள்களால்
என்-
சிதிலங்களைச் சீவிச் செதுக்கி
கரங்களையும் கோர்த்து(ப்)
பிணைத்து இறுக்கியும்
என்னைத் தலைகீழ்
தொங்குதலில் -
செம்மண் பூமியிலிருந்து
தீ முகடுகளால் என்னுடல்
வாட்டிக் கருகுதலில்
நோக்காடு தாங்காது
முகம் சிதைக்கப்பட்டு
அப்பிக் கூம்பினாலும்
நான் மரிக்க மாட்டேன்...!
ஆன போழ்திலும் -
நெஞ்சு பொறுக்குதில்லை
இத்தேசத்து மண்ணில்
"அகதி" யென்பதை மட்டும்
எனக்குள் சுமந்துகொள்ள...!!

**மருதமுனை விஜிலி.**

சிறுகதை

# இப்படியும் ஒரு...

திக்குவல்லை கமால்

நாலு பேர் கூடினால், இம்முறை யார் யார் ஹஜ்ஜுக்குப் போகிறார்கள் என்பதை அலசுவதே இப்பொழுது வேலையாகிவிட்டது.

ஹஜ்ஜின் சிறப்பு பற்றி குத்பாக்கள், பயான்கள், வானொலிப் பேச்சுக்கள்... அப்பப்பா குறைவே இல்லை.

வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ தொழுது வெளியேறினால், நவீன நுட்பங்களையெல்லாம் திரட்டி வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களை கத்தை கத்தையாகக் கக்கத்திலடித்துக்கொண்டு வீடு போக வேண்டிய நிலை.

ஹஜ் பயணிகளுக்கு உதவுவதில் டிரவல் ஏஜென்ஸிகளுக்கு சொல்ல முடியாத ஆவல்! பாவம் நல்லவர்கள்.

உள்ளூர் ஏஜென்டுகளுக்கும் தான் என்னவாம்! வீடுவீடாகப் படியேறி காலைப் பிடிக்காத குறையாக பாஸ்போட் விண்ணப்பங்களைக் காவிக் கொண்டோடும் காட்சி.

00 00 00

"வாப்பா..."

மூத்த மகனின் குரல்தான் என்பதை இனம் கண்டாலும் கண்ணும் கருத்தும் அந்தக் கணக்கு வழக்குப் புத்தகத்தில் ஒன்றிப்போய் இருந்ததால் அத்துஹமீது ஹாஜியால் கழுத்தைத் திருப்ப முடியவில்லை.

“வாப்பா”

ஸ்தாயி கூடிய அதே குரல்.

இடையில் பேனாவைத் திணித்து புத்தகத்தை மூடிவிட்டு, வலக்கையால் மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்தபடி பார்த்தார்.

“எனத்தியன் அஸ்லம்?”

“நான் இந்தப் பைணம் ஹஜ்ஜிக்கிப் பொகோணும்”

“நல்ல யோசினடா” - என்றவாறு ஒரு பாட்டம் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

தான் சீரியஸாகப் பேச வாப்பா அதை ஜோக்காக எடுத்துக் கொண்டாரே என்ற கோபக் கடுமை அவன் முகத்தில் சட்டென்று பரவியது.

“கஷ்டப்பட்டுச் சம்பரிச்சி.... தேவயான செலவியளச் செஞ்சி மிச்சம் புடிச்சித்தான் மனிசரு மக்கத்துக்குப் போற... ம்... அந்தக் காலத்தில நாங்க தண்ணிக் கப்பல்ல போன... பொகவர ஆறு மாசம் புடிக்கிய... இன மொத்தர வழிபாக்காம பொஞ்சாதி புள்ளகுட்டியளுக்கு செலவு குடுத்திட்டுப்போன...” ஹக்கை வெளிப்படுத்தி குட்டி பயானொன்று பண்ணினார் அத்துஹமீது ஹாஜியார்.

அத்துமீறிய கோபம் அஸ்லமை உந்தித் தள்ளியது. வேறு யாருமெண்டால்... சந்தேகமில்லை கையும் நீண்டிருக்கும்.

“ம்... ஒங்கட சின்ன மகன மட்டும் சந்தோசமா அனுப்பி வெச்ச” அவனது ஆத்திரம் இன்னொரு கோணமெடுத்தது.

“புத்தி யோசினயாப் பேசு. மோட்டுப் பேச்சிப் பேசாத... அவன் தாரடயாலும் சல்லிக்கிப் பொகல்ல... அவன் சம்பரிச்சிப் போன”

“ஓ... அவன் சம்பரிக்கியத்துக்கு பானத்தால சல்லி புழுந்த”

“நான் ஒதவி செஞ்சது மெய். ஒனக்குத் தந்தத்த நீ அது போல பாவிச்சீந்தா ஒரு ஹஜ்ஜல்ல ஒம்பது ஹஜ்ஜி செஞ்சீக்கேலும் ஒனக்கு”

வாப்பா மிக உறைப்பாகச் சொல்லிவிட்டபோது அவனால் தலைதூக்கக்கூடியதாக இருக்கவில்லை. அதற்காக அவன் மௌனித்து விடவில்லை. சத்தம் போட்டே தன் காரியங்களை சாதிக்கப் பழகிவிட்டவனல்லவா அவன்!

“பேசி வேலில்ல... ஒரு லெச்சம் தரோணும்.. அன்ன செல்லீட்ட”

அதற்கு மேல் அஸ்லம் அங்கே நிற்கவில்லை.

ஹஜ்ஜுக்குப் போவதென்றால் குறைந்தபட்சம் ஒரு லட்சம் ரூபா தேவைதான். ஹஜ்ஜின் உள்ளார்ந்த அர்த்தம் எந்தளவுக்கு அந்தப் பணத்தில் பொதிந்துள்ளதென்பது வேறு விஷயம்!

அத்துஹமீது ஹாஜி எத்தனை லட்சங்களைப் புரட்டிப்போட்டு விட்ட மனிதன். ஒரு சதம் வீண் செலவு செய்யாமல் சம்பாதித்து இன்றும் முகாமைத்துவம் செய்து வருவது ஊரறிந்த விடயம். சொந்தப் பிள்ளைகளென்றாலும் கூட ஆள் பார்த்து ஆழம் பார்த்துத்தான் எல்லாம்.

அத்துஹமீது ஹாஜி எத்தனை லட்சங்களைப் புரட்டிப்போட்டு விட்ட மனிதன். ஒரு சதம் வீண் செலவு செய்யாமல் சம்பாதித்து இன்றும் முகாமைத்துவம் செய்து வருவது ஊரறிந்த விடயம். சொந்தப் பிள்ளைகளென்றாலும் கூட ஆள் பார்த்து ஆழம் பார்த்துத்தான் எல்லாம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் அஸ்லமைப் போல் ஒவ்வொரு ஊதாரி உருவாகிவிட்டால் கோடீஸ்வரனும் ஒட்டாண்டியாகிப் போவது ஒன்றும் புதுமையான விஷயமல்ல.

00 00 00

“அஸ்லம் தொர எப்படி ஹஜ்ஜிக்கிப் போற விஷயமெல்லாம் சரியா?” சர்தார் நானா பல்லைக் காட்டியபடி எதிரே நின்றார்.

அவனுக்கு பெரிய மரியாதை கொடுத்துப் பேசும் ஒரு சிலரில் இவரும் ஒருவர். கொஞ்சம் தமாஷ் பேர்வழியும் கூட. கல்யாண புரோக்கரென்று பெயரெடுக்காவிட்டாலும் பல காரியங்களை அவ்வப்போது சாதித்து வருபவர்.

“மாடு படுக்காது போலீக்கி... வாப்ப இறுக்கமா நிக்கிய சர்தாரு நானா... தாரடயாலும் சல்லிக்கி மக்கத்துக்கு பொகேலுமாண்டு கேக்கிய பாருங் கொளே...” வாப்பாவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினான் அஸ்லம்.

“தாரடயாலும் சல்லிக்கிப் பொகேலதான் வாப்பட சல்லிக்கிப் பொகேலுமேன்...”



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படியொரு பதில் மண்டைக்கு வரவில்லையே என்று தலையில் கையடித்துக் கொண்டான் அஸ்லம்.

"கஷ்டப்பட்டு சம்பரிச்சாம் பொகோண்டிய"

"இங்க பாரு... இன்டக்கிரேஸ்காரன் குடுக்காரனெல்லாம் மக்கத்துக்கு போற... எத்தின பேரு ஈச்சம் பழத்துக்குள்ளேம் ஸம்ஸம் தண்ணி பெரலுக்குள்ளே தங்கம் கடத்திக்கொணுவாரானியள்... ம்..."

"சத்தம் போடவாண சத்தம் போடவாண" அங்குமிங்கும் பார்த்தபடி தவித்தான் அஸ்லம்.

பார்த்த பார்வைக்கு பத்துப் பதினைந்து ஹாஜிகள் தெரியும் காலமல்லவா இது.

"தாருக்குப் பயப்புடவன் புள்ள... இபுராஹீம் நபீட பாங்குச் சத்தம் கேட்டவனியளும் ஹஜ்ஜிக்கிப் போறாம்... இபுலீஸட பாங்குச் சத்தம் கேட்டவனியளும் ஹஜ்ஜிக்கிப் போறாம்... எனக்கு வெளங்கிய மாதிரிக்கி இபுலீஸட சத்தம் கேட்டுப் போறவனியள்தான் மிச்சம் போலீக்கி"

"எனக்கும் ஒங்களுக்கும் ஒத்தரட சத்தமாலும் கேட்டில்ல பாருங்கொளே"

அஸ்லம் இப்படிச் சொன்னதுதான் தாமதம் சர்தாரு நானா வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

"இங்க பாரு ஒனக்கிப்ப எத்தின வருஷமன்?" திடீரென சிரிப்பை நிறுத்தி இப்படிக் கேட்டார் சர்தாரு நானா.

"ம்... முப்பது பிந்தீட்ட" சரியாகச் சொல்ல வாய் வரவில்லை போலும்!

"இந்தமட்டுப் பெரிய சல்லிக்காரன்ட மகன்... முப்பது பிந்தீம் இன்னேம் மாப்பிள பொகல்ல... இனி எப்பேக்கென்டா போற... நீ

## சுமைகள்

**"உழைத்தால் உயரலாம்**
**உழைத்தால் உயரலாம்"**
**அதுசரி,**
**யார் உழைத்தால்**
**யார் உயரலாம்?**
***- நீலமணி***



பாத்துப் பாத்து நில்லு... ஒன்ட தம்பி பெய்த்திருவான் போலீக்கி... எத்தின பெரிய பெரிய எடத்தால பேசிப்பேசி வாரன்"

இதொன்றும் அஸ்லமுக்குத் தெரியாத விஷயமல்ல. தம்பி முந்திக்கொண்டு ஹஜ்ஜுக்குச் சென்றது போல் மாப்பிள்ளை போக மாட்டானென்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவனுக்கு.

"நீ கடனெடுத்துச் சரி மக்கத்துக்குப் போ... அதவெச்சி நான் பெரியோரு எடத்தில கலியாணம் ஸெட் பண்ணியன்... ம்... ஒரு கல்லில ரெண்டு மாங்க..."

சர்தாரு நானா விஷயத்தோடுதான் பேசுகிறார் என்பது அவனுக்குப் புரியாமலில்லை. சும்மாவா 'ஐடியா கப்பல்' என்று அவரைச் சொல்கிறார்கள்.

அஸ்லமின் நாடி நரம்புகளில் நொடிக்கு நொடி ஏதோவொரு உத்வேகம் பீறிட்டுப் பாய ஆரம்பித்தது.

00 00 00

அன்று திங்கட்கிழமை.

சுபஹு தொழுதுவிட்டு பள்ளி வாசலிலிருந்து வெளியிறங்கிய சர்தாரு நானா வீட்டுக்குப் போகவில்லை. தாரிக் நானாவின் தேத்தண்ணிக் கடையில் இரண்டாவது பிளேன்ரீயும் அடித்தாகிவிட்டார்.



மும்தாஸ் மன்ஸிலுக்குள்ளிருந்து எப்போது கார் புறப்படுமென்பதே அவரது ஒரே நோக்காக இருந்தது.

அத்துஹமீது ஹாஜி கொழும்புக்குப் போகும் தகவல் ஏற்கனவே அவரது காதுகளை எட்டியிருந்தது.

எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. கார் புறப்பட்டதுதான் தாமதம் அவசர அவசரமாக கேற்றைத் தள்ளிக்கொண்டு உள்ளே புகுந்தார் சர்தாரு நானா.

"ஹாஜியார் ஹாஜியார்"

ஒரு பக்கத்தால் தோட்டம் பார்க்கும் சைது நானாவும் உள்ளேயிருந்து ஹாஜியார் மனைவியும் வந்து சேர்ந்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஆ.. எங்கட சர்தாரு நானா வா... கண்ட காலம்... ம்... சரிப்போனா இப்பிடித்தான்...."

"எங்களுக்கு எனத்த சரிப்போனத்துக்கன் ஹாஜும்மா... ம்.. ஹாஜியாராங்கள கொஞ்சம்..."

"இப்பதானே கொழும்புக்குப் போன"

"சீ... அநியாயம். வெட்டவெளேனம் வரப்படாதென்டு கொஞ்சம் சொணங்கி வந்த"

"சரிசரி இரீங்கொளே இனி எனத்தியன் செய்தி?"

"வந்ததுக்கு கொஞ்சம் பேசாமப் போனாலும் சரில்லேன்" என்றவாறு வசதியாக அமர்ந்து கொண்டார்.

"ஒங்கட மூத்தவன்ட செய்தி எனத்தியன்? சும்ம வயஸும் போறேன்" சுற்றி வளைத்து நோக்கத்துக்கு வந்துவிட்டார் சர்தாரு நானா.

"அதுதானே புத்தி யோசினில்லாத புள்ள. ஒரெடமென்டு நிக்கியல்ல. வாப்பாகட்ட சல்லி பறிச்சிப் பறிச்சி நாசமாக்கிய... எவளவு குடுத்தாலும் கெணத்துல போட்ட மாதிரிதான்.

"இங்க வாங்க செல்ல... இது நல்ல டைம்... நீங்க இந்தப் பைணம் பொடியனை மக்கத்துக்கு அனுப்புங்கோ"

"சர்தாரு நானா நீங்க எனத்தியன் செல்லியிது?"

"நீங்க அனுப்புங்கோ... நான் கேமக் குடுக்கியன்... மெய்தான்... பொறத்தீ ஊரில"

"எனக்கென்டா ஒன்டுமே வெளங்கல்ல"

"ஒரு லச்சத்தப் போடுங்கொ... நான் அஞ்சி லெச்சம் எடுத்துத் எடுத்துத்தாரன்.. ஒரு யாவாரமென்டு நெனச்சிக்கோங்கொ..."

ஒரு புதிய பக்கம் ஒளி பாய்ச்சப்படுவது போலிருந்தது. ஹாஜும்மாவுக்கு. இந்த வாய்ப்பைக் கை விட்டுவிட்டு காலத்தைக் காற்றில் பறக்கவிடுவது புத்தியா-கப்படவில்லை.

"அல்லாதான் ஒங்கள கொணந்து சேத்த. நான் அவருக் கட்டச் செல்லியன்.. எப்பிடிச் சரி அவன அனுப்பச் செல்லி"

"ஓ... மத்தத்த நான் பாக்கியன். பொடியன் பொகமுந்தி மாப்பிள பொண் பாத்து பாத்தி ஹாவேம் ஓதிப்போடோம்... கலியாணம் கிலியாணம் வந்து வெச்சிக்கொளேலும்... நல்லமென்டா ரெண்டு கலியாணத்தேம் ஒன்டுக்கு வெக்கேமேலும்"

"ஜென்னத்து டக்கென்டு பால தேத்தண்ணி கொஞ்சம் ஊத்திக்கொணுவா புள்ள" உள்ளே பாத்து ஓடர் வேறு கொடுத்தார் ஹாஜும்மா.

சர்தாரு நானா நாக்கைத் தட்டிக்கொண்டார். குறைந்தது ஹோர்லிக்ஸ்!

00 00 00

கொழும்புக்கு போய் வந்த அத்துஹுமீது ஹாஜி கொள் முதல் கணக்கு வழக்கிலேயே மூழ்கிப் போயிருந்தார்.

காசும் காசோலையுமாக பத்து லட்சத்துக்கு மேல் கொடுக்கல் வாங்கல். சிங்களப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாளென்று இலக்கு வைத்து அவர் இயங்கிக் கொண்டிருந்தார்.

அஸ்லம் வந்து வாப்பாவின் முன் நின்றான்.

வாப்பாவும் மகனும் எதிர் கொள்ளும் சந்தர்ப்பத்தைத்தான் ஹாஜும்மாவும் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

"வாப்ப எனத்தியன் செல்லிய?" அவன் ஆரம்பித்தான்.

"எனத்த செல்லவன் சித்திர வார இனி யாவாரத்தப் பாக்கோணும்" - சம்பாதிக்க இதுதான் சந்தர்ப்பமென்பதை அனுபவப் பாங்கில் கூறினார்.

"நான் ஹஜ்ஜிக்குப் பொகோணும்"

"அதுக்கெனத்தியன் சல்லீந்தாப் போ"

"சல்லீந்தா ஒங்களுக்கட்டக் கெஞ்சோணுமா"

"இங்க இந்த டைம்ல ஒரு லச்சத்த ஒனக்குத் தரேலுமா... எத்தின லச்சமீந்தாலும் போத"

"இங்க பாருங்கொ அவன் பொகோணுமென்டு ஆசப்படுகிய... செலவோட செலவு குடுத்துப் போடுங்கொ..."

மனைவியின் குரல் அவருக்கு வியப்பாக இருந்தது. முந்திக் கொண்டு மகனை விரட்டுபவள் இன்று புதுராகம் பாடினாள்.

"சரி ஒங்களுக்கட்டீந்தாக் குடுங்கொ" என்றவாறு உதட்டுக்குள் சிரித்தார்.

அந்தச் சிரிப்பு... அவளைப் பொறுத்தமட்டில் ஒரு நல்ல சமிக்ஞைதான்.

"எப்பிடிச்சரி எனக்கு சல்லி தாங்கொ. இதுதான் கடசி. இதுக்குப் பொறகு நான் ஒரு சாமாலும் கேக்கியல்ல" வெடில் மாதிரி இரைந்துவிட்டு வெளியேறினான் அஸ்லம்.

ஒரு சில கணங்கள் அமைதியின் ஆட்சி.

"இங்க பாருங்கொ... இவளவு நாளும் குடுத்ததான்... இது அல்லாட விஷயம்.. நீங்க கஷ்டப்பட்டு சம்பரிச்ச சல்லியால ஒங்கட புள்ளதானே போற... அல்லா அவனுக்கு நல்ல ஈமானக் குடுக்கட்டும்... நாங்க துவாச் செய்வோம்... எனத்த சரி ஹைரீக்கும்" அவள் இதமாக எடுத்துச் சொன்னாள்

அவளது உள்மனம் அவருக்கெங்கே தெரியப் போகிறது? அது சர்தாரு நானாவுக்கல்லவா வெளிச்சம்!

"சரி சரி பாப்பம்"

'பார்ப்போம்' என்றால் அவரது அகராதியில் 'சரி' என்ற அர்த்தம்தான்.

00 00 00

வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு ஹோஹோவென்று சனம்.

கதீப் மிம்பரில் வெட்டி விளாசினார்.

"இந்தப் பெரும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இது அல்லாவுடைய ரஹ்மத். அத்தகையவர்களை முஸாபா செய்யக் கிடைப்பதே பெரிய பாக்கியமாகும்"

தொழுகை முடிந்து ஸலாம் கொடுத்தாயிற்று.

வழமைபோல் எவரும் எழுந்தோடவில்லை.

முன்வரிசையில் அமர்ந்து தொழுத ஹஜ்ஜாஜிகள் எழுந்து நின்றனர். இனியென்ன ஊர் அங்கீகாரம்... அவர்களைப் பற்றி இல்லாதது பொல்லாதது எதையும் இனி எவரும் பேசமாட்டார்கள்.

கைகளைத் தொட்டு ஸலாம் சொல்ல... மார்போடணைத்து முஸாபஹாச் செய்ய, ஜமாஅத்தார் முண்டியடிக்கத் தொடங்கி விட்டனர்.

வெள்ளையுடுத்து அத்தர் கமகமக்க அவர்களில் ஒருவனாக அஸ்லமும் எழுந்து நின்றான். ●

## சுமைகள்

**வண்டி இன்னும்**
**வரவே இல்லை**
**கைகளில் சுமையுடன்**
**காத்திருக்கின்றேன்**
**வண்டி இன்னும்**
**வரவே இல்லை**
**கோட்டை**
**புகைவண்டி நிலையம்**
**கூட்டமோ**
**எங்கணும் அலையும்**
**பெட்டிகள்**
**படுக்கைகள்**
**பிற பொருட் சுமைகள்**
**அங்கும் இங்கும்**
**ஆட்களோ அதிகம்**
**எத்தனை மனிதர்**
**இங்கிருக்கின்றார்**
**இருந்தும் என்ன?**
**இருந்தும் என்ன?**
**சிறுநீர் கழிக்கச்**
**செல்லலாம் என்றால்**
**யாரிடம் எனது**
**கைச்சுமை கொடுப்பேன்?**

**- எம். ஏ. நுஃமான்.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்

ஜெயந்தீசன்

நல்ல தமிழ் பேச வேண்டிய கட்டாயம் எப்படியோ நல்லசிவத்துக்கு வந்துவிட்டது. ஓர் கன்னியால் இவர் எப்படியோ அக்செப்ற் பண்ணப்பட்டதுதான் இதற்குக் காரணம். கன்னி ராதிகாவிற்கு முதலில் இவர் பற்றிப் பெரிதாக எதுவுமே தெரியாது.

ஆம், நல்லசிவம் புகழ்பெற்ற சண்டியன். ஓர் அடியில் ஒன்பது பேரை விழுத்தும் வலிமை கொண்டவன் என்பதற்கு அவனது புஜங்களும் முகத்தில் உள்ள விழுப்புண்களுமே சாட்சியங்கள். போனைத் தூக்கி யார் பேசினாலும் பு. சு. வே அவனது வாயிலிருந்து லாவகமாக வரும். இந்த பாஷையை இவர் ராதிகாவுடன் காதல் சரசம் செய்தபோதும் பேச வெளிக்கிட்டதால் அவளது மனம் உடைந்தது. இதனால் நேரடியாகவே ஒரு நாள் "ஐ டோன்ட் லவ் யூ" என்று சொல்லிவிட்டாள். யாருக்கும் பயப்படாத நல்லசிவம் இந்த சொற்களால் நடுங்கிக் கோமாவில் விழுந்தான். கோமா மயக்கம் தெளிந்து விழித்தபோது கன்னி ராதிகா அதே சொற்களையே திரும்பவும் சொன்னாள். தாழ் பணியாத் தமிழன் நல்லசிவம் அவளது காலில் விழுந்து காதல் பிச்சை கேட்டான். "ராதிகா! இனி நீ என்ன சொன்னாலும் அதுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பன்" என்று தலையில் அடித்துச் சத்தியம் செய்தான்.

"நீர் இலக்கியவாதியாக வேண்டும்" என்று கட்டளை போட்டாள் ராதிகா. இதனைக் கேட்டதும் அவனுக்கு மீண்டும் கோமா வரும் போலப் பட்டது. ஆனால் வரவில்லை. "எனக்குத்தான் எழுத வாசிக்கத் தெரியாதே!" என்றபடி இரங்கும் விழிகளால் பார்த்தான்.

"உமக்குப் பேசத் தெரியும். அதுவே போதும். ஆனால் நீர் நல்ல தமிழ் பேச வேண்டும். இதற்காகத்தான் இலக்கியவாதியாக நீர் மாற வேண்டும்" என்றாள்.

"நல்ல தமிழ் கற்க பள்ளிகள் ஏதாவது உள்ளதா?" என்று கலக்கத்துடன் கேட்டான்.

"நல்ல தமிழ் கற்கப் பள்ளிகளுக்குப் போனால் நட்டம்"

"பள்ளிகளுக்குப் போகாமல் எங்கே நல்ல தமிழ் கற்பது?"

"அது சின்ன விஷயம். இலக்கிய கூட்டங்களுக்குப் போனால் அது தானாக வரும்"

**அவர் நல்லசிவம் அருகில் வந்து "ஹலோ! சவா (சுகமா)" எனக் கேட்டார். பின் கூட்டத்தில் பிரதம உரை செய்யப்போகின்றவர் தனது குட் பிறண்ட் என்றபடி "நீரும் எழுதுகின்றீரோ?" எனக் கேட்டார். நல்லசிவம் சங்கோஜத்துடன் "நான் நல்லதமிழ் படிக்க வந்திருக்கிறன்" என்றான்.**

"இலக்கியக் கூட்டங்களுக்குப் போவதா?" என்றபடி எவருக்கும் பயப்படாத நல்லசிவம் ஆவென வாயைப் பிளந்தான்.

"நல்ல தமிழ் பேசுவதென்றால் பயப்படக்கூடாது. நீர் கட்டாயம் இலக்கியக் கூட்டங்களுக்குப் போக வேண்டும்" என்றபடி அவனது சொக்கையில் ஒரு முத்தம் வைத்தாள்.

00 00 00

நல்லசிவம் நல்ல தமிழ் கற்பதற்கான முதலாவது இலக்கியக் கூட்டம் நடக்க மூன்று தினங்களே இருந்தன. ஆனால் அவனுக்கோ வியர்த்துக் கொட்டியது. ராதிகா துணிச்சலானவள். அவனைத் தேற்றி துணிச்சல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"ராதிகா! நீரும் என்னோட கூட்டத்துக்கு வருவீர்தானே!"

"எனக்கு பேர்த்டே புறோகிராம் ஒண்டு இருக்கு. பயப்படாதையும். அங்கை ஆரும் உம்மைப் பிடிச்சுத் தின்ன மாட்டினம்"

"நானும் உம்மோடை பேர்த்டேக்கு வரப்போறன்" என்று சிறுபிள்ளை போல அடம்பிடித்தான்.

"நீர் பேர்த்டேக்கு வாறது முக்கியமில்லை. நீர் நல்ல தமிழ் பேசுறதுதான் எனக்கு முக்கியம். கூட்டத்துக்கு நீர் போகாட்டி என்ரை கழுத்தில உம்மடை தாலி ஏறாது" என்று மிரட்டியதும் பயந்து சம்மதித்துக்கொண்டான்.

00 00 00

நாள் வந்தது. ஆம். நல்லசிவம் நல்ல தமிழ் கற்கும் நாள்தான் அது. கூட்டமோ ஐந்து மணிக்கு. நான்கு மணிக்கெல்லாம் அவன் ரெடியாகிவிட்டான்.

"உங்கட வாழ்க்கையிலை இண்டையிலயிருந்து ஓர் திருப்புமுனை ஏற்படும்." என்று உற்சாகித்து அவனை மெத்ரோ வரை கொண்டு போய் விட்டபின் ராதிகா வீடு திரும்பினாள்.

நல்லசிவம் மண்டபத்துக்கு வந்தபோது அது பூட்டப்பட்டுக் கிடந்தது. ஒரு சிகரட்டை எடுத்துப் பற்றிக்கொண்டான். ஐந்தரை போல ஒருவர் தலை தென்பட்டது. அவர் நல்லசிவம் அருகில் வந்து "ஹலோ! சவா (சுகமா)" எனக் கேட்டார். பின் கூட்டத்தில் பிரதம உரை செய்யப்போகின்றவர் தனது குட் பிறண்ட் என்றபடி "நீரும் எழுதுகின்றீரோ?" எனக் கேட்டார். நல்லசிவம் சங்கோஜத்துடன் "நான் நல்லதமிழ் படிக்க வந்திருக்கிறன்" என்றான்.

"நல்ல விஷயம். நீர் தேடி வந்த இடமும் நல்ல இடம் தான்" என்று அவர் சொல்லிக்கொண்டிருக்க இலக்கியவாதிகள், ரசிகர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தனர். கூட்டம் களைகட்டியது. நல்லசிவம் ஒரு மூலையில் போய் நடுக்கத்துடன் இருந்தான். முதலில் பேச ஆரம்பித்தவர் ஓர் பிரபல இலக்கிய மேதை. அவர் மீது எல்லோருக்கும் ஓர் நடுக்கம் உள்ளதென்பதாகக் கதை.



"இண்டைக்கு அவர் கலக்கப் போகிறார்" என்று நல்லசிவம் அருகில் இருந்த சிலர் முணுமுணுத்துக் கொண்டனர்.

"எங்களுக்கு எதிரா எழுதிறவங்கள் ஆரா இருந்தாலும் அவங்களுக்கு உதை போடுறதைத் தவிர வேறை வழியில்லை" என்று தொடங்கினார். ஏன் அவர் மௌன அஞ்சலிக்கு முன் பேசத் தொடங்கினார் எனக் கேட்கும் திராணி கூட்டத்தில் ஒருவருக்குமே வரவில்லை. அவர் பேசினார். நல்லசிவம் வழமையில் பேசும் தமிழுக்கும் அதற்குமிடையில் எந்த வித்தியாசமும் இல்லை. பு. சு. க்கள் புட்டுப் புட்டுக்கொண்டு வந்தன. நல்லசிவத்தின். பயம் தெளியத் தொடங்கியது.

'அட இதுதானா நல்ல தமிழ். ராதிகாவுக்கு ஏன் இது தெரியாமல் போய்விட்டது. உவனுக்குத தெரிஞ்சிருக்கிறதை விட எனக்கு இன்னும் கூடச் சொற்கள் தெரியுமே. முறைப்படி பார்த்தால் நான் அல்லவோ இலக்கிய மேதை" என்று தனக்குள் எண்ணினான் நல்லசிவம். அவர் பேசினார். அதே பு. சு. க்கள்தான். நல்லசிவம் பொறுமையை இழந்தான். ஆம் அவனுக்குக் கோபம் வந்து விட்டது.

"டேய் நிப்பாட்டடா!" என்றபடி மேடைக்குப் பாய்ந்து "நான் பேசிக் காட்டிறன்" என்றபடி பேசத் தொடங்கினான். கேட்போர் மனம் குளிர்ந்தது. அவர்களது உணர்ச்சி அணையை உடைத்துப் பாய்ந்ததால் இலக்கிய மேதையைத் தூக்கி வெளியால் போட்டுவிட்டு நல்லசிவத்தை இலக்கிய மேதையாக வரித்துக் கொண்டனர்.

**- நன்றி: எக்ஸில் 08.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புறாவே... புறாவே... உன்னாலும் போர்தானா?

பூவுக்குப் பூ காதல் தூது செல்லும் வண்டுகளைப் போல பண்டைக் காலத்தில் அரசர்களுக்கிடையில் தூது சென்றன புறாக்கள். மாடப்புறா, மணிப்புறா என்ற இரு வகைகள் காணப்படுகின்றன. மாடப்புறாவில் வீட்டுப் புறா என்ற புறாவையே அன்று தூது செல்ல அனுப்பினர்.

புறாக்களின் இறக்கைக்குள், சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டும் தெரியக் கூடியவாறு கடிதங்களை மறைத்து வைத்து உரிய இடத்தில் சேர்ப்பித்து வருமாறு அக்கால அரசர்கள் அனுப்பி வைத்தனராம். அதைப் பெற்றுக்கொண்டவரும், அவருடைய தகவல்களை அவ்வாறே வைத்து அனுப்புவாராம். இதுதான் அன்றைய காலத்தில் நடந்த புறா விடு தூது.




அரசுக்கு சூழ்ச்சி செய்யும் சிலரும் தமது புறாக்களை வானில் பறக்கவிட்டு தூது செல்லும் புறாவை திசைதிருப்பித் தம்மிடம் அழைத்து வரப் பயிற்சி கொடுப்பார்களாம். தூதுப் புறாவை இடைமறித்து விடயங்களை அறிந்து கொள்ளும் இந்த சூழ்ச்சிக்காரர்களால் பெரும் போர்கள், சதிகளும் உருவானதுண்டாம்.

இன்றும் இந்தப் புறாக்களால் கொலை வரை சென்ற சண்டைகள் இடம்பெற்றிருக்கின்றன. அரசர்களல்லாத சாதாரண மக்களே இந்தச் சண்டையில் ஈடுபடுகின்றவர்கள். அன்றுபோல் இன்று புறா விடு தூது இல்லாவிட்டாலும் புறாக்கள் வளர்க்கப்படுகின்றன. பொழுது போக்கிற்காக இவை வளர்க்கப்பட்டாலும் சிறந்த ஆதாயம் தரக் கூடிய கைத் தொழிலும்கூட. இந்த புறா வளர்ப்பு. முஸ்லிம் மன்னர்களின் காலத்தில்தான் புறாக்களை வீட்டில் வளர்க்கும் பழக்கம் ஏற்பட்டது. இது படிப் படியாக தொடர்ந்து வியாபித்து எமது நாட்டுக்குள்ளும் வந்து, கிராமங்களில் வளர்க்கப் பட்டு இன்று கொழும்பு நகர்ப் பகுதிகளிலும் வளர்க்கப்படுகின்றன.

புறா வளர்ப்பு பற்றிய தகவல்களை அமுது வாசகர்களுக்குத் தருவதற்கு நாம் கொழும்பு சுற்றுப்புறத்தில் புறா வளர்ப்பவர்களைத் தேடிச் சென்ற போது நஸீம் என்பவரைச் சந்தித்தோம்.

வெள்ளை, கறுப்பு, பச்சை, இளஞ்சிவப்பு, புள்ளி விழுந்தவை என பல வகைப் புறாக்கள் இருப்பதாகக் கூறிய அவர் 5 முக்கிய ரகங்கள் இருப்பதாகக் கூறினார்.

முதலாவது ரகப் புறா ஆகாயத்தில் வெகு உயரம் பறக்கக் கூடியது. காலையில் வெளியில் பறக்கும் புறா மாலையில் தான் வீட்டுக்குத் திரும்பும்.

இலேசாகக் கை தட்டினால் தரையில் விழுகிறது மற்றொரு வகைப் புறா.

ஷிராஜி, பக்தாதி என்பவை மூன்றாவது வகை.

நான்காவது வகைப் புறாவின் தலை கறுப்பாகவும் உடல் வெள்ளையாகவும் காணப்படும்.

ஐந்தாவது வகைப் புறாவின் வால் காகித விசிறி போலவும், தலையில் சிறு குடுமியொன்றும் காணப்படும். இது கூடியளவுக்கு விற்பனையாகும் புறா என்று புறாக்களின் வகையை நஸீம் அடுக்கிக் கொண்டு போனார்.

கொழும்பில் பல இடங்களில் புறாக்கள் வளர்க்கப்படுகின்றன. இதைப் பொழுதுபோக்காக இவர்கள் செய்தாலும் சிறந்த வருமானம் தரக்கூடிய ஒரு கைத்தொழிலாகவும் மேற்கொள்கின்றனர்.

கொம்பனித்தெருவில் நிஸாம்டீன் என்பவர் புறா வளர்ப்பில் ஈடுபடுபவர். சுமார் 50 புறாக்களுக்கு மேல் வளர்க்கிறார். எமது வேண்டுகோளுக்கு இணங்கி புறாக் கூட்டைத் திறந்துகாட்டி, புறாக்களின் பெயர்களையும் சொன்னார். ஈயக் கொண்டை, பட்டர் கொண்டை, கோப்பிக் கொண்டை, வெள்ளை சில்வர் கொண்டை, வெள்ளை ஈயக் கொண்டை என்று பல புறாக்களை அவர் காட்டினார்.

சுமார் ஆறு வருடங்களாக புறா வளர்க்கும் இவர் முதலில் பொழுது போக்கிற்காக ஆரம்பித்தாலும், இன்று இதை ஒரு மேலதிக வருமானம் தரக்கூடிய வியாபாரமாகச் செய்கிறார். புறாக்களுக்கு கூடுகள் அமைத்து தனித்தனி அறை பிரித்து வீட்டின் முன்புறத்தில் வைத்திருக்கிறார் இவர்.

வளர்ப்புக்காக புறாக்களை சீதுவ, ஜாஎல போன்ற பகுதிகளிலிருந்து 150 முதல் 300 ரூபா பணம் கொடுத்து வாங்கி வருவோம். **கபற கொண்டை** எனப் படும் ஒரு புறா வகை விசேடமானது. இந்தப் புறாக்களின் முட்டைகளிலிருந்து ஏனைய புறா வகைகளைப் பெற முடியும். அதாவது எந்தப் புறா அந்த முட்டையை அடைகாக்கிறதோ, அந்தப் புறாவைப் போலவே குஞ்சு பொரிக்கும். இரண்டு வேறுபட்ட புறாக்களை ஒன்றாகத் திரியவிடுவோம். இவற்றிலிருந்து புதிய வகையான புறாக்கள் கிடைக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுமைகள்

மழை இளைப்பாறிட குட்டையுண்டு - கொடும்
மனதிளைப்பாறிட எண்ணமுண்டு
அழல் இளைப்பாறிட நீருமுண்டு - எங்கள்
ஆசை இளைப்பாற உண்டோ இடம்?

நதி இளைப்பாறிட ஆழியுண்டு - கொடும்
நஞ்சிளைப்பாறிட மருந்துமுண்டு
கதிர் இளைப்பாற இரவுமுண்டு - எங்கள்
கவலை இளைப்பாற உண்டோ இடம்?

கண் இளைப்பாறிடத் தூக்கமுண்டு - அற்ப
கழுதை இளைப்பாறிடத் துறையுமுண்டு
பண் இளைப்பாறிட தாளமுண்டு - எங்கள்
பசி இளைப்பாறிட உண்டோ இடம்?

- கம்பதாசன்



"இப்படி புறாக்களோடு சந்தோஷமாக இருப்பதற்கே நான் புறா வளர்க்கிறேன்" என்றார் நந்தா என்பவர்.

புறா வளர்ப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கும் சுது என்பவரை சந்தித்தோம். இவர் ஒரு நாளைக்கு 3-4 ஆயிரம் வரையில் வருமானமாகப் பெறுகிறாராம். "இது எப்படி, புறா வளர்ப்பதில் 3 ஆயிரம் வருமானம் கிடைக்கிறதா?"

"ஆம், சில புறாக்கள் 1500 - 4500 வரையிலும் சில வகை 7000 ரூபா வரையிலும் விலை போகிறது. அதுமட்டுமல்ல என்னிடம் சில கஸ்டமர்கள் இருக்கிறார்கள். தினமும் மாலை 4.30 க்கு வந்துவிடுவார்கள். புறாக்களை உயரப் பறக்க விட்டு, எந்தப் புறா அதிக நேரம் பறக்கும் என்று பந்தயம் பிடிப்பார்கள். வருமானம் கிடைக்கிறது." புறா உயரப் பறந்து எவ்வளவு நேரத்திற்கு தரையிறங்காமல் பறக்கிறதோ அந்தளவுக்கு அப்புறாவின் பெறுமதி கூடுமென்கிறார் சுது. இந்தப் புறாக்கள் தான் 7000 ஆயிரம் வரையில் விலை போகும்.

தாம் விற்ற புறாவையே களவாகத் தம்மிடம் திருப்பி வரவழைக்கும் வித்தையும் புறா வளர்ப்பவர்களிடம் இருக்கிறது. புறாக்களை விற்கும்போது ஒரு திருட்டுத் தனத்தை இவர்கள் கையாள்கிறார்கள். அதாவது, அதிகம் பழகாத புறாக்களை விற்றுவிடுவது. விற்றபின் வாங்கிச் சென்றவரது வசிப்பிடத்தைத் தெரிந்துகொண்டு, அப்பகுதியில், ஏற்கனவே பயிற்சி கொடுத்து வைத்திருக்கும் புறாவை விட்டுவிட்டு வந்தால் எப்படியும் அந்தப் புறா இந்தப் புறாவைக் காதலித்துப் பழகி வீட்டுக்கழைத்து வந்துவிடும். பிறகு உரிமையாளர் அதன் சிறகுகளை வெட்டிவிடுவார். அதை ஒரு மாத காலத்திற்குப் பறக்க விடுவதில்லை.



புறா வளர்ப்போர் சிறிய புறாக்களை எடுத்து வந்து அதனை வளர்த்துப் பராமரிக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். பெருந்தொகையொன்றைச் செலவழிக்க வேண்டும். சோளம், கோழித்தீன், தவிடு போன்ற உணவு வகைகளைக் கொடுக்க வேண்டும். அத்தோடு பறக்கும் போது கழுகுகள் பிடிப்பதனையும் தவிர்க்க முடியாது. சில வேளைகளில் பூனைகளும் இவற்றைப் பதம் பார்த்து விடுகின்றனவாம். ஒரு மாத காலத்துக்கு சிறிய புறாக்களைப் பறக்க விடமாட்டார்கள். பின்னர், சிறிது தூரத்துக்குப் பறக்க விட்டுப் பழக்கி... கொஞ்சம் கொஞ்சமாக தூரப் பறக்க விடுவார்கள். விசிலொன்றை அடித்ததும் எஜமானிடம் ஓடி வருவதற்கும் இவை பழக்கப்பட்டிருக்கின்றன.

"இந்தக் காலத்தில் புறா வளர்ப்பது மிகவும் கஷ்டம். ஏனென்றால் இப்போது இதைப் பிடித்துக் கறியாக்கிச் சாப்பிடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அதுமட்டுமன்றி, வானத்தில் பறக்கும் போது "பைரியா" என்ற, புறாவை ஒத்த ஒரு பறவை புறாவைப் பறக்கும் போதே பதம் பார்த்துவிடுகிறது. நான் கொஞ்சம் கொஞ்சமாக என்னிடமுள்ள புறாக்களைக் குறைத்து வருகிறேன்" என்றார் சலீம் என்பவர்.

இருதய நோயாளிகளுக்கும், பக்கவாத நோயாளிகளுக்கும் புறாக் கறி நல்லது என்று நம்பப்படுவதால் பல புறாக்கள் களவாடப்பட்டு அவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் புறா வளர்ப்பவர்களும் குறைந்து வருகிறார்கள் என்றார் அவர்.

புறா வளர்க்கும் குழுக்களுக்கிடையே சண்டை ஏற்பட்டு, கொலை வரை சென்ற சந்தர்ப்பங்களும் உள்ளதாம்.





இட்டதோர் தாமரைப்பூ
இதழ் விரிந்திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்துமில்லை
வேறு வேறிருந்தருந்தும்
கட்டில்லை; கீழ் மேல் என்னும்
கண்முடி வழக்கமில்லை.

- பாரதிதாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நல்ல பெறுமதியான நீண்ட நேரம் பறக்கக்கூடிய புறா ஒரு வரிடம் உள்ளதென்று கேள்விப் பட்டால் அதை எப்படியாவது கீழே இறக்க மற்றையவர் முயற் சிப்பார். இப்படி அடுத்தவர் கூட் டிச் சென்ற புறாவைத் தேடி வந்து உரித்தாளர் கேட்டும் கொடுக்காவிட்டால் தருணம் பார்த்து எதிரியுடன் மோதுவார்.

இது குழுச் சண்டையாக மாறி மரணத்திலும் சென்று முடியும் என்கிறார் வசந்த என்பவர்.

புறாக்கள் 10 நாட்களுக்கொரு தடவை முட்டையிடுகின்றன. இதனால் அதிகமாக புறாக்கள் பெருகுகின்றன. பலர் எம்மிடம் புறாக்களை வாங்கிச் செல்கிறார் கள். எமக்கு அண்மித்த இடமென் றால் எமது மற்றைய புறாக் களை வெளியே எடுத்துச் சென்று பறக்க விடுவோம். அவற்றோடு சேர்ந்து, விற்ற புறா வீடு வந்து சேரும். இப்படி ஒரு கல்லில் இரண்டு மாங்காயும் பறித்து விடுவோம்.

அடிபட்டு, காயப்பட்டு, கோபித் துக்கொண்டு பொழுதுபோக்கிற் காகவும், வருவாய் தேடுவதற் காகவும் வளர்க்கப்படும் இந்தப் பறவை... ஆம்... சமாதானத்தின் சின்னங்கள்!

சுதந்திர தினத்தன்றும், வேறு வைபவங்களிலும் புறாக்களை பணம் கொடுத்து வாங்கி விடு தலை செய்தாலும், அவை சுதந் திரமாகப் பறந்தாலும் அந்தக் கணம் மட்டும்தான்.

புறா வளர்ப்பதால் வருமானம் கிடைப்பது ஒருபுறமிருக்க இந்த வருவாய்க்காக சமாதானச் சின் னங்களைச் சிறையிலடைத்து லாபம் காணுகிறார்களே என்ற விசனம் நம்மைத் தாக்குகிறது. 'சுதந்திரமாய் நாம் எப்போது வெளியில் பறப்பது' என்ற ஆத ங்கத்தோடு எம்மைத் தவிப்போடு எட்டிப்பார்க்கும் அந்தப் புறாக் களிடமிருந்து... புறா வளர்ப்பவரி டமிருந்து... மெல்ல விடை-பெற்று வரும்போது-

அந்த மென்மை உள்ளம் கொண்ட புறாக்களை புகலிடம் என்ற போர்வையில் சிறை வதை செய்வதை நாம் நிறுத்த வேண்டாமா? என்ற கேள்வியே நெஞ்சில் நிறைந்து நின்றது.

- ஹிஷாம்

# தீயை அணைக்கும் தீ

தீ! தீயென்றால் சாதாரணமான தீயல்ல. கட்டுக் கடங்காத பெரும் காட்டுத் தீ. ஒரு பெரும் கோபுர உயரத்துக்குச் சுவாலை தள்ளியபடி, தீராப் பசிகொண்ட அரக்கன்போல பிரம்மாண்டமான மரங்களையெல் லாம் நொடிப்பொழுதில் விழுத்தித் தன் வாயினுள் போட்டுக்கொண்டு தங்குதடையற்று வேகமாகப் பரவிக்கொண்டிருந்தது.

அந்தக் காடே வெம்மையில் தவித்தது. பறந்து தப்பிக்க முனைந்த பறவைகளைக்கூட அனல்காற்று அப்படியே பொசுக்கி நெருப்பில் போட்டது. விலங்கு கள் எங்கு ஓடுவது எப்படி ஓடுவது என்று தெரியாமல் திணறின.

காட்டு எல்லையில் குடிலமைத்திருந்த காட்டுவாசி களிடையே ஒரே பதற்றம். அவர்கள் விதைத்திருந்த சேனைப்பயிர்கள் கருகிமடியப் போகின்றனவா? ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு, குழந்தை குட்டிகளை யும் தூக்கிக்கொண்டு தப்பி ஓடுவது எப்படி? தீ எக் கணமும் குடிசைகளை அள்ளிப் புசித்துச் சாம்பராக ஊதித்தள்ளிவிட்டு அப்பால் கடந்துசெல்லக் கூடும் என்ற அபாயம் நிலவியது. தொலை தூரத்தில் தெரிந்த தீயின் சுவாலை வரவர முன்னேறிக்கொண் டிருந்தது.

ஆனால் ஏன் தலைவர் தம்மை நகர வேண்டாம் என்கிறார் என்பதுதான் அந்தக் கூட்டத்தினருக்குப் புரியவில்லை. அவர்களில் யாரும் இதற்குமுன்பு இப்படியொரு காட்டுத்தீயைக் கண்டதில்லை.

கூட்டத்தில் சலசலப்பு. தலைவர் வந்துவிட்டார். எல்லோரும் அவர் சொல்லப்போவதைப் பார்த்தபடி நின்றனர்.

அந்த முதியவர் தீயை வெறித்துப் பார்த்தார். அவரது கண்ணிலும் தீ பற்றிக்கொண்டது போன்ற கோபம். அனல்காற்றில் அவரது நரைத்த தலைமுடி அவிழ்ந்து ஆடியது. தாடியைத் தடவியபடி தீயையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

'என்ன செய்வது' என்ற கேள்வியாரிடமோ இருந்து மெதுவாக ஒலிக்க, சடுதியாக அசைந்த அவரது கை 'பேசாதே' எனத் தடுத்தது. பின்னர் திரும்பி தன் கூட்டத்தினரைப் பார்த்துக் கேட்டார். யாரிடமாவது நெருப்பு இருக்கிறதா?

ஒருவன், கணப்பொழுதில் தன் குடிலுக்கு ஓடி அடுப்பிலிருந்து நெருப்பு எடுத்து வந்தான்.

"நெருப்பு எதற்கு?" என்று எழுந்த முணுமுணுப் புக்கு உடனடியாக கிழவர் பதிலளிக்கவில்லை. சிறு நெருப்பொன்றை மூட்டிய பின் பதில் சொன்னார்: "நெருப்பை அணைக்க!"

"நெருப்பை அணைக்க?"

நெருப்பை அணைக்க நெருப்பா? இதென்ன உயி ரோடு விளையாட்டா? எல்லோரும் கிழவரின் செய லை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். கிழவர் நெருப் பைத் தயாராக்கிவிட்டு, சுள்ளிகளைப் பொறுக்கி குறுக்காக அடுக்கச் சொன்னார். பின் காட்டுத் தீ அண்மிக்கும்வரை அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். பெண்கள் யாவரும் வெலவெலத் துப்போய் நின்றனர்.

காட்டுத்தீ நெருங்கிவிட்டது. யாவரும் பயத்தால் விறைத்துப் போய் விட்டனர். கிழவர் திடீரென உரத் துக் கத்தினார். "தீயை மூட்டுங்கள்!"

குறுக்காக அடுக்கப்பட்ட சுள்ளிகளில் தீ பற்றவைக் கப்பட்டது. படையெடுத்து வரும் பேரணி ஒன்றுக்கெ திராக கோடு கிழித்தாற் போல!

என்ன, இந்தச் சிறுகோட்டைத் தாண்டி அப்பெரும் காட்டுத்தீ வரமாட்டேனென சத்தியம் ஏதும் கொடு த்துள்ளதா கிழவருக்கு? எல்லோரும் கணப்பொழு தில் எரிந்து சாம்பலாகப் போகிறோம் என்ற அச் சத்தோடு அப் பெரும் காட்டுத் தீயையே யாவரும் பார்த்தபடி நின்றனர்.

என்ன ஆச்சரியம்! காட்டுத் தீ நெருங்கி வந்த தும், கிழவர் மூட்டிய தீ அதை நோக்கி அசையத் தொடங்கியது. பின்னர் இச் சிறு கோடு படு வேகமா கப் படர்ந்து காட்டுத்தீயை நோக்கி ஓடத் தொடங் கியது. யாவரும் அந்த அதிசயத்தைப் பார்த்தபடி திகைத்து நின்றார்கள். ஒரே ஓட்டமாக ஓடிய அத் தீப்படை ஓடிச்சென்று தூரத்தில் வைத்து காட்டுத் தீயுடன் மோதியது. அவ்வளவுதான்! அந்தப் பெருந் தீ அதற்கு அப்பால் ஒரு அடிகூட எடுத்து வைக்கா மல் மண்டியிட்டு அடங்கியது.

கிழவர் எதிரிப் படைகளை விரட்டியடித்துவிட்டு போர்க்களத்திலிருந்து திரும்பும் பீஷ்மரின் கம்பீரத் துடன் திரும்பி நடந்தார். யாவரும் அந்த வீர புரு ஷன் திரும்பிப் போவதையே பிரமிப்புடன் பார்த்த தார்கள். குழந்தைகளை நெஞ்சோடு அணைத்தபடி யிருந்த தாய்மார் அவர்களை மெதுவாக இறக்கி விட்டார்கள். கிழவர் சொன்னார்: "எல்லாம் சரி, போய் உங்க உங்க தொழிலைக் கவனியுங்க."

கௌசல்யா ஆச்சரியத்துடன் மாமாவின் முகத் தைப் பார்த்தபடியே இருந்தாள்.

"சரி, கதை முடிஞ்சுது, நீ போய்ப் படு" மாமா புத் தகத்தை மூடிவிட்டு கௌசியைப் பார்த்துச் சொன் னார் - அவள் படுக்க மாட்டாள் என்பது தெரிந்ததே.

"எப்பிடி?" கௌசல்யா மாமாவை உலுக்கினாள்.

அவர் அசட்டையாக கேட்டார். "எது எப்படி?"

"சின்ன நெருப்பு எப்பிடி பெரிய நெருப்பைப் போய் அணைச்சுது?"

மாமா சிரித்தார். "ம், உன்னை மாதிரி சின்ன நெரு ப்பு என்னை மாதிரி பெரிய நெருப்பை அணைச் சிட்டுது" என்று அவளது தலையைச் செல்லமாகக் குலுக்கிவிட்டு அவளின் கேள்விக்கான விளக்கத்தை வாசித்துச் சொன்னார்.

காட்டுத்தீ எரியும்போது பெருந்தொகையான ஒட் சிசனை உறிஞ்சிவிடுமல்லவா! அத்தோடு, வெப்பத் தால் காற்று சூடாகி மேலே கிளம்புமல்லவா, அத னால் அங்கு என்ன தோன்றும்...? வெற்றிடம் தோன் றும்! அந்த வெற்றிடத்தை நிரப்ப காற்று, தீயை நோக்கி வீசும். அதனால்தான் கிழவன் மூட்டிய தீ, காட்டுத்தீயை நோக்கி அசைந்தது. அது அசையும் வழியெல்லாம் எரித்துக்கொண்டு சென்று காட்டுத் தீயுடன் மோதியது. பின்னர் என்ன? காட்டுத் தீக்கு முன்னேற வழியிருக்காது. வழியெல்லாவற்றையும் சின்னத் தீ பொசுக்கிவிட்டதே! அதனால் அவ்விடத் துடனேயே காட்டுத்தீ நின்று விட்டது.

கௌசல்யாவுக்குப் புரிந்துவிட்டதுபோலும். அவள் மாமாவிடம் சொன்னாள். "சரி மாமா, இனி நீங்கள் படுக்கலாம்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





உப்புவெளி தமிழ்ப் பல்கலைக் கழக காணியில் ஆறுமுகநாதன் என்னும் நலன்விரும்பியால் கமத்தொழில் பயிற்சிக்காக 1966ல் கட்டிக் கொடுக்கப்பட்ட ஆய்வு கூடம் இன்று பாழடைந்த நிலையில்....

# ஒரு பல்கலைக்கழக திருகுதாளம்

இத்தனை காலம் மறைத்து வைக்கப்பட்ட இத் தமிழ்ப் பல்கலைக்கழக முயற்சி பற்றிய உண்மைத் தகவல்கள் இவை.

**கல்வி என்பது தமிழ் மக்களின் உயிர். கையிலுள்ள சகலதையும் விற்றாவது, ஏன், கடன் பட்டாவது தமது பிள்ளைகளைப் படிப்பித்துவிடவேண்டும் என்று முனைகின்ற பேரார்வம் கல்வி மேல் அவர்களுக்கு உள்ளது.**

**இந்த ஆர்வத்தினால் தமிழ் மக்களுக்கான ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உருவாக்கிவிட வேண்டுமென்ற முயற்சியொன்று 1950களில் அன்றைய தமிழ்ப் பிரமுகர்களால் மேற்கொள்ளப்பட்டது.**

**அதற்காக 'தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம்' அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, பல்கலைக் கழகத்துக்கான நிலம், நிதி ஆகியன திரட்டப்பட்டு அடிக்கல்லும் நாட்டப்பட்டது. ஆனால் அந்தக் கனவு பின்னாளில் பொய்த்துப் போன நிலையில் அதற்காகச் சேகரிக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய கேள்வி இப்போது எழுந்துள்ளது.**

**அவை கையாடப்படவும், கைமாற்றப்படவும் கூடுமென்ற அச்சம் தலைதூக்கியுள்ளது. இத்தனை காலம் மறைத்து வைக்கப்பட்ட இத் தமிழ்ப் பல்கலைக்கழக முயற்சி பற்றிய உண்மைத் தகவல்கள் இவை.**

1950களில் தமிழர்களின் கல்வி வளர்ச்சி பற்றிய அக்கறையின் பிரகாரம் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்கும் முகமாக மூத்த கல்விமான்களாலும் சமூகப் பிரமுகர்களாலும் உருவாக்கப்பட்ட இயக்கமே 'தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம்'.

இஸ்ரேலில் ஹீப்ரு பல்கலைக் கழகத்தை 1918ல் அடிக்கல் நாட்டிய டாக்டர் செயின் வீஸ்மன் "யூதர்களுக்குச் சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்பும், ஒரு பல்கலைக் கழகமும் இருந்தால் எம்முடைய முக்கிய தேவைகளை முற்றாகப் பெறக்கூடிய நிலையை நாம் அடைந்து விடுவோம்" என்று கூறிய நம்பிக்கை வாக்கியத்தை எமது தமிழ்ப் பிரமுகர்களும் உதாரணமாகக் கூறி இந்தப் பல்கலைக்கழகத் திட்டத்தை முன்வைத்தனர்.

இத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை திருகோணமலையில் நிறுவுவதாக அவர்கள் தீர்மானித்தார்கள். இத் தமிழ்ப் பல்கலைக் கழகம் எப்படி அமைய வேண்டுமென்றும் அவர்கள் மனக் கோட்டை கட்டியிருந்தார்கள்.

கலை, விஞ்ஞானம், இயந்திரவியல், பொறியியல், விவசாயம், மருத்துவம், சட்டம் ஆகிய பீடங்களை அங்கு அமைப்பதற்கும் அதற்கான கட்டடங்கள், நூல் நிலையம், பரிசோதனைச்சாலைகள், உண்டிச் சாலைகள், அலுவலகங்கள் ஆகிவற்றைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடமொன்றை அவர்கள் கற்பனையில் வடித்திருந்தார்கள்.

அந்தக் கற்பனையை நனவாக்கும் முயற்சியிலும் அவர்கள் இறங்கினர்.



## சுமைகள்

**சவரத்தின் பின் குளிரச் செய்யும் படிகாரமாய்....**

**தொலைந்து போன இளம் பிராயமாய்....**

**சீட்டாட்டத்தின் கோமாளியாய்....**

**குருவி கொத்தும் முதுகின் எருதாய்....**

**கணவன், பிள்ளைக்காய் குணம்மாறும் பச்சோந்திய**

**நெடுஞ்சாலையின் 'பஞ்சர்' கடையாய்....**

**சிகரெட் முனையின் ஃபில்டராய்....**

**கருணைக் கொலைக்குத் துணியும் மனமாய்....**

**நினைவுகளின் கரையாய்....**

**என் தாய்.**

**- நாசர்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழ்ப் பல்கலைக்கழகக் காணிக்குள் அத்துமீறிய குடியேற்றம்

இந்தப் பல்கலைக் கழகத்தை அமைப்பதற்காகப் பொதுமக்களிடம் ஆதரவு கோரினர். நாடுபூராவும் நிதி வசூலித்தனர். அத்தோடு தமிழ்ப் பல்கலைக்கழக அமைப்பின் சந்தாதாரர்களாகவும் பலரைச் சேர்த்து, அவர்களிடமிருந்து நீண்ட கால மாகச் சந்தாப் பணமும் சேகரித்தனர்.

பல்கலைக் கழகம் அமைய வேண்டிய இடத்தையும் தீர்மானித்து, அதற்காக நிலம் கொள்வனவு செய்யும் முயற்சியிலும் இறங்கினர். பல்கலைக் கழகம் என்ற பொது நோக்காக இவ்விடங்களின் நிலச் சொந்தக்காரர்களை மிகக் குறைந்த விலைக்கு இவ் அமைப்புக்கு நிலங்களை விற்று உதவிசெய்யும்படி கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு எக் காரணத்தாலாவது இத் தமிழ்ப் பல்கலைக் கழகத் திட்டம் நிறைவேற்றப்படாவிடத்து அக் காணிகள் யாவும் உரிமையாளர்களுக்கு, அல்லது அவர்களின் வாரிசுகளுக்கு, காலத்துக்கான வட்டிப்பணத்துடன், திருப்பிக் கொடுக்கப்படுமென்ற உத்தரவாதத்தையும் அளித்தனர்.

இதனால் நம்பிக்கை பெற்ற பொதுமக்கள் பலர் தமது காணிகளை மிகக் குறைந்த விலைக்கு இவ் அமைப்புக்கு வழங்கினர். இவ்வாறு திருகோணமலை நகரின் உள் துறைமுக வீதியில் 5 ஏக்கர் நிலமும், நகரை அண்மித்த உப்புவெளிப் பகுதியில் சுமார் 81ஏக்கருமாக மொத்தம் 86 ஏக்கர் நிலத்தை இதற்காகப் பெற்றுக்கொண்டனர்.




இடமின்றி வெவ்வேறு பாடசாலைகளில் ஓய்வு நேரங்களில் நிகழும் அரசாங்கத்தின் கிழக்குப் பல்கலைக்கழக வகுப்புகள்

இதன்பின் 1956ம் ஆண்டு ஆனி மாதத்தில் திருகோணமலை நகரில் பெறப்பட்ட 5ஏக்கர் காணியில் பல்கலைக் கழகத்துக்கான அடிக்கல் நாட்டி, அவ்விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடினர். ஆனால் பின்னர் நீண்டகாலமாக இத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பது சாத்தியப்படவில்லை.

பதிலாக, கொழும்பில் வெள்ளவத்தை அலெக்ஸாண்டர் வீதியில் மூன்று மாடி கட்டமொன்றை வாடகைக்கு எடுத்து 'நாவலர் அக்கடமி' என்ற பெயரில் இங்கிலாந்தில் இடம்பெறும் உயர்கல்விப் பரீட்சைகளுக்குத் தோற்றவிருந்த மாணவர்களுக்கான வகுப்புகளும், பல்கலைக் கழகம் புகுவதற்குத் தேவையான உயர்கல்வி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

இதற்குத் தேவையான ஆய்வு கூடம், மற்றும் 'நாவலர் மண்டபம்' என்ற பெயரிலான நூலகம் என்பனவும் இங்கு அமைக்கப்பட்டன. பல்கலைக் கழகத்துக்காகச் சேமிக்கப்பட்ட நிதியில் பெருமளவு இதற்காகச் செலவானது.

இதற்கிடையில் இலங்கை அரசாங்கம் 1966ல் கல்விச் சட்டம் ஒன்றினை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இச் சட்டமானது தனியார் பல்கலைக் கழகம் அமைப்பதைத் தடை-செய்தது. இச் சட்டமூலத்தை நிறைவேற்றிய அன்றைய தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்*கட்சியும் பங்குவகித்தது குறிப்பிடத் தக்கது. அதன் சார்பில் ஸ்தாபன அமைச்சர் பதவி வகித்தவர் திரு. மு. திருச்செல்வம் ஆவார். (ஸ்தாபன அமைச்சே இன்று உள்ளூராட்சி அமைச்சு எனப்படுகிறது.) ஆனால் இந்தச் சட்ட மூலத்தை அவர்கள் எதிர்க்கவில்லை. இச் சட்டமூலத்தின் நேரடித் தாக்கம் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் மீதானதாகவே இருந்தது. இதனால் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான வாய்ப்பும் மூடப்பட்டது. இதன்பின் இம் முயற்சியும் கைவிடப்பட்டது.



தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவ முடியாதென்பது உறுதியாகிவிட்ட பின்பும் அதற்காகப் பெறப்பட்ட அந் நிலங்களை உரியவர்களுக்குக் கையளிக்க அவ் அமைப்பினர் முன்வரவில்லை. இதேவேளை ஏற்கெனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கமைய தங்கள் காணிகளைத் திருப்பித் தரும்படி உரிமையாளர்கள் நிர்ப்பந்தம் செலுத்த ஆரம்பித்தனர்.

இவை உப்புவெளி பல்கலைக் கழகக் காணியில் வெற்றிகரமாக இயங்கிய விவசாயப் பண்ணையின் காட்சிகள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்நிலையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்குப் பதிலாக கமத்தொழில், கால்நடை வளர்ப்பு செயன்முறைப் பயிற்சி நிலையமாக இத் திட்டத்தை மாற்றியமைத்தனர். இத் திட்டத்தை விஸ்தரிப்பதாக 1967ல் நெடுங்கேணியில் 500 ஏக்கர் நிலம் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தால் நீண்டகால குத்தகை அடிப்படையில் பெறப்பட்டு நாவலர் தோட்டப் பண்ணையென்ற பெயரில் நடத்தப்பட்டது.

ஆனால் அங்கு மேற்கொள்ளப்பட்ட பயிற்சித் திட்டம் 6 மாத காலத்துக்குள் செயலிழந்தது. பின்னர் 1971வரையிலும் திருகோணமலையிலும் நெடுங்கேணியிலும் செயற்பாடிழந்த நிலையில் இத் திட்டம் முடங்கிக் கிடந்ததால் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் நிதி காலியாகும் நிலையை எய்தியது.

இந்நிலையில் நிதித் தேவையை ஈடுசெய்ய திருகோணமலை நிலங்களைப் படிப்படியாக விற்பனை செய்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

இம் முடிவைத் தடுக்கு முகமாக சில இளம் உறுப்பினர்கள் செயலிலிறங்கினர். அது இரண்டு கட்டமாக செயற்படுத்த திட்டமிடப்பட்டது. முதற்கட்டமாக பயிற்சி நிலையம் இயங்குவதற்கான நிரந்தர வருவாய்க்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொள்ளுதல். அடுத்ததாக இவ் வருவாய் மூலம் பயிற்சி நிலையம் ஆரம்பித்தல்.

இதனடிப்படையில் விவசாய முயற்சிகளும், முதலீட்டுத் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டன. இதன் பலனாக திருகோணமலையிலமைந்த பயிற்சிப் பண்ணை துரித வளர்ச்சி கண்டது. அது திருகோணமலை விவசாயிகளின் நம்பிக்கையான விவசாயப் பண்ணையாக மாற்றம் கண்டது.

இங்கு திருகோணமலையில் முதன் முறையாக, இஸ்ரேலிய வகையான முத்தாமணக்கு, கௌபீ வகைகள், செடிப் பயற்றை போன்ற பயிர்கள் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இங்கு விவசாயக் கருத்தரங்கு, கண்காட்சிகள் போன்றவை நடத்தப்பட்டன.

ஆனால் சிறிது காலத்தில் நிகழ்ந்த நிர்வாக மாற்றங்களால் இம் முயற்சிகள்கூடக் கைவிடப்பட்டது. விவசாயப் பண்ணை மூலம் ஈட்டப்பட்ட பணமும் தீர்ந்து போய்விட நேர்ந்தது.

இந் நிலையில்தான் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கென கொள்முதல் செய்யப்பட்ட நிலங்களை சில தனிப்பட்டவர்கள் கைமாற்றிக் கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்ற அனுமதி மறுப்பையும் மீறி இவற்றில் ஒரு பகுதி நிலம் வெளியாருக்கு விற்பனை செய்யப்பட்டது.

> **இந் நிலையில்தான் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கென கொள்முதல் செய்யப்பட்ட நிலங்களை சில தனிப்பட்டவர்கள் கைமாற்றிக் கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.**

அத்தோடு இந் நிலத்தை இடம் பெயர்ந்த மக்களுக்கான குடியிருப்புக்காக ஆக்கிரமிக்கப்பட்டு, பின்னர் அவர்களிடமிருந்து பிறருக்கு சட்டவிரோதமாக விற்கப்பட்டு வருகிறது. இப் பல்கலைக்கழக நிலப் பரப்புக்குள் வேறு ஸ்தாபனங்களும் குடிபுகுந்து இயங்கி வருகின்றன.

இந்நிலையில் இத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கனவு சிதைந்து போனதுடன் அதற்காக மனமுவந்து தமது காணிகளை மிகக் குறைந்த விலைக்கு வழங்கிய பழைய உரிமையாளர்களும் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு இப் பல்கலைக்கழக இயக்கம் வழங்கிய உத்தரவாதத்தின்படி இந் நிலங்களை விற்பனை செய்வதாயின் அவர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அதே விலைக்கும் அதனது வட்டித் தொகைக்கும் அவர்களுக்கே திரும்பவும் விற்கப்பட வேண்டும். ஆனால் அவ் வாக்குறுதி மீறப்படுகின்ற நிலைமையே தோன்றியுள்ளது.

இந் நிலையில் இத் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தை சரியாகச் செயற்படுத்தி இப் பாரிய பொது வேலைத்திட்டம் காப்பாற்றப்படவேண்டும் என்பதே இது குறித்த நலன் விரும்பிகளின் ஆதங்கமாகவுள்ளது.

இதேவேளை இலங்கை அரசு கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக 1998ல் இரண்டு வளாகங்களை திருகோணமலைக்கு ஒதுக்கியுள்ளது. இப் பல்கலைக்கழகத்துக்காக அரசாங்கம் திருகோணமலை நகரிலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் பிரதான வீதியிலிருந்து 2 கிலோமீற்றர் உட்புறமாக நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது.

அங்கு வளாகம் அமைக்க முடியாத தற்போதய நிலையில் இவற்றுக்கான வகுப்புகள் தற்போது உரிய கட்டட வசதியின்றி சிறிய கட்டடமொன்றில் நடாத்தப்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு இங்கு 56 பட்டதாரி மாணவர்கள் உருவாகியிருந்தனர். 80 பேர்வரை பயின்று வருகின்றனர். உரிய இடவசதிகள் இல்லா பட்சத்தில் இவ் வகுப்புகள் மூடப்படலாம்.

எனவே தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் எண்ணம் அவர்களால் கைகூடாவிட்டாலும் அரசாங்கத்தால் நிறைவு செய்யப்படக்கூடிய நிலையில், அவ்வாறு அமையக்கூடிய பல்கலைக் கழகத்தை திருகோணமலை நகரை அண்டி அமைப்பதற்கு ஏதுவாக இவ் இயக்கத்தின் நிலத்தை பல்கலைக் கழகத்துக்கு வழங்குவது உசிதமென சிலர் கருதுகிறார்கள்.

இப் பெரும் பிரயாசையால் ஈட்டப்பட்ட மக்களுக்கான சொத்து கையாடல்களுக்கு இரையாகிப் போகாமல் பயனுள்ள வகையில் உபயோகத்திற்குள்ளாவதும், அதற்வேற்ற வகையில் செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதுமே முக்கியம். •




**வண்ணக் கனவுகளை**
**கண்களில் சுமந்து**
**இருளில் தடுமாறும்**
**அவஸ்தைகள்**
**எத்தனை நாள்...**
***- அகல்யா***

**கலங்காதிரு**
**பிறையே!**
**உனக்குள்தான்**
**பூரணசந்திரன்**
**புதைந்திருக்கிறான்.**
***- மகாகவி இக்பால்***

www.tamilarangam.net



சர்வதேசப் புகைப்படக் கண்காட்சியொன்று மார்ச் மாதம் 23ம் திகதியிலிருந்து 27ம் திகதி வரை கொழும்பில் நிகழ்ந்தது. தேசிய புகைப்படக் கலைச் சங்கத்தினர் இதனை நடத்தினர். கண்காட்சியில் 50 நாடுகள் பங்குகொண்டன.

அபிவிருத்தியடைந்த நாடுகளோடு ஒப்பிடுகையில் எமது நாடு புகைப்படத்துறையில் சற்று பின்நின்றாலும் ஆசிய நாடுகளில் முதலாமிடத்தில் இருக்கிறதெனவும், எமது புகைப்படப் பிடிப்பாளர்களின் அயராத முயற்சியும், ஆர்வமும், ஊக்கமும்தான் இதற்குக் காரணமெனவும் சொல்கின்றனர் தேசிய புகைப்படச் சங்கத்தினர்.

பத்திரிகைத் துறையில் பெரும் இடத்தை வகிக்கும் இந்தப் புகைப்படத் துறையை இலங்கைக்கு கொண்டு வந்தவர்கள் ஆங்கிலேயர்கள். பொழுதுபோக்கிற்காகவும், இலங்கையின்



இயற்கை அழகை ரசிப்பதற்காகவும் மட்டுமே இந்த புகைப்படத் துறை ஆரம்பத்தில் காணப்பட்டது. இது கொஞ்சம் கொஞ்சம் வியாபித்து தனவந்தர்களின் கைக்குச் சென்றது. அவர்களும் இது வெள்ளையரினால் கிடைத்த ஒரு பொக்கிஷமாக நினைத்து, அதைத் தாம் மட்டும் அனுபவித்து வந்தனர். பின்னர் பத்திரிகைத் துறையில் புகுந்து அங்கும் அவர்களே ஆட்சி செய்து வந்தார்கள். எந்த விதத்திலும் இத்துறையில் பொதுமக்கள் ஈடுபடவோ, அனுபவிக்கவோ இந்தத் தனவந்தர்கள் விடவில்லை.

இப்படியிருக்கும் நிலையில் **கலாசூரி வில்சன் ஹேகொட, ஹில்டன் சமரசிங்க, எல். தயானந்த** போன்றோர் முன்வந்து இவற்றைப் பொதுமக்களும் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கில் சில நடவடிக்கைகளை எடுத்தனர்.



இப்படி உருவானதே இந்த தேசிய புகைப்படக் கலைச் சங்கம்.

1950இல் இச்சங்கத்தை நிறுவி இதன் மூலம் புகைப்படக் கலையை விருத்தி செய்தனர். பாடசாலைச் சிறுவர்களுக்கும், வயதுவந்தவர்களுக்கும் இலவசமாக வகுப்புக்களை நடத்தினர். வசதி படைத்திராத சாதாரண மக்களுக்கும் இதற்கான சேவையைப் பெற்றுக்கொடுத்தனர். இதனால் புகைப்படத்துறையை தொழிலாக மேற்கொள்ளவும், ஒரு கலையாகப் பேணவும் இவர்கள் வழிவகுத்தனர்.
தனவந்தர்கள், கொதித்தெழுந்து இதைத் தடுப்பதற்கு முயற்சித்த போதிலும், கலாசூரி வில்சன் ஹேகொட தலைமையில் இருந்த உறுப்பினர்கள் விடாமுயற்சியுடன் இதனை முன்னெடுத்துச் சென்றனர்.

அதுதவிர, இவ்விடயம் சம்பந்தமான தொழில்நுட்ப அறிவு கிடைக்காமை, புத்தகங்கள் இன்மை, கற்றுக் கொடுப்பதற்கான ஆசிரியரின்மை போன்ற பிரச்சினைகளுக்கும் சங்கம் முகம் கொடுத்தது. இதனால் சர்வதேச தேசிய புகைப்படப் பிடிப்பாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த சங்கம் முனைந்தது.
இலவசமாக வகுப்புக்களுக்கு மேலதிகமாக கல்வியமைச்சின் அனுசரணையுடன் பாடசாலை மட்டத்தில் சிறுவர் புகைப்படப் பிடிப்பாளர்களை உருவாக்கி சகல ஊர்களுக்கும் இதனை விஸ்தரித்தனர். பலர் இதனை சுயதொழிலாக மேற்கொள்ளத் தொடங்கினர். சிலர் புகைப்பட நிலையங்களைத் திறந்தனர். இதனால் இலங்கை முழுவதும் புகைப்படத்துறை பரந்து விரிந்தது.
1961இல் **"கமெரா"** என்ற சஞ்சிகையையும் சங்கம் வெளியிட்டது. இதனால் புகைப்படத்துறைக்கு அபரிமிதமான வரவேற்பு ஏற்படத் தொடங்கியது. இதன்பின் சர்வதேச புகைப்படப்பிடிப்பாளர் சங்கத்துடன் இலங்கைச் சங்கம் தன்னை இணைத்துக் கொண்டது. இதன் மூலம் சர்வதேச கண்காட்சிகளில் பங்குபற்றவும் போட்டிகளில் பங்குபற்றவும் இலங்கை மக்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுதந்திரக் கல்வி முறை இருக்கும் எமது சூழலில் பொதுமக்களின் தேவையை உணர்ந்து இலவசமாகவே வகுப்புக்களை நடாத்தி வரும் அதே வேளை, சங்கம் வருடாந்தம் புகைப்படத்துறைப் பரீட்சை களையும் நடாத்துகிறது. வருடத்துக்கு 30 புகைப்படங்களை சர்வதேச போட்டிக்கு அனுப்புவதோடு, திறந்த பயிற்சி வகுப்புக் களையும் இலவசமாக வழங்கி தன் சேவையை தொடர்ந்து செய்து வருகிறது. அரசும் இச்சங்கத்தை அங்கீகரித்திருக் கிறது. இப்போது இது ஒரு சபையாகவும் பரிணமித்துள்ளது.

50 வருடங்களில் இடர்களைச் சந்தித்து நிரந்தரமாய் நிலையம் ஒன்றினைக் கூட பெற்றிருக்காத இச்சங்கம் சமூகத்துக்கு பெரும் சேவையைச் செய்கிறதென்றே கூற வேண்டும்.

12வது முறையாக நடாத்திய புகைப்படக் கண்காட்சியில் இம்முறைதான் மிகக் கூடுதலான நாடுகள் பங்கு கொண்டன.



இதுவரையில் இலங்கையில் நடை- பெற்றுள்ள கண்காட்சிகளில் கூடு தலான நாடுகள் பங்குபற்றிய கண்காட்சியும் இதுதான். சுமார் 50 நாடுகள் இக்கண்காட்சியில் பங்கு பற்றின.

போட்டிக்காக 2500 புகைப்படங்கள் வந்தனவாம். அவற்றுள் 322 புகைப் படங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை யே கண்காட்சியில் வைக்கப்பட்டி ருந்தன. உலக புகைப்படப்பிடிப் பாளர் அமைப்பு ஒரு நாட்டில் ஒரு அங்கத்துவம் மாத்திரமே வழங்கும். அந்த அங்கத்துவம் இலங்கையில் தேசிய புகைப்படப்பிடிப்பாளர் சங் கத்துக்குக் கிடைத்துள்ளது. அது மட்டுமன்றி ஆசிய புகைப்படப்பிடிப் பாளர் சம்மேளனத்திலும் அங்கத் துவம் பெற்றிருக்கிறது.

சுயமாக புகைப்படப்பிடிப்பில் ஈடுபட் டுள்ளவர்கள் சர்வதேச போட்டிக ளுக்குத் தங்கள் புகைப்படங்களை அனுப்ப வேண்டுமாயின், அதனை இலங்கை தேசிய புகைப்படப்பிடிப்பாளர் சங்கம் இலவசமாகச் செய்து கொடுக்கிறது. அத்தோடு வருடா வருடம் இலங்கையில் நடைபெறும் புகைப் படப் போட்டியிலும் பங்குகொள்ள முடியும்.

முதல் நாள் வைபவத்தை கிராமிய கைத் தொழில் அமைச்சர் அமரசிறி தொடங்கொட வைபவ ரீதியாக திறந்து வைத்து பார்வை யிட்டார். அதன் பின் அந்தக் கண்கொள் ளாக் காட்சியாக அமைந்த அழகிய புகைப்படங்களை மக்கள் கண்டுகளித்தனர். உள்நாட்டவர், வெளிநாட்டவர் எனப் பல்லா யிரம் மக்கள் இந்தக் காட்சியைப் பார்வை யிட வந்திருந்தனர்.

இலங்கை தேசிய புகைப்படப்பிடிப்பாளர் சங்கத்தின் 50 வருட நிறைவையொட்டி நடை பெற்ற இந்தக் கண்காட்சியில் வைக்கப் பட்டிருந்த புகைப்படங்களைப் பார்த்தபோது என்ன அற்புதம் என்று வியக்கத் தோன் றியது.

சர்வதேச ரீதியாக புகைப்படத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினை ஒவ்வொரு படமும் தத்ரூபமாக எடுத்துக் காட்டியது. கண்காட் சியில் இருந்து சில படங்களையே உங்கள் பார்வைக்காக இங்கே தந்திருக்கிறோம்.

**- எம்.எஸ்.எம்.எச்.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# டேவிட் வட்மோர் விஷயமுள்ள மனிதர்

இந்த மனிதர் உண்மையிலேயே தந்திரசாலிதான்! தான் பயிற்சியளிக்கும் அணிக்கு ஒவ்வொரு போட்டியிலும் ஒவ்வொரு வெல்லும் மந்திரத்தை வழங்கக்கூடிய விதத்தில் உடல் முழுக்க வெற்றி உத்திகள் நிரம்பியவராக இருக்கிறார். ம்... ஆள் விஷயமுள்ளவர்தான்.... என்று இலங்கைக் கிரிக்கெட் ரசிகர்களை ஒருமுகமாக வியக்க வைத்திருக்கிறார் ஒரு வெளிநாட்டுக்காரர். அவர் அவுஸ்திரேலிய நாட்டுக்காரரான டேவிட் வட்மோர். இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர்.




“சனத் உண்மையிலேயே லக் உள்ளவன்...”
“வட்மோர், வட்,மோர் (What more) எனக் கேட்டுவிட்டார்...”

என்ற பலதரப்பட்ட கருத்துக்களுடன், அநேகர் இலங்கை கிரிக்கெட் அணியின் பாகிஸ்தானுக்கு எதிரான அமோக வெற்றியை வராவேற்றனர். சனத்தின் அதிர்ஷ்டமா? அல்லது சனத்தின் தலைமையில் அணி ஒன்றுபட்டு நின்றதா? அல்லது பயிற்சியாளர் வட்மோரின் வியூகம் வகுக்கும் திறனா? எது என்று விளங்காத நிலையில் மிகச் சிறப்பாக விளையாடினார்கள், செயற்பட்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இலங்கை ஒரு நாள் சர்வதேச தொடரை வென்று எடுத்த போதிலும், அதைவிட சிறப்பாக இலங்கை கிரிக்கெட் வரலாற்றிலேயே மிக முக்கியமானதாகக் கருதப்படும் இந்த டெஸ்ட் தொடர் வெற்றிகள் இலங்கை டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு, உலக நாடுகளிடையே பெரும் பாராட்டையும் வீரவேற்பையும் பெற்றுத் தந்தது.

வெளி நாட்டு மைதானத்தில் சென்று ஆடி, அந்தத் தொடரில் ஆடிய 3 டெஸ்ட்களிலும் வென்று, அவர்களது மைதானத்திலேயே அவர்களை Wash out செய்தது அல்லது படுதோல்வியடையச் செய்தமை இலங்கை அணிக்கு இதுவே முதற் தடவை.

1996 உலகக் கிண்ணப் போட்டியின் போதும் அதற்கு முன்னும் இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக வட்மோர் இருந்த காலத்தில் இலங்கை அணி கிரிக்கட் துறையில் உலகின் கவனத்தை ஈர்க்கும் சாதனைகளைப் புரிந்து உயர்ந்த இடத்துக்கு வந்தது.

அந்நேரங்களில் இலங்கை அணி பல சாதனைகளை நிலைநாட்டியது. குறிப்பாக மிகக் குறைந்த பந்துகளை எதிர்கொண்டு அதிவிரைவாக அரைச் சதம், முழுச் சதம் போட்டவர் என்ற பெருமையை சனத் ஜயசூரிய பெற்றார்.

ஒரு நாள் போட்டியில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற அணியும் இலங்கை அணிதான். அந்த சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றுக்கும் மேலாக 96இன் உலகக் கிண்ணத்தை வென்றெடுத்தது.

இவையனைத்தும் வட்மோர் பயிற்றுவிப்பாளராக இருந்த காலத்தில் பெறப்பட்டவை. இவ்வுலகக் கிண்ணப் போட்டித் தொடரின் இறுதியில் இறுதியாட்டம் இலங்கை அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் இடம்பெற்றது. அவுஸ்திரேலியரான வட்மோர் தன் தாய்நாட்டிற்கெதிரான போட்டியில் இன்னொரு நாட்டின் பயிற்றுவிப்பாளராக இருந்து அந்நாட்டு அணி வெற்றிபெறுவதை உறுதிப்படுத்தினார்.

1997ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தன்னுயை ஒப்பந்த காலம் முடிவடைந்தவுடன் அதை நீடித்துக் கொள்ள விரும்பாமல் தாய்நாடான அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுவிட்டார்.

விடைபெறுகையில் அவரை வழியனுப்பக்கூட முக்கியமான எவரும் விமானநிலையம் சென்றிருக்கவில்லை என்பது, அவரது முக்கியத்துவத்தை இலங்கையில் யாரும் அந்நேரம் சரியானபடி உணர்ந்திருக்கவில்லை என்பதையே வெளிக்காட்டி நின்றது.

அதன் பின் இலங்கை அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக ரோய் டயஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக்காலங்களில் அணி மிகவும் சோபையிழந்தே காணப்பட்டது. கலந்து கொண்ட பல போட்டிகளில் படுதோல்விகளையே தழுவியது.

அணியிலும் ஒற்றுமை குலைந்து போனது. 99ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் பங்குகொண்ட இலங்கை அணி கால் இறுதிப் போட்டிக்குக் கூட தேர்வாகவில்லை.

அதன் பின் இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திர வீரர்களில் ஒருவரான ரொஷான் மஹாநாம அணியிலிருந்து விலகிக்கொண்டார்.

இதன் பின் இலங்கை அணியில் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. முக்கியமாக அணியின் தலைமை சனத் ஜயசூரியவின் கைக்கு மாறியது. பழைய அனுபவசாலிகளுக்குத்தான் தலைவர், உப தலைவர் பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும் என்ற நிலை மாறி அணிக்குள் புதிதாகப் பிரவேசித்திருந்த மஹேல ஜயவர்தனவுக்கு உபதலைவர் பதவி வழங்கப்பட்டது.

இக்காலங்களில்தான் இலங்கை கிரிக்கெட் சபை வட்மோரை மீண்டும் இலங்கை அணிக்கு பயிற்றுவிப்பாளராக அழைத்தது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவுஸ்திரேலியாவில் உள்ளூர் கிரிக்கட் கழகமொன்றின் பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தவர் இலங்கைக்கு வந்து சேர்ந்தார்.

தனது முதலாவது பத்திரிகை மகாநாட்டின் போது, "உடனடி மாற்றங்களை அல்லது வெற்றிகளை எதிர்பார்க்க வேண்டாம்" என விநயமாகக் கூறியிருந்தார். இருந்தபோதும், அவரது பயிற்சியின் கீழ் இலங்கை அணி அவுஸ்திரேலியவுடனான போட்டிகளில் இங்கு வெற்றி பெற்றது.






அதன் பின் சிம்பாப்வே அணியுடனான போட்டித் தொடரிலும் பல வெற்றிகளை ஈட்டியது. தொடர்ந்து மும்முனை ஒரு நாள் போட்டித் தொடரிலும் வெற்றிபெற்றது.

வட்மோரின் பயிற்றுவிப்பிலுள்ள தனிச் சிறப்பு என்னவென்று பலரும் புரிந்துகொண்டார்கள். உலக கிரிக்கட் அரங்கில் அண்மைக் காலங்களில் கொடிகட்டிப் பறந்த, 99ம் ஆண்டின் உலகக் கிண்ணப் போட்டியில் ரன்னஸ்அப் என்ற நிலையில் இருந்த பாகிஸ்தான் அணியை அவர்கள் மண்ணிலேயே பந்தாடியது இலங்கை அணி.

ஒருநாள் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை வெற்றிபெற்றதும் வட்மோர் தனது இரு கைகளையும் உயர்த்தி குதூகலித்துத் துள்ளியதை நாமும் தொலைக்காட்சியில் காணக்கூடியதாக இருந்தது. தனது உழைப்பின் வெற்றியை முழுமையாக அனுபவித்தார் அவர்.

பாகிஸ்தானில் இலங்கையணி பெற்ற வெற்றியின் பின்பு டெஸ்ட் போட்டிகளுக்கான நாடுகளின் வரிசைப்படுத்தலில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தானில் ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் பல வீரர்களினதும் திறமைகளை அதாவது *Performance*ஐ பார்த்ததிலிருந்து, உலக நாடுகள் அணிக்கும், ஆசிய நாடுகளின் அணிக்கும் நடைபெறும் ஒரு நாள் சர்வதேச போட்டிகளுக்கும் இலங்கையணியிலிருந்து சனத் ஜயசூரிய, அரவிந்த டி சில்வா, முத்தையா முரளிதரன் போன்றோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இப்படியாக இலங்கை அணி, பெயரும், புகழும் பெற்று மீண்டும் வெளிச்சத்துக்கு வருவதற்கான அநேக காரணங்களைத் தொகுத்து நாம் ஆராயும்போது இவற்றுக்கெல்லாம் மூல காரணமாக இருப்பவரை மறப்பது சரிதானா?

வட்மோர், இலங்கை அணியின் பயிற்றுநராக மீண்டும் பதவியேற்றதன் பின் அணி சகல தொடர்களிலேயும் வெற்றிகளை ஈட்டிக் கொண்டது என்பது காகம் உட்காரப் பனம் பழம் விழுந்த கதை யல்ல. அவரது உழைப்பினதும் உத்திகளினதும் வெற்றி என்று நாம் மனமுவந்து அங்கீகரிப்பதில் தவறேதுமில்லை.

1977 - 1998 கால கட்டங்களில் அணியின் தோல்விகளையும் 1999 - 2000 த்தில் அணியின் வெற்றிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வட்மோரின் சாதனை விளங்கும்.

வட்மோரின் கெட்டித்தனம் போற்றுதற்குரியது என்பதெல்லாம் ஒருபுறமிருக்க, அவர் ஒன்றும் முடவர்களை ஓட்டப் பந்தயத்தில் ஜெயிக்கவைக்கவில்லை என்பதும் உண்மை.

**- கிங் ரட்ணம்**



## சுமைகள்

**கற்பனையில் உருப்பெற்றுக்**
**கல்லாய் வடிவெடுத்த கடவுளே**
**அனைவர்க்கும்**
**கருணைக் கண்ணளிப்பீர்- அதிலே**
**உண்மையொளி சேர்ப்பீர்**
**எல்லாரும் வாழ்க - அவர்க்குள்ளே**
**நீரும் வாழ்வீர்.....**
**சுமைகளைத் துறந்த**
**எனக்கு**
**புதிதாய் எத்தனை சுமைகள்!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





குங் ஃபூ தற்காப்புக் கலை தற்போது சினிமாவிலும் ஒரு முக்கிய பாத்திரத்தை எடுத்துள்ளது. குங் பூவின்

# சினிமா குங் ஃபூ

ஆற்றலை அறிந்துகொண்ட சினிமா உலகம் அதனைத் தனது பிரமாண்டமான படைப்பிலும் பயன்படுத்திக் கொள்ள ஆர்வம் காட்டுகிறது.

இது ஒருபுறம் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் - குங் பூ நுட்பங்களை எடுத்துக்காட்டி ரசிகர்களுக்கு பேரார்வத்தை ஏற்படுத்தக் கூடிய அனுகூலம் இருந்தாலும் - அதேநேரத்தில் இதனை முறையான ரீதியில் காண்பிக்காமல், பிரபலயத்துக்கான ஸ்டண்டாக மட்டும், கொச்சைப்படுத்திய அரைகுறை அறிவோடு, சினிமாப் பொய்மைகளின் துணையோடு சித்தரிக்க முனையும்போது, ஒரு ஏமாற்று வித்தையாகவும் இக் கலை மலினப்பட்டுவிடக் கூடிய ஆபத்து உண்டு.

இதனால் ரசிகர்களுக்கு உண்மையான இக் கலை போய்ச் சேருவதுமில்லை. அதேவேளை இக் கலைக்கும் அதற்குரிய பெருமை சேரப்போவதில்லை.

இக் குங் ஃபூ கலையானது வெறும் சண்டை நுட்பமல்ல. அதில் பல தத்துவக் கருத்துக்கள் அடங்கியுள்ளன. ஆனால் சினிமாவில் குங் ஃபூ சித்தரிக்கப்படும்போது அதன் பின்னாலுள்ள தத்துவம் பல சந்தர்ப்பங்களில் கைவிடப்பட்டு, வெறும் சண்டை நுட்பங்களே முன்னிலைப்படுத்தப்படுகிறது. ஒருசில சந்தர்ப்பங்களில் சிலர் அதன் தத்துவங்களை கூடவே விளக்க முற்பட்டாலும், அது பாரிய அளவில் வெற்றியடையவில்லை. காரணம் சினிமாவின் யதார்த்தத் தன்மை! அதாவது சினிமா ஒரு பலபொருள் விளக்கம் தரக் கூடிய ஊடகமல்ல. ஒரு பொருளையே - அதுவும் இயக்குநரின் கோணத்திலேயே- சித்தரிக்கும் வகையிலானது.

புரூஸ்லீ தனது படங்களில் இவ் அரிய கலையின் உள்ளார்ந்த தத்துவங்களையும் கூடவே விளக்க பெரு முயற்சி எடுத்துக்கொண்டவர். ஆனால் அவ் விளக்கங்கள் எவ்வளவு தூரம் ரசிகர்களுக்குப் புரிந்தது என்பது கேள்விக்குரியதே. அவர்கள் புரூஸ்லீயின் மிகக்கடுமையான குங் ஃபூ சண்டையின் 'த்திரில்லை' மட்டுமே ரசிக்க விரும்பினர்.

உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்வதாயின்...

**'என்டர் த ட்ரகன்'** என்ற அவரது உலகப் புகழ்பெற்ற திரைப்படத்தில் ஒரு கட்டத்தைச் சுட்டிக் காட்டுகிறேன்.

புரூஸ்லீ எதிரியின் இருப்பிடத்தைத் தேடி கப்பலொன்றில் பயணித்துக் கொண்டிருக்கும் போது புரூஸ்லீயை ஒருவன் வம்புச் சண்டைக்கு இழுக்கிறான். அதற்கு புரூஸ்லீ, அருகில் தெரிந்த தீவென்றைக் காட்டி அங்கு போய் இருவரும் சண்டையிடலாம் என அவனுக்குக் கூறி, கப்பலிலிருந்து படகொன்றில் அவனை மட்டும் ஏற்றிவிட்டு அதன் கயிற்றை அவிழ்த்து விடுகிறார். அவன் நடுக்கடலில் தத்தளிக்க, புரூஸ்லீ தன்பாட்டில் கப்பலில் பயணம் தொடர்கிறார்.

'என்டர் த ட்ரகன்' படம் பார்த்த எவருக்கும் இக் கட்டம் நன்கு நினைவிருக்கும். ஆனால் அவர்கள் அதனை ஒரு நகைச்சுவையாகவே கருதிப் பார்த்திருப்பர். ஆனால் இது புரூஸ்லீ சிரத்தையுடன் சிந்தித்து அமைத்த ஒரு கட்டம். இதில் குங் ஃபூ கலையின் ஒரு பிரதானமான தத்துவத்தை அவர் சொல்லியிருக்கிறார்.

குங் ஃபூ கலையை 'சண்டையிடாமல் செய்யும் சண்டை' என நாம் வர்ணிப்போம். அதாவது எதிரியின் பலத்தைக் கொண்டே எதிரியை வீழ்த்தும் நுட்பம் இது.

புரூஸ்லீ இங்கே எதிரியுடன் சண்டையிடாமலே எதிரியை வீழ்த்திய இந்த மதியூகமான செயலை குங் ஃபூ கலைக்கான எடுத்துக்காட்டாகச் சித்தரிக்கவே படத்தில் புகுத்தியிருந்தார். ஆனால் இது எவ்வளவு பேருக்குப் புரிந்தது?

ஆனால் சீன குங் ஃபூ கலைஞர்களான எம்மைப் பொறுத்தவரையில், - சினிமாவிலும் சரி - இத் தற்காப்புக் கலையை இயன்றமட்டும் எவ்வளவு தூரம் உண்மையானதாகக் காண்பிக்க முடியுமோ அந்தளவு முழு முயற்சி எடுப்போம். நாம் சினிமாவில் வெளிப்படுத்தும் சகல ஸ்டண்டுகளையும் நாமாக வேதான் செய்வோம். எமக்காக டூப் ஸ்டண்ட் விற்பன்னர்களை நடிக்க வைப்பதில்லை.

நாம் இதற்காக மிகச் சிரத்தையுடன் நீண்ட பயிற்சி எடுத்திருப்போம். பொய்யான பாவனைகளைக் காண்பிக்கவோ, கமெரா ட்ரிக்ஸின் மூலம் மாயக் காட்சிகளால், இல்லாத ஆற்றலை மிகைப்படுத்திக் காண்பித்து ஏமாற்றவோ விழையமாட்டோம்.

ஆனால் இன்று பொதுவாக, இந்திய மற்றும் ஹொலிவூட் திரைப்படங்களிலெல்லாம், தற்காப்பு கலையை சித்தரிக்கும் விதம் மிகவும் வேடிக்கைக்குரியதாக இருக்கிறது. இங்கு சண்டை வீரர்களாகவும் வில்லன்களாகவும் வருபவர்கள் பெரிய தோற்றத்துடனான தடியர்களாகக் காண்பிக்கப்படுகின்றனர். உண்மையான சண்டை ஆற்றல் உடற் பருமனில் இல்லை என்பதும், அதற்கு எதிர்மறையாக, வளைந்து கொடுக்கும் சதைப்பிடிப்பற்ற நார்த்தன்மைவாய்ந்த தேகக் கட்டே சண்டையிட அனுகூலமானது என்பதையும் சினிமா உலகம் கண்டு கொள்ள மறுக்கிறது.



புரூஸ்லீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அது ரசிகர்களுக்கு பொய்யான கற்பிதங்களை ஊட்டுகிறது.

அத்துடன் இங்கே சண்டை வீரர்களின் ஸ்டண்டுகள் விறைத்த தன்மை கொண்டவையாகவும், வேகமற்றதாகவும், அடுத்து என்ன அசைவைச் செய்வாரென முன்கூட்டியே எதிர்வு கூறக்கூடிய வகையிலும் இருக்கின்றன. ஒரு தொடர்ச்சி, இயல்புத்தன்மை இருப்பதில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்கில் பறப்பர். ஏன் என்ற ஒரு காரணக்கோவை இல்லாத பறப்பாகவே அது இருக்கும்.

**உலகில் மிகக்கூடிய வாகனப் போக்கு வரத்து நிகழும் அத் தெருவில், ஜக்கி சான், ஒன்று மாறி ஒன்றாக வாகனங்களுக்குப் பாய்ந்து பாய்ந்து சென்று தெருவின் உயரத்தில் தொங்கிய 'ஹொலிவூட்' என்ற பெயர்ப்பலகையை எட்டிப்பிடித்துத் தொங்கினார்.**

இதேவேளை இப் படக் காட்சியில் அளவுக்கதிகமான விரைந்த வெட்டுக்கள் (Cuts) இருக்கும். அதாவது தாக்குதலையும் விளைவையும், நிறுத்தி நிறுத்தி, வெவ்வேறாகப் படம்பிடித்து இணைத்த இத் தன்மை சினிமா நுட்பங்கள் புரிந்தவர்களுக்கு நகைப்புக்குரியதாக இருக்கும். இது ஒரு தற்காப்பு கலையை சித்தரிக்கும் சண்டைக் காட்சி என்பதைவிட நகைப்பூட்டச் செய்யும் வேடிக்கைக் காட்சிபோலவே அதிகம் அமைந்திருக்கும். இங்கு கூடுதலாக கமெரா ட்ரிக்குகளே உதவுகின்றன.

ஆனால் எமது குங் ஃபூ சண்டைக் காட்சிகளின் இரகசியம் என்னவென்றால், முதலாவது படி இரண்டாவது படிக்கு வழி வகுப்பதாகவும், இரண்டாவது படி மூன்றாவது படிக்கு வழிவகுப்பதாகவும் உள்ள இயல்பான தொடர்ச்சியே!

எங்கள் சண்டை அமைப்புகள், பலவித வாத்தியங்களையும் தொகுத்து அழகாக இசையமைக்கப்பட்ட ஒரு பாடலை ஒத்திருக்கும்.



அனால், மேற்குறிப்பிட்ட சினிமாப் படங்களில் சண்டைக்காட்சிகள் செய்கைகளிலிருந்து விடுபட்டதாக இருக்கும். யாராவது ஒருவர் அடிபட்டு யன்னலால் வீசப்படுவார். அப்போது, கமரா அடித்தவரின் ஆக்ஷனைக் காட்டும் ரியாக்ஷன் ஷொட்டாகத் திரும்பிவிடும். அடுத்த காட்சியில் கீழே விழுந்தவரின் நிலை காட்டப்படும்.

இது ஏனென்பது இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியது. ஏனென்றால், எந்தப் பிரபல நடிகர்களும் சினிமாவுக்காக மாடியிலிருந்து உண்மையாகவே ஜன்னலால் குதிக்க முன்வரப் போவதில்லை. டூப் நடிகர்களை வைத்தே இது செய்விக்கப்படுகிறது. அல்லது கொம்ப்யூட்டர் அனிமேஷன் உத்திகளின் உதவியோடு செய்விக்கப்படுகிறது. இது பாதுகாப்பானதாக இருக்கலாம். ஆனால் போலியானது.

எமது படங்களில் (சீனா, ஹொங்கொங் படங்களில்) கமெரா ஜன்னலால் விழுபவரை முழுமையாகக் காட்டும் - அவர் ஜன்னலிலிருந்து பாய்ந்து தரையில் விழும்வரை! ஏமாற்று இருக்காது.



ஜக்கி சான்

குதிப்பதுபோல் பாவனை காட்டும் ஹீரோவும், உண்மையில் குதிக்கும் டூப்புமாக இருவர் இருப்பதில்லை. நீங்கள் திரையில் எதைப் பார்க்கிறீர்களோ அது நாம் உண்மையாகவே செய்ததாக இருக்கும்.

தற்பாதுகாப்புத் தயாரிப்புகளை எடுப்பது தவறென்று நான் இங்கு சுட்டிக்காட்டவில்லை. ஆனால் எமது ஹொங்கொங் சினிமாவில் நாம் எம்முடைய பயிற்சியைத்தான் எமக்கான பிரதானமான பாதுகாப்பாகக் கருதுகிறோம்.

சில வருடங்களுக்கு முன் வெளியாகி, சில மாதங்களுக்கு முன் இலங்கையில் திரையிடப்பட்ட Rush Hour திரைப்படத்தில் ஜக்கி சான் செய்த ஒரு ஸ்டண்ட்டை உதாரணத்துக்குக் கூறலாம். அத் திரைப்படம் எடுக்கப்பட்ட போது ஜக்கி சானிடம் நீங்கள் செய்கின்ற ஸ்டண்டுகளையெல்லாம் நிஜ வாழ்க்கையில் உண்மையாகவே யாராலும் செய்ய முடியுமா என்று சிலர் கேட்டனர். அதற்கு ஜக்கி, "நான் உங்கள் முன் நிஜ வாழ்க்கையிலேயே ஒரு ஸ்டண்டைச் செய்து காட்டுகிறேன் எனக்கூறி, அந்த மிகப் பரபரப்பான ஹொலிவூட் தெருவில் ஒரு ஸ்டண்ட் காட்சியைப் படமாக்கச் சொன்னார்.

உலகில் மிகக்கூடிய வாகனப் போக்குவரத்து நிகழும் அத் தெருவில், ஜக்கி சான், ஒன்று மாறி ஒன்றாக வாகனங்களுக்குப் பாய்ந்து பாய்ந்து சென்று தெருவின் உயரத்தில் தொங்கிய 'ஹொலிவூட்' என்றபெயர்ப் பலகையை எட்டிப்பிடித்துத் தொங்கினார். அப் படத்தில் வரும் இக் காட்சி செட் அமைத்துச் செய்ததல்ல, உண்மையாகவே சாதாரண தெருவில் ஜக்கி சானால் செய்து காட்டப்பட்டதொன்று.

இக் காட்சியில் அமைந்தது போல, அப் படம் மூலம் ஜக்கி ஹொலிவூட்டைத் தன் கையில் பிடித்துக்கொண்டார். ஆம்! இப் படம் அவருக்கு அவ்வருடம் நம்பர்-1 ஹொலிவூட் நடிகரென்ற பெயரைப் பெற்றுக் கொடுத்தது.

**எந்தப் பிரபல நடிகர்களும் சினிமாவுக்காக மாடியிலிருந்து உண்மையாகவே ஜன்னலால் குதிக்க முன்வரப் போவதில்லை. டூப் நடிகர்களை வைத்தே இது செய்விக்கப்படுகிறது.**

'ட்ரகன் வேர்சஸ் ட்ரகன்' திரைப்படத்தில் நான்கூட சில்லுப் பூட்டிய சப்பாத்துடன் மாடியிலிருந்து மாடி பாயும் ஒரு காட்சியில் என் காலை முறித்துக் கொண்டேன். ஆயினும் அப் படம் எனக்கு 'இன்டர் நேஷனல் குங் ஃபூ ஸ்டார்' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது.

சினிமாவாக இருந்தாலும் நாம் செய்யும் குங் ஃபூ ஸ்டண்டுகளை மிகுந்த சிரத்தையுடன் பயிற்சி செய்து உண்மையாகவே நிகழ்த்துகிறோம். இந்த வகையில் ஏனைய சினிமா உலகின் ஸ்டண்டுகளுக்கும் எமது வெளிப்பாடுகளுக்கும் வித்தியாசத்தை ரசிகர்கள் உணரமுடியும்.

**- பில்லி வொங்**

**தமிழில்: து. பாஸ்கரன்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ராமர் ஆனாலும் பாபர் ஆனாலும்...

சினிமா

திரைப்படங்கள் உண்டாக்கும் சமூக விளைவு பற்றி உடனடி உதாரணமாக ஒரு சர்ச்சை அண்மையில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது. மற்றெந்தப் பிரச்சினையை விடவும் மத ரீதியான தாக்குதல்கள் விழுகிற போது மக்கள் அதிகம் உணர்ச்சிவசப் படுகிறார்கள். இந்தியாவின் அரசியல் சூழல் இதற்கு முக்கிய காரணமாயிருக்கிறது.

டைரக்டர் மணிரத்னம் **இருவர்** படத்தில் திராவிடக் கட்சிகளின் அரசியலையும், **உயிரே**யில் நாகலாந்து இனப் பிரச்சினையையும் கதைக்கென எடுத்துக்கொண்ட போது ஏற்படாத அளவு பிரச்சினை, **பம்பாய்** படத்தில் மதக் கலவரத்தை எடுத்துக்கொண்ட போது ஏற்படுகிறது. மணிரத்னத்தின் வீடு தாக்கியுடைக்கப்படுகிறது. டைரக்டர் **தீபா மேத்தா**வின் படங்கள் இந்துத்துவ ஆசாரங்கள், கோட்பாடுகளை கேள்விக்குள்ளாக்குவதாலேயே பலத்த சர்ச்சையையும், அடிதடி தீவைப்பு மோதல்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

ஏதேனும் ஒரு நம்பிக்கை அல்லது அடையாளத்தினடிப்படையில் ஒரு சமூகப் பிரிவினர், தங்களது நலன்களுக்கிடையே ஒற்றுமையை உணர்ந்து அணி திரள்கையில் - அரசியல் இயக்கம் பெறும் இந்த நடவடிக்கை வகுப்புவாதம் ஆகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், இந்த அணி திரள்கை மத ரீதியிலேயே பிரதானமாக நடைபெறுகிறது. இந்து - முஸ்லீம் என்ற இன்றைய இந்த முரணும் வகுப்புவாதமும் காலனிய ஆட்சியாளர்களால் கட்டமைக்கப்பட்டதே.

இந்தியாவில் இந்துக்களை இஸ்லாமிய அடையாளங்களிலிருந்து விலக்குதலும், இந்து - இஸ்லாமிய ஒற்றுமையைக் குலைத்தலும் வெள்ளையர்களது தொடக்ககால முயற்சிகளிலொன்றாக இருந்தமைக்குப் பல எடுத்துக்காட்டுகள் காட்டப்படுகின்றன.

இந்தப் பின்னணியில்தான், இந்திய சுதந்திரத்தையொட்டி பாகிஸ்தான் பிரிவினையும், இந்து-முஸ்லிம் கலவரங்களும் வெடித்தன. 1817ல் ஆங்கிலேயர்கள் முதல் இந்துக் கல்லூரியைத் தொடங்கிய கல்கத்தாவிலேயே பிரிவினையின் போது வன்முறைகளும் அதிகம் இடம் பெற்றன.

1947ல் கல்கத்தாவில் இடம் பெற்ற வன்முறைகளில் மனைவியை இழந்த சாகேத்ராமன், கலவரத்திற்குக் காரணம் திரு. மோகன்தாஸ் கரம்சந்த் காந்திதான் என்று நண்பர் ஸ்ரீராம் அபியங்கர் கூறும்போது ஒரு வகையில் மூளைச் சலவைக்கு ஆளாகிறான். காந்தியைத் தீர்த்துக்கட்டத் திட்டமிடும் குழுவினரோடு இணைந்துகொள்கிறான்.

காந்தியைச் சுட்டுக்கொல்ல வேண்டிய நாள் நெருங்குகையில் ராமன் டெல்லியில் தனது பழைய நண்பன் அம்ஜத் அலிகானைச் காண்கிறான். மற்றுமொரு வன்முறைச் சூழலில் இருவரும் சந்தித்துக் கொள்கிறார்கள்.

நண்பன் அம்ஜத் சொல்லப்படுகிறான். ராமன் மனம் மாறி ஓடி வருகையில் காந்தி சுடப்பட்டு விடுகிறார் மற்றொரு இந்துத் தீரவாதியால்.

இதுதான் கமல்ஹாசன் தனது ‘ஹேராம்’ படத்திற்காக எடுத்துக்கொண்ட கதை.

இந்து - முஸ்லிம் உறவை ஒரு பார்வையில் சத்திர சிகிச்சைக் குட்படுத்துகிறது படம்.

சாகேத்ராமன் என்கிற தாத்தா கமலின் பின்னோக்கிய ஓட்டத்தில் (Flash Back) ஆங்கிலேயர்கள் ஆண்டிருந்த காலத்து இந்தியாவில் கதை நிகழ்கிறது. கமலும் ஷாருக்கானும் இந்து - முஸ்லிம் நண்பர்கள். தொல்பொருள் அகழ்வாராய்ச்சி செய்கிறவர்களாக ஆங்கில அதிகாரிகளின் கீழ் வேலை பார்க்கிறார்கள்.

அந்தக் காலத்தில் இந்தியர் எல்லோரும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற ஒற்றைப்படைத் தன்மையான சித்தரிப்பை உடைத்து, ஆங்கில அதிகாரிகளுடன் விருந்துண்டு பாட்டுப் பாடி, உல்லாசமாக





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒட்டு ஒண்ணுதான் சகோதரா!

இருக்கும் மனிதர்களை நாயகர்களாக்கிக் கொண்டு தொடர்கிறது படம்.

கமலின் வங்காள மனைவி ராணி முகர்ஜி, கலவர வேளையில், அக்குடும்பத்திற்குச் சலாம் போடும் ஒரு முஸ்லிம் இளைஞனால் கொல்லப்படுகிறாள். கோபம் கொண்டு தெருவில் இறங்கும் கமல், கலவரத்தைப் பயன்படுத்தி பல முஸ்லிம்களைச் சுட்டுத் தள்ளுகிறார். அவரது கோபமும் வேகமும் பார்வையற்ற ஒரு சிறுமியின் கூக்குரல் அழுகையில் படிப்படியாக அடங்குவதை நடிப்பில் காட்டுகிறார் கமல்.

அவ்வேளையில் ஸ்ரீராம் அபியங்கரைச் (அதுல் குர்கர்னி) சந்திக்கிறார். 'கலவரங்களுக்குக் காரணம் பிரிட்டிஷ்காரனோ, முகம்மது அலி ஜின்னாவோ அல்ல. மிஸ்டர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்திதான்' என்று சொல்லி, தடை செய்யப்பட்ட ஒரு புத்தகத்தைக் கமலிடம் படிக்கக் கொடுக்கிறார்.



காதல் மனைவியின் இனிய நினைவுகளால் அலைக்கழிக்கப்படும் கமல், புத்தகத்தைப் படித்த பிறகு காந்தியே... அவரைக் கொல்வதே தனது இலக்கு என்று நிர்ணயிக்கிறான்.

பாதிக்கப்பட்ட ஒரு இந்து இளைஞனின் பார்வையிலேயே படம் செல்வதால், கமல் உண்மையிலேயே பிறப்பால் பிராமணராகவும் இருப்பதால், ஆரம்பத்தில் இது தவறாகப் புரிந்து கொள்ளப்படவும் ஏதுவாகியிருக்கிறது.

ஷாருக்கானுடன் வாக்குவாதப்பட நேரும் சமயத்தில் முஸ்லீம் வெறுப்புணர்வை வார்த்தைகளில் உமிழ்கிறார் கமல்ஹாசன். "நீங்களெல்லாம் ஹைபர் கணவாய் வழியாக வந்தவர்கள்தானே திரும்பிப் போய்விடுங்கள்" என்று குமுறுகிறார். முஸ்லீம்கள் இந்தியாவின் சொந்தக்காரர்களல்ல.... நீ இஸ்லாமியனாக இருப்பதே தேசத் துரோகமானது... இந்து மயமாகு இல்லாவிட்டால் ஓடு... பாபரின் பிள்ளைகளே பாகிஸ்தானுக்கு ஓடுங்கள்... மசூதியா மரணமா எதுவேண்டும் சொல்... போன்ற கலவரகால முஸ்லீம் எதிர்ப்பு முழக்கங்களை பச்சையாக முன்வைக்கிறார் கமல்.

கடைசிக் காட்சிகளில், நண்பன், ஷாருக்கைக் காப்பாற்றுவதற்காக டெல்லி கணேஷ் தலைமையிலான இந்துத் தீவிரவாதிகளிடம் போராடும்போது, "இவன் என் தம்பி பரத். முஸ்லீம் பெண்ணைக் காதலித்து, பேரையும், உடையையும் இப்படி மாற்றிக்கொண்டு திரிகிறான். இவனை விட்டுவிடுங்கள்..." என்று மன்றாடுகிறார் கமல்.

அதே நேரத்தில் ஷாருக்கான், தான் இந்துவல்ல இஸ்லாமியன்தான் என்று முன்னே வருகிறார். ராமனின் தம்பிதான். ஆனால் பரத் அல்ல அம்ஜத்... அம்ஜத் அலிகான்.. நானும் இந்தியன். தந்தை காந்தியின் பிள்ளைகளில் ஒருவன்... என்று தன் அடையாளத்தை மறைப்பதை மறுத்து, என் அடையாளத்துக்குக் கொல்வதானால் கொல்லுங்கள்... இந்தியனாகச் செத்துப் போகிறேன்..." என்று வெடிக்கிறார்.

இதைத்தான், "எல்லா முஸ்லிம்களும் ஷாருக்கான் போல் இருந்துவிட்டால் பிரச்சினையில்லை" என்று முதலமைச்சர் கருணாநிதி மேடையில் பேசப்போக, தமிழக முஸ்லிம்கள் கொதித்தெழுந்தார்கள்.

என்னதான் இருந்தாலும், இரண்டாவது பிரஜையாக, என்னை முதல் பிரஜை என்ற கௌரவத்தோடு மதித்து வாழ்வதாக இருந்தால், இருவருமே இந்த நாட்டில் சகோதரத்துவத்தோடு வாழலாம் என்ற பெரும்பான்மை சார்ந்த மனப்பாங்குதான் அவரிடமும் வெளிப்பட்டிருக்கிறது என்பதே முஸ்லிம் அமைப்புக்களின் கண்டனம்.

அது ஒருபுறமிருக்க, கமலின் படத்தைப் பொறுத்தவரையில், முஸ்லிம்களுக்கெதிரான பெரும்பான்மை இந்துக்களின் மனோவியலை முன்வைத்தபடி, அதிலுள்ள முட்டாள்த் தனத்தையும் பாசிசத் தன்மையையும் காட்டியபடியே அது நகர்கிறது.



www.tamilarangam.net



இந்துத் தீவிரவாதிகளான அபியங்கரின் குழுவை ஆதரிக்கும் ஓர் இந்து மகாராஜா (விக்ரம் கோகலே) காந்தியைக் கொல்லும் பொறுப்பை அபியங்கரிடமும், சாகேத் ராமிடமும் ஒப்படைக்கும்போது பின்னணியில் ஹிட்லரின் படம் இருக்கிறது.

அபியங்கரினால் மகாராஜா அறிமுகப்படுத்தப்பட்டு, சாகேத்ராம் அவர் பின்னால் போகையில், அடியெடுத்து வைக்கும் பாதையை கமெரா குளோசப்பில் காட்டுகிறது. சேறும் சகதியுமான அசிங்கப் பாதையில் நடக்கிறான் சாகேத்ராம்.

இந்துத் தீவிரவாத அமைப்பில் இணைந்து கொள்வதற்காக மகாராஷ்டிரா போகும் கமலைக் காண்பிக்கையில், அங்கு நடைபெறும் ஓர் பிரமாண்ட ராமாயணக் கேளிக்கை விழாவும் காட்டப்படுகிறது. பிரமாண்டமான மின்குமிழ் அலங்கரிப்பில் இருக்கும் ராவண உருவத்திற்கு ராமன் விடும் பாணம் சென்று தைக்கையில் நாஸிகளின் **ஸ்வஸ்திக்கா** வடிவில் தோன்றும் மின் அலங்கார வடிவம் **தாமரை**யாக மாறுகிறது. (தாமரை இந்துத் தீவிரவாதிகளின்-பாரதீயஜனதாவின் சின்னம்)

சாகேத்ராம் தாத்தாவாகி, உயிருக்குப் போராடும் நிலையில், சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்படும் வழியில் இன்றைய மற்றுமொரு இந்து - முஸ்லிம் கலவரத்தில் சிக்கிக் கொள்கிறார். கலவரத்தின் கதை முடியவில்லை என்பதைச் சொல்லும் வகையில், குண்டு வெடிப்புகளுக்கு மத்தியில், போலீஸ் அதிகாரி ஒருவரால், கால்வாய்க்குள் இறக்கிவிடப்பட்டு பாதுகாப்புடன் சிகிச்சையளிக்கப்படுகிறார்.

ஆனால், வெளியே கலவரம் நிகழ்ந்து கொண்டிருக்கும் வேளையிலே தாத்தாவின் உயிர் பிரிந்துவிடுகிறது.

கலவரம் ஓய்ந்த பிறகு போலீஸ் அதிகாரி நாஸர் வந்து கால்வாய் மூடியைத் திறந்து "தாத்தா எப்படி இருக்கிறார்?" என்று டாக்டர்களை விசாரிக்கிறார். அவர் இறந்துவிட்டதைத் தெரிவிக்கும் அவர்கள், கருணையோடு நடந்துகொண்ட அந்த அதிகாரியின் பெயரைக் கேட்கிறார்கள்.

"இப்ராஹிம்" என்று பதில் வருகிறது.

இப்படிப் பல இடங்களிலும் இந்துத் தீவிரவாதத்திற்கு எதிராகவே குரலெழுப்பியிருக்கிறது ஹேராம்.

ஆனால், இது அங்கே தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுச் சர்ச்சைக்குள்ளானதற்கு வேறு காரணங்கள் உண்டு.


நந்திதா தாஸ்
சபானா ஆஸ்மி
தீபா மேத்தா

அயோத்தியில் பாபர் மசூதி இந்துத் தீவிரவாதிகளால் இடிக்கப்பட்ட காலத்தில் ஜி. எஸ். ஆர். கிருஷ்ணன் என்பவர் காலச்சுவடு இதழில் எழுதியிருந்ததைக் குறிப்பிடலாம். அவர் தனது நீண்ட கட்டுரையின் நடுவே இப்படி எழுதுகிறார்:

"ராமர் கோயில் கட்டத்தான் வேண்டும். மேலும் சில மசூதிகள் அகற்றப்பட்டு அங்கிருந்த கோயில்கள் மீட்கப்படுவதும் தவறல்ல என்று நான் கூறுவது பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற அர்த்தத்தில் அல்ல. மதச் சார்பின்மை என்ற கொள்கைக்கு நாம் உண்மையாக நடக்க வேண்டும் என்பதற்காக ஒரே ஒரு மசூதியும் தாக்கப்படக்கூடாது என்று பிடிவாதம் பிடித்து, ஒவ்வொரு நாளும் மதக் கலவரங்களை சந்திப்பதை விட, இந்துக்களின் மனப் புண் ஆறும் வழிகளை மேற்கொள்வதுதான் விவேகம்..."

இவ்வாறு தான் ஒரு பெருந்தன்மைமிக்க இந்து என்று காட்டிக்கொண்டு, தன்னிடமுள்ள நச்சுத்தன்மையை அவரறியாமல் வெளிப்படுத்துவதில் நமக்குப் பெரும்பான்மை சார்ந்தோரின் மனோவியல் எப்படி இயங்குகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

பெரும்பான்மை மக்களால் பாவம் சிறுபான்மையினர் மிகவும் துன்பத்துக்குள்ளாகிறார்கள். எனவே, பெரும்பான்மை மக்களின் வெறியை அங்கீகரித்துச் சற்றே தனித்துக்கொள்ள விடுவதன் மூலம் சிறுபான்மை மக்களைக் காப்பாற்றலாம், சகோதரத்துவத்துடன் வாழலாம் என்று ஐடியா தருகிறார் அவர்.

மேலும் அவர் எழுதுகிறார்:

"....நம் ஆளும் வர்க்கமும் மேட்டுக்குடியினரும் மதச் சார்பின்மை என்ற கொள்கையை பிடித்துக்கொண்டு தொங்குவதால் மதக் கலவரங்களும் குறைந்ததாகத் தெரியவில்லை. முஸ்லீம் ஆட்சியில் தங்களுக்குப் பெரிய தீங்கும் அவமானமும் நடந்தது என்று காலங்காலமாக இந்துக்கள் மனப்புண்களைச் சுமந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு திரிவதும், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் முஸ்லிம்கள் தேசத் துரோகிகள், அவர்களை நம்பக்கூடாது என்று கூறுவதும், அவர்களை அடித்து நொறுக்குவதும் இந்திய நாகரிகத்தையே அழிக்கும். இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவது அவசியம். அதற்காக கசப்பான உண்மைகளை நாம் சந்திக்க வேண்டும். இன்றைக்கு விழும் அடியிலிருந்து தப்பிப்போம் என தற்காலிகமான தீர்வுகளை நாடாமல் இந்த சமுதாயத்தில் புகுந்துள்ள விஷத்தை அகற்ற வேண்டும். சகிப்புத்தன்மையும் விட்டுக் கொடுத்தலும் இந்திய கலாசாரத்திற்கு அந்நியமான பண்புகளல்ல....''

அப்படிச் சொல்லிக் கொண்டே சகிப்புத் தன்மையையும் விட்டுக் கொடுத்தலையும் அவர் யாரிடம் எதிர்பார்க்கிறார் என்று காட்டுவதிலிருந்து, பெரும்பான்மை சமூகத்தின் மனப்பாங்கை வெளிச்சம் போட்டுவிடுகிறார்.

இத்தகைய ஒரு சூழலில் 'ஹேராம்' அவசியமான குறுக்கீடு ஒன்றை நிகழத்துகிறது. இந்து-முஸ்லிம்களின் மன உணர்வுகளை அறுத்துப் பிளந்து காட்டிப் பேச முற்படுகிறது. ஆனந்த் பட்வர்த்தனின் விவரணப் படங்களைப் போல, சரி-பிழை, வெற்றி - தோல்வி என்று எவற்றையும் குறிப்பிட்டுக் காட்டாது 'இப்படி நடந்தது' என்று காட்டும் முறைமையில், அசிங்கத்தைத் தோலுரிக்கிறது.

உண்மைத் தன்மையைக் கொண்டுவருவதற்காகச் செய்யப்பட்ட, படத்தில் வரும் கதாபாத்திரங்கள் அவரவர் மொழியிலேயே உரையாடிக் கொள்ளும் அந்த உத்தியின் மூலம் பல வசனங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் ஆக்கியிருப்பது, ஹேராமின் குறை. குறிப்பாக ஷாருக்கானின் வசனங்கள் புரியாமையாலும் போதாமையாலும் விளக்கக் குறைவு ஏற்படுகிறது.

இதுவும், படத்தைப் புரிந்துகொள்ளாமலே பலர் எதிர்ப்புத் தெரிவிக்கக் காரணமாகிவிட்டது.

வடக்கில் காங்கிரஸ் கட்சியினர் தூண்டுதலில் நடைபெற்ற எதிர்ப்பு இத்தகையதே. முஸ்லீம்களுக்கு எதிரான கருத்துக்களைப் படம் முன்வைக்கிறது என்பது அவர்களது கூக்குரல்.



**பெண்களின் பிரச்சினை குறித்த படமா, அப்படியானால் சபானா அதில் நடிக்கிறாரா என்று கேட்குமளவுக்கு புகழ்பெற்ற நடிகை சபானா ஆஸ்மி. நடிப்பதில் மட்டுமல்ல திரைக்கு வெளியேயும் பெண்களின் பிரச்சினைகள், மற்றும் சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமாகக் குரல் கொடுக்கும் மானுட அக்கறையுள்ள பெண்ணாகவும் திகழ்கிறார். சர்ச்சைகள் இவருக்குப் புதியதல்ல. தென்னாபிரிக்காவுக்கு விசேட அதிதியாகச் சென்றபோது அதிபர் நெல்சன் மண்டேலா அவர்களினால் வழங்கப்பட்ட முத்தத்திற்காகவும் தனது நாட்டில் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தவர். பல்வேறு விருதுகளைப் பெற்ற திறமைமிக்க கலைஞராகவும் தன்னை நிருபித்திருக்கும் வசீகரமான ஆளுமை சபானா.**



இந்த அவசர எதிர்ப்புக்கு மற்றுமொரு அரசியல் காரணம் இருக்கிறது. வாரணாசியில் தீபா மேத்தாவின் **"வோட்டர்"** படத்திற்கான அரங்குகளை நொறுக்கியும் எரித்தும் பி. ஜே. பி. யினர் செய்த ஆர்ப்பாட்டத்திற்கான பதில் இதுதான் என்று அவர்கள் கருதியிருக்கலாம்.

பொதுவாக மத அடிப்படைவாதிகளால், தங்கள் மத நம்பிக்கைகளிலுள்ள ஓட்டைகளும் பிற்போக்குத் தனங்களும் கேள்விக்குள்ளாக்கப்படுவது சகித்துக்கொள்ளப்படுவதில்லை. அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, இந்துக்களாக இருந்தாலும் சரி, தங்கள் நம்பிக்கைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வன்முறையிலும் இறங்கிவிடுகிறார்கள்.

இந்த நம்பிக்கைகளும் இன/மத உணர்வென்பதும் இயல்பானவையல்ல, கட்டமைக்கப்பட்டவையே. சமூகத்தின் மேல் மட்டத்திலிலுள்ளவர்களால்-ஆதிக்க சக்திகளால் - காலத்துக்குக் காலம் தங்கள் வசதிக்கேற்ப உருவாக்கிப் பாரம்பரியமாக ஆக்கப்பட்டவைதான் இந்தப் பகுப்புகள் பிரிவுகளெல்லாம்.

மேலிருந்து கட்டுவிக்கப்படும் இந்த இன/மத உணர்வென்பது கட்டமைக்கப்பட்டதல்ல, இயல்பானதுதான் என்பதை நிறுவுவதற்கு பாரம்பரியம் என்பது ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

ஆனால், நமக்குச் சொல்லப்பட்டு வருகின்ற இந்தப் பாரம்பரியம் ஒன்றும் இயல்பானதல்ல. வரலாற்றுப் போக்கில் பல்வேறு காலகட்டங்களில் அவ்வக்கால ஆளும் வர்க்கங்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அன்றைய சூழலில் நிலவிய பல்வேறு கலாசாரக் கூறுகளில் (தங்கள் வசதிக்கேற்ப) ஒரு சிலவற்றை மட்டும் தேர்வு செய்து ஏதோ ஒரு வகையில் இலக்கியமாகவோ கல்வெட்டாகவோ பதிவு செய்து விடுகின்றன.

பின்னர் ஏதேனும் ஒரு கட்டத்தில் தன்னை நிறுவிக்கொள்ள முயலும் ஒரு குழு, அதற்குரிய வகையில் தன் கீழுள்ள மக்களைத் திரட்ட மேற்குறித்த பதிவுகளிலிருந்து ஒரு பாரம்பரியத்தைத் தேர்வு செய்து தொகுத்தளிக்கும். இதுவே நமக்கு புதிதாய் கண்டுபிடிக்கப்பட்ட பாரம்பரியமாகிறது.

இதே போல வேறொரு குழு தனது மேன்மையை நிறுவ முற்படும்போது முற்றிலும் வேறுபட்ட மற்றொரு புதிய பாரம்பரியத்தை கண்டுபிடிக்கும்.

இந்தக் கற்பிதங்களின் அடிப்படையிலேயே உருவான தமது நம்பிக்கைகளுக்காக மக்கள் வன்முறைக்கும், தன்னைச் சார்ந்திராத பிறரை அழித்தொழிப்பதற்குமென இறங்கி விடுகிறார்கள்.

தாங்கள் சார்ந்த குழுவின் நம்பிக்கைகளை, ஒழுங்கு விதிகளை மிகப் புனிதமானதாகக் கருதிக் கொள்கிறார்கள். அதற்கு ஏதேனும் குறுக்கீடு நிகழ்ந்தால் கொதித்து உணர்ச்சி வசப்படுகிறார்கள்.

அந்த வகையில்தான், தீபா மேத்தா தனது ஆஸ்தான நடிகைகளான **சபனா ஆஸ்மி, நந்திதா தாஸ்** மற்றும் பலரை வைத்து உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியிலுள்ள இந்து விதவைகளின் பிரச்சினைகளை வெளியே காட்ட முற்படும்போது பலத்த எதிர்ப்புக்காளாகிறார்.

இந்து மதத்தைச் சேர்ந்த இளம் விதவைகள் தலை மழிக்கப்பட்டதுடன், வீட்டின் இருட்டான பகுதிகளுக்குள் தங்கள் உணர்ச்சிகளையும் சாகடித்துக் கொள்கிறார்கள் என்று நம்புவதையே... அப்படி வெளியே அப்படிக் காட்டிக்கொள்வதையே மதவாதிகள் விரும்புகிறார்கள். அதற்குள்ளிருக்கும் உண்மையைத் தேட அவர்கள் முனைவதுமில்லை, விடுவதுமில்லை.

இதுதான் தீபா மேத்தா படங்களுக்கு உண்டாகும் எதிர்ப்புக்குக் காரணம். இவ்வாறான அடிப்படைவாதத்திலிருந்தே வெறியும் கிளர்ந்தெழுகிறது.

இந்திய மண்ணுக்கு இயற்கையாய் உரிய இந்து ஆட்சியை உருவாக்குவதே இயல்பானது... இன்றைய துயரங்களுக்கெல்லாம் விடிவளிக்கக் கூடியது... என்கிற கற்பிதமான கருத்துக்களினடிப்படையில் வன்முறையில் இறங்குகிறார்கள். இதற்கு எதிர் வன்முறையை முஸ்லிம்கள் தேர்ந்து கொள்கிறார்கள்.

பின்னோக்கிய வரலாறுப் பார்வையில் இந்த அசிங்கத்தை உணர்த்தும் முயற்சியே கமலின் ஹேராம்.

ஹே ராம் மீது புதியதொரு சர்ச்சையும் கிளம்பியிருக்கிறது. பிரபல எழுத்தாளரான ர.சு. நல்லபெருமாள், தான் எழுதிய கதையைத்தான் கமல் கொப்பியடித்து விட்டார் என்று குற்றம் சாட்டியிருக்கிறார். ர.சு. நல்லபெருமாள் எழுதி 1967ல் 'கல்கி' பத்திரிகையின் வெள்ளிவிழா போட்டியில் 7500 ரூபா பரிசு பெற்ற 'கல்லுக்குள் ஈரம்' நாவலின் மையக்கருவும் ஹே ராம் படத்தின் கதையும் ஒரே மாதிரியானவை என்று அவர் சொல்கிறார். இதேபோல் கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் 'சாரதா' படத்தின் கதைக்காக எழுத்தாளர் அகிலன் நீதிமன்றம் வரை சென்று போராடியதும் நினைவிருக்கலாம்.

பாகிஸ்தானின் உருவாக்கத்திற்குமுஸ்லீம்முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் எந்த அளவுக்குக் காரணமோ அந்த அளவுக்கு இந்து - இந்திய ஆளும் வர்க்கங்களும் காரணமாக இருந்தார்கள். பிரிவினைக்குப் பிறகு ஏற்பட்ட இரத்தக் களரிக்கு அவர்களும்தான் பொறுப்பு.



ஆனால் பிரிவினை தவிர்க்க முடியாதபடி ஏற்பட்டதும், தொடர்ந்து காந்தியை ஒரு தேசியத் தலைவராக வைத்திருப்பது தங்கள் நலன்களுக்குக் குந்தகம் என்பதை உணர்ந்தார்கள். பிரிவினையால் ஏற்பட்ட உயிரிழப்புகள், பொருளிழப்புகள் ஆகியவற்றுக்கானபழியை ஏற்றபலிகடாவானார் காந்தி.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தீவிரத்தன்மை போதாது என்று அதிலிருந்து விலகி, மேலும் தீவிரமான 'இந்து ராஷ்டிர தளத்'தைத் தொடங்கிய கோட்ஸே என்பவனின் கரங்களால் காந்தி கொலையுண்டார்.

காந்தியைப் பற்றிய ஆழமான ஆய்வுகளைச் செய்துள்ள கே. பி. கருணாகரன் என்ற அரசியல் ஆய்வாளர், இந்தியாவில் காந்தியின் சக்தியைச் சரியாகப் புரிந்துகொண்டவர்கள் இருவர் மட்டுமே என்று குறிப்பிடுகிறார்: ஒருவர் காந்தியைக் கொலை செய்த கோட்ஸே. மற்றொருவர் சுதந்திரத்திற்கு முந்திய இந்தியாவில் காந்திக்கு நிபந்தனையற்ற நிதி உதவியை வழங்கி சுதந்திரத்துக்கு பிந்திய இந்தியாவில் அந்த முதலீட்டிற்கான ஆதாயங்களை அறுவடை செய்து கொண்ட பிர்லா.

வழக்கு மன்றத்தில் தான் ஆற்றிய இறுதி உரையில் கோட்ஸே கூறியதாவது:

**"காந்தி இல்லாத இந்திய அரசியல் நிச்சயமாகக் காரியார்த்தம் வாய்ந்ததாக இருக்கும்; பதிலடி கொடுக்கக் கூடியதாக இருக்கும்; ஆயுதப்படைகள் கொண்டு பலமிக்கதாக இருக்கும் என்பதை உணர்ந்தேன். புத்தியற்றவன் என்றோ முட்டாள் என்றோ என்னை மக்கள் அழைக்கவோ வருணிக்கவோ கூடும். ஆனால் அறிவை அடித்தளமாகக் கொண்ட பாதையை, ஒரு வலுவான தேச நிர்மாணத்திற்கு அவசியமானது என்று நான் கருதும் பாதையைப் பின்பற்றுவதற்குத் தேசத்திற்கு இனி தடை இருக்காது."**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோயற்ற

# ஆண்மைக் குறைபாடு

டொக்டர் .எம்.கே. முருகானந்தன்

ஆனால் இன்று மனோவியலுக்கு மேலாக உடலியல், உடற்கூறு சம்பந்தமான காரணங்களும் இருக்கலாம் என்ற ரீதியில், விஞ்ஞானபூர்வமாக செய்யப்பட்ட ஆய்வுகள் இக் குறைபாடு பற்றிய பல உண்மைகளை வெளிக்கொணர உதவியுள்ளது.

**விளம்பரங்களில் வரும் மருந்துகள் இந்த அடிப்படைகளை கவனத்தில் எடுக்காமல் 'சர்வரோக நிவாரணி' போல் காட்டிக்கொள்கின்றன. இவற்றால் எந்தவித பிரயோசனமும் கிடையாது.**

### விஞ்ஞானபூர்வமாகச் சிந்தியுங்கள்

திடகாத்திரமான ஆண் ஒருவன் தனது தடித்த தசைகளை வெளிக்காட்டியபடி முக்கால் நிர்வாணத்தில் நிற்பான். அல்லது ஒரு இளவயது ஆணும் பெண்ணும் நெருக்கமாக அணைத்தபடி சல்லாபித்து நிற்பார்கள்.

இதற்குக் கீழே இப்படி ஏதாவது வசனம் இருக்கும்.

ஆண்மைக் குறைபாடா? பாலியல் வீரியமின்மையா? இரவு ஸ்கலிதமா... எனத் தொடங்கும்.

இப்படித் தினம் எத்தனை விளம்பரங்கள் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில்!

விளம்பரங்களைப் பார்த்து ஏமாந்து பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை இழந்த அப்பாவிகள் ஏராளம்.

காரணம் ஆண்மைக் குறைபாடு என்பது வெளியே பேச வெட்கப்படும் விடயமாக இருந்தது. இன்னமும் இருக்கிறது. அத்துடன் ஆணாதிக்க சமுதாயத்தில் ஆண்மைக் குறைபாடு பற்றி வெளியே பேசுவது அவனைச் சிறுமைப் படுத்துவதாகவே அவனால் எண்ணப்பட்டது. இதனைப் போலி வைத்தியர்களும், போலி மருந்துகளும் கபடத்தனமாகப் பயன்படுத்திக் கொண்டன.

ஆனாலும் வயக்ராவின் வருகை இந்த பாரம்பரிய இறுக்கத்தைத் தளர்த்தி ஓரளவு வெளிப்படையாக பேச வைத்திருப்பதும் உண்மைதான்.

போலி வைத்தியர்களும் போலி மருந்துகளும் விளம்பரங்களின் துணையோடு சக்கைபோடு போட்டதற்கு இன்னுமொரு முக்கிய காரணம் மேலைத்தேய வைத்தியர்கள் இந்த விடயத்திலே ஆரம்பத்தில் போதிய அக்கறை காட்டாததுதான்.

அத்துடன் ஆண்மைக் குறைபாடு என்பது பெரும்பாலும் மனோவியலுடன் சம்பந்தப்பட்டது என அவர்கள் கருதியதும் மற்றுமொரு முக்கிய காரணமாகும். சிக்மண்ட் ஃப்ரெய்டை தவறாக விளங்கிக்கொண்டதே இதன் அடிப்படையாகும்.

இந்நோய் ஆரம்பத்தில் Impotance 'ஆண்மையின்மை', 'வீரியமின்மை' என்றே மருத்துவத்தில் குறிப்பிட்டனர். ஆனால் இப்பொழுது இதனை Erectile dysfunction 'விறைப்படைதல் குறைபாடு' என்றே சொல்கிறார்கள்.

வெளியே பேச கூச்சப்பட்ட, அல்லது பேசுவதற்கு தன்மானம் இடம்கொடாத இப்பிரச்சினை உண்மையில் 10 வீத ஆண்களைப் பீடிக்கிறது.

இந்நோய் பற்றிய இன்னுமொரு தவறான எண்ணமும் பரவலாக இருக்கிறது. இப்பிரச்சினை உள்ளவர்களின் ஆண்குறி அடியோடு விறைப்படைவதில்லை என்றே பலரும் எண்ணுகிறார்கள். உண்மை அதுவல்ல.

இக்குறைபாடு உள்ளவர்களில் பெரும்பாலானவர்களுக்கு மற்றவர்களைப் போல பாலுறவில் நாட்டம் இருக்கும். அத்துடன் அந்நேரத்தில் ஆண்குறி விறைப்படையவும் செய்யும். ஆனால் அவர்களின் விறைப்பு போதிய உறுதியாக இருப்பதில்லை என்பதால் உள்நுழைவதில் பிரச்சினை இருக்கும். இதனால்தான் இப்பொழுது இதற்கு 'விறைப்படைதல் குறைபாடு' என்ற சொல்லை மருத்துவத்தில் பயன்படுத்துகிறார்கள்.

### மனம் முக்கிய காரணமல்ல...

முன்பே குறிப்பிட்டது போல இக்குறைபாட்டிற்கு மனம் ஒரு முக்கிய காரணம் அல்ல.



80 - 90 வீதம் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு ஆண்மையின்மைக்கு காரணம் உள்ளத்தில் அல்ல உடலில்தான் இருக்கிறது.

இன்றுள்ள நவீன வைத்திய ஆய்வு வசதிகளைக் கொண்டு இப்பிரச்சினை உள்ளவர்களில் பெரும்பாலானவைகளின் நிலைக்கான காரணத்தைக் கண்டுபிடிக்கவும் வைத்தியம் செய்து குணமாக்கவும் முடியும்.

இப்பிரச்சினை எந்த ஆணையும் பாதிக்கக் கூடும். முக்கியமாக 13 வயது முதல் 90 வயது வரையான காலகட்டத்தில் அதாவது பாலியல் ரீதியாகச் செயற்படக் கூடிய எந்த வயதிலும் இந்நோய்க் குறைபாடு ஏற்படக்கூடும்.

### காரணங்கள் என்ன?

ஆண்குறி சரியாக விறைப்படைவதற்கு பல்வேறு அடிப்படை விடயங்கள் சரியாக அமையவும் இயங்கவும் வேண்டும். அவ்வாறு அமையாவிட்டால் ஆண்குறி விறைப்படைவதிலும் அதனைத் தொடர்ந்து பேணுவதிலும் பல்வேறு சிக்கல்கள் எழக் கூடும்.

பாலியல் ரீதியாக ஒருவர் தூண்டப்படும் போது அவரது மூளையில் தோன்றும் உணர்வுகள் உடனடியாக உறுப்பிற்கு செய்தியாக அனுப்பப்படுகிறது. அவ்வுறுப்பிலுள்ள நுணுக்கமானதும் சிக்கலானதுமான நரம்பு வலைகளால் இது செயற்படுத்தப்படுகிறது. செய்தி கிடைத்ததும் ஆணுறுப்பிற்கு அதிகளவிலான இரத்தம் போய்ச் சேர்கிறது. அங்கு போகின்ற இரத்தம் உடனடியாக உடலில் ஏனைய பாகங்களுக்கு திரும்பிச் செல்லாமல் சிறு சிறு அறைகளில் தங்கி நிற்பதே விறைப்பை ஏற்படுத்துகிறது. விந்து வெளியேறியதும் அந்த இரத்தம் உறுப்பிலிருந்து வெளியேறும். அப்பொழுது விறைப்பு தளர்ந்துவிடும்.

எனவே இதைச் சரியான முறையில் இயக்குவதற்கு குறியிலுள்ள நரம்புகள், நாடி, நாளம் எனப் பலவும் செம்மையாக இயங்க வேண்டும். அவை செம்மையாக இயங்காவிட்டால் "விறைத்தல் குறைபாடு" ஏற்படும்.

இவ்வாறு விறைத்தலுக்கு பல்வேறு அடிப்படைகள் தேவையாக இருப்பதால் அவற்றில் ஏதாவது ஒன்று பாதிப்படைந்திருந்தாலும் வீரியம் பாதிப்படையும். எனவே அடிப்படையான காரணத்தை மருத்துவப் பரிசோதனை மூலமாக கண்டறிந்து அதற்கேற்ப சிகிச்சை அளிக்க வேண்டும். எனவே சிகிச்சையானது காரணத்திற்கேற்ப பல்வேறு வகைப்படும். மருந்துகள், மாத்திரைகள், சத்திரசிகிச்சை, உதவக்கூடிய சாதனங்கள் என வேறுபடும்.

விளம்பரங்களில் வரும் மருந்துகள் இந்த அடிப்படைகளை கவனத்தில் எடுக்காமல் 'சர்வரோக நிவாரணி' போல் காட்டிக்கொள்கின்றன. எனவே இவற்றால் எந்தவித பிரயோசனமும் கிடையாது. எனினும் மனோவியல் ரீதியாக பாதிப்படைந்துள்ள ஒருவருக்கு இது சில வேளைகளில் ஒத்தடம் போல உதவக் கூடும் என்பதையும் மறுப்பதற்கில்லை. பெரும்பாலானவர்களுக்கு எந்தவித உதவியும் கிடையாது.

போலிகளைக் கண்டு ஏமாறாது, விஞ்ஞான ரீதியாகச் சிந்திக்கவும் செயற்படவும் பழகிக் கொள்ளுங்கள்.

இவை பற்றிய மேலதிக விபரங்கள் அடுத்த இதழில். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கொட்டியாரக் கதைகள்
*(சிறுகதைத் தொகுதி)*
நூலாசிரியர் : வ.அ. இராசரெத்தினம்
வெளியீடு: மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்
விலை: 120 பக்கம்: 143




மூதூரின் மூத்த எழுத்தாளர் வ.அ. இராசரெத்தினம் அவர்களின் சிறுகதைகளை தொகுப்பாக்கி நூலுருவில் வெளியிட ஊக்கமளித்த 'மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்'தின் முயற்சியால் உருவாகியது கொட்டியாரக் கதைகள் என்ற இந் நூல்.

கொழுகொம்பு, கிரௌஞ்சப் பறவைகள், ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது, மண்ணிற் சமைந்த மனிதர்கள் ஆகிய நாவல்களையும் தோணி, ஒரு காவியம் நிறைவு பெறுகிறது ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் பல கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள் போன்ற ஆக்கங்கள் பலவற்றையும் வெளிக் கொணர்ந்தவர் நூலாசிரியர். 'மண்ணிற் சமைந்த மனிதர்கள்' நாவலும் 'தோணி' சிறுகதைத் தொகுதியும் அகில இலங்கை சாகித்ய பரிசு பெற்றவை.

'கொட்டியாரக் கதைகள்' என்ற இச் சிறுகதைத் தொகுப்பின் சிறுகதைகள் மூதூர் பிரதேச வாழ்நிலையை வெளிப்படுத்துவன. 'கொட்டியாரப்பற்று' என்பது மூதூர் பிரதேசத்துக்கும் 'கொட்டியாரம்' என்பது மூதூர் நகருக்கும் முன்னைநாளில் வழக்கிலிருந்த பெயர் என்ற தகவலைத் தருகிறார் ஆசிரியர். 1952ம் ஆண்டுமுதல் 1997வரை அவர் எழுதிய 16 சிறுகதைகள் இதில் அடங்கியுள்ளன.

நூலாசிரியர் குறிப்பிடுவதைப் போல, இன்னும் சில நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வரும் மாணவர்களுக்கு இருபதாம் நூற்றாண்டின் பிற் கூறுகளில் 'கொட்டியாரப்பற்று' எப்படியிருந்தது என்பதை இக் கதைகளிலிருந்து தெரிந்துகொள்ளக் கூடியதாய் இருக்கும். இது தனது வெற்றியென்கிறார் ஆசிரியர்.

கலவர அனர்த்தங்களால் செயற்பாடற்றிருந்த மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் அண்மையில் புத்துயிர் பெற்று மூதூர் கலையிலக்கியவாதிகளின் நூல்களை வெளியிட்டு வருகிறார்கள். அவர்கள் அண்மையில் இந் நூலாசிரியர் வ.அ. இராசரெத்தினம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நீலன் திருச்செல்வம்
தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உரைகள்
மொழிபெயர்ப்பு : கோலன், மாதவன்
வெளியீடு: இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம்

1983ல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திருநாவுக்கரசு இறந்தபின் அவரின் இடத்துக்கு நியமிக்கப்பட்டதன் மூலம் தனது முதல் பாராளுமன்ற பிரவேசத்தை மேற்கொண்ட கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் மீண்டும் 1994ல் கூட்டணியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற அங்கத்துவத்தைப் பெற்றவர். அவர் 1999 ஜுலை 29ம் திகதியன்று படுகொலை செய்யப்படும்வரை தற்போதய பாராளுமன்றத்தில் பங்காற்றினார்.

இப் பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய முக்கியத்துவம் வாய்ந்த உரைகளைத் தொகுத்து நூலுருவில் வெளிக் கொணர்ந்துள்ளார்கள் இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தினர்.

நீலன் திருச்செல்வம் இலங்கை வரலாற்றில் இருண்ட தசாப்தங்களில் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர். இக் காலத்தில் வரலாற்றாய்வாளர்களும், அரசியல் விமர்சகர்கள், மற்றும் மாணவர்களும் எடுத்து நோக்கவேண்டிய பல முக்கியத்துவம் வாய்ந்த உரைகளை ஆற்றியுள்ளார். பல்வேறு நிகழ்வுகளையும், சிக்கல்களையும் அவர் விவாதித்துள்ளார். பல நாட்டு உதாரணங்களை எடுத்தாண்டுள்ளார். அரசியல் சட்ட நுணுக்கங்கள் பலவற்றைத் தெளிவுபடுத்தியுள்ளார்.




நீலனின் ஆளுமையை மட்டுமல்ல, நாம் எடுத்து நோக்க வேண்டிய பல்வேறு விடயதானங்களையும் வெளிக்கொணர்வதாக அமைந்துள்ள அவரது பாராளுமன்ற உரைகளை நூலுருவாக்கி, தமிழில் மொழிபெயர்த்து வழங்கியது ஒரு பயனுள்ள முயற்சி.

நீலன் இலங்கையில் மட்டுமல்ல பல்வேறு சர்வதேச நாடுகளிலும் அரசியலமைப்பு சட்ட வரைவுகளிலும், தேர்தல் கண்காணிப்பு, மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகள் போன்றவற்றிலும் காத்திரமான பங்களிப்புச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கந்தன் கருணை
*(ஓரங்க நாடகம்)*
நூலாசிரியர் : என்.கே. ரகுநாதன்



1969ம் ஆண்டில் எழுதப்பட்ட இந்த நாடகம் அக்காலத்திலேயே மிகவும் பிரசித்தமாகப் பேசப் பெற்றது. கோலோச்சிய சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான சக்திவாய்ந்த நாடகமாக வெற்றிகரமாக மேடையேற்றப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேச சாதிப் போராட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட இந் நாடகம் முதலில் அம்பலத்தாடிகள் நாடகக் குழுவினரால் மேடையேற்றப்பட்டு பின்னர் பல்வேறு நாடகக் குழுவினராலும் இலங்கையின் பல பாகங்களில் மட்டுமல்ல அண்மையில் சென்னையிலும் மேடையேற்றப்பட்டது.

"பூலோகத்தில் ஜனநாயகம் என்ற பெயரில் ஒருவித மாய ஆட்சி நடைபெற்று வருகிறது. சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கும் சமத்துவம், சமஅந்தஸ்து என்று சொல்லிக்கொண்டு, கண்ணாமூச்சி காட்ட வல்லது இந்த அரசுமுறை. ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் குறைகளுக்காகக் கிளர்ந்தெழும்போது, அக் குறைகளைத் தீர்க்க முயல்வதாகப் பாசாங்கு காட்டிக்கொள்கிறது. ஆனால் நடைமுறையில் அது பிற்போக்குவாதிகளையே பாதுகாக்கிறது...." என நாரதரின் பாத்திரத்தினூடாக யாழ்ப்பாணத்தின் சாதி ஒடுக்குமுறையைச் சுட்டிக்காட்டியதுடன், இறுதியாக, முருகன் தனது வேலை ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் போராட்டத்துக்காக வழங்குவதாகச் சித்தரிக்கிறது. இது அக்காலத்தில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்த புரட்சிகரக் கருத்தாக இருந்தது.

'சாதி ஒழிந்துவிட்டது' என சிலர் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் 'துப்பாக்கி நிழலில் சாதி மறைந்து கிடக்கிறது, ஒழிந்துவிடவில்லை' எனச் சுட்டிக்காட்டி, எதிர்கால சமுதாயம் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும் என ஆதங்கப்படுகிறார் ஆசிரியர்.

**நூலாய்வு : மாணிக்கவாசகன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து

**பாதுகாப்பையும் உயர்ந்த வருவாயையும் வழங்கும்**

# நீண்ட கால வைப்புச் சான்றிதழ்கள்

## 4 வருடகால வைப்பிற்கு வருடாந்தம் 15%

## 5 வருடகால வைப்பிற்கு வருடாந்தம் 16%

(வருடாந்த வட்டி வீதம் 12.5%)

### பெறும் நன்மைகள்:

- நிறுத்தி வைக்கும் வரி இல்லை.
- முத்திரை வரி இல்லை.
- உயர்ந்த வட்டி வீதம்
- படிவங்கள் நிரப்புவதற்கில்லை. எனவே முற்றிலும் இரகசியமானது.
- முதலீட்டுக் கடன்களுக்குப் பிணையாகப் பயன்படுத்தலாம்.

| காலம் | 4 வருடங்கள் | 5 வருடங்கள் |
|---|---|---|
| வட்டி வீதம் | 15% வருடாந்த வட்டி | 16% வருடாந்த வட்டி |
| தொகை | ரூ. 62,500/- | ரூ. 55,555/- |

**முதிர்வு நிலையில் பெறுமானம் : ரூபாய் 100,000/-**

இவை அனைத்தும், இன்னும் நூறு வருட வரலாற்றுறுதியும் பாரம்பரியமும் மிக்க ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவையும் உங்களுக்காக காத்திருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளருடன்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

## ஹற்றன் நஷனல் வங்கி

*உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி*

தலைமை அலுவலகம் : 10, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: 421885-7, 337501-5 பக்ஸ்: 320745

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்